23 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com 416-282-4978



FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969



RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



நதி 23 | பாலம் 14 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 15, 2013


# கனேடிய மத்திய அரசின் அமைச்சரவையில் மாற்றம்

கனேடிய பிரதமர் தனது அமைச்சரவையை ஜுலை 15, 2013 இல் மாற்றி அமைத்துள்ளார். 8 புதியவர்களுக்கு அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது அதில் நால்வர் பெண்கள்.



தமிழ் மக்களுக்கு பரிச்சயமானவரும் இலங்கைக்கு சென்று வந்தவருமான ஏஜெக்ஸ் - பிக்கறிங் நாடாளுமன்ற உறுப்பினரான Chris Alexander தற்போது கனேடிய குடியுரிமை, குடிவரவு மற்றும் பல்கலாச்சார அமைச்சராகிறார். இவர் Jason Kenney இன் இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். Jason Kenney இற்கு புதிதாக உருவாக்கப்பட்ட சமூக அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது. இவ் அமைச்சு முன்பு மனிதவளம் மற்றும் தொழிற்கல்வி அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்பட்டது. Rob Nicholson பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். முந்திய பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் மக்கேயிற்கு நீதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஸ்ரீபன் காப்பரின் 38 பேரைக்கொண்ட புதிய அமைச்சரவையில் 12 பெண்கள் அமைச்சராக உள்ளனர். புதிய நான்கு பெண் அமைச்சர்களும் பின்வருமாறு.

Shelly Glover - Heritage and official languages minister
Dr. Kellie Leitch - Labour and status of women minister.
Kerry-Lynne Findly - National revenue minister
Michelle Rempel - Western economic diversification state minister.

## ஸ்காபரோவிற்கு நிலக்கீழ் தொடர்வண்டிப்பாதை

ரொறொன்ரோ நகர முதல்வர் றொப் போர்ட் ஸ்காபரோவிற்கு நிலக்கீழ் தொடர்வண்டிப்பாதை அமைக்க இருக்கும் திட்டத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

கெனடி தொடர்வண்டி நிலையத்தில் இருந்து ஸ்காபரோவிற்கு தற்போது SRT (Scarborough Rapid Transit) தொடர்வண்டி சேவை நடைபெற்று வருகிறது. இதை நிலத்தின்மேல் செல்லும் இன்னொரு தொடர்வண்டி (LRT எனப்படும் light rail train) பாதை மூலம் பிரதியீடு செய்ய Metrolinx என்ற நிறுவனம் மாகாண அரசிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து இருந்தது. ஆனால் றொப் போர்ட் ஸ்காபரோ மக்கள் நில க்கீழ் தொடர்வண்டி சேவையையே விரும்புகிறார்கள். அதனால், தான் அதற்கு தனது ஆதரவை தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

LRT பாதையை அமைக்க $1.1 பில்லியன் டொலர் தேவைப்படுகிறது. நிலக்கீழ் தொடர்வண்டிப்பாதையை அமைக்க $2.3 பில்லியன் டொலர் தேவைப்படுகிறது. Metrolinx நிறுவனம் ரொறொன்ரோ மாநாகரசபையை தனது LRT திட்டத்திற்கான ஆதரவை ஒகஸ்ட் 02, 2013 இற்கு முன்னர் தெரிவிக்கும்படி கேட்டுள்ளது. இது விடயமாக விவாதிப்பதற்கு ரொறொன்ரோ மாநகரசபை யூலை 16 இல் கூடுகின்றது.

தற்போதைய SRT தொடர்வண்டி சேவை 2015 உடன் நிறுத்தப்பட உள்ளது. புதிய LRT சேவை 2020 இல் தான் நிர்மாணிக்கப்பட்டு முடிவதாயும் அதுவரை பொதுமக்கள் பேரூந்தில் தான் கெனடி நிலக்கீழ் தொடர்வண்டி நிலையம் வரை செல்லவேண்டும்.

புதிய நிலக்கீழ் தொடர்வண்டி பாதை அமைப்பது என்றால் அது 2023 இல் தான் நிர்மாணிக்கப்பட்டு முடிவடையும். றொப் போர்ட்டின் திட்டப்படி தற்போதைய SRT தொடர்வண்டி சேவை 2023 ஆம் ஆண்டுவரை பாவனைக்கு இருக்கக்கூடியதாக புனரமைக்கப்படும்.

றொப் போர்ட் தனது புதிய உதவி மேயரும், TTC இன் தலைவர் Karen Stinz உம் தனது நிலக்கீழ் தொடர்வண்டிப்பாதை திட்டத்திற்கே

தொடர்ச்சி 02ஆம் பக்கம்


Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி
TOYOTA MARKVILLE
905.294.8100

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221






இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
• அவசரகால பல் வைத்திய சேவைகள்
• பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
• பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
• பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
• முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
• சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5, Markham & Eglinton, Tel:416.264.3232
3351Markham Rd., #129, Markham & Steeles, Tel: 416.609.2022








# கனேடிய மத்திய...

**01ஆம் பக்கத்தொடர்ச்சி**

ஆதரவு தருகிறார்கள் என்று கூறுகிறார். றொப் போர்ட் தனது திட்டத்திற்கு மாகாண அரசு $1.8 பில்லியன் தரவேண்டும் என்றும் அதேபோல் மத்திய அரசும் பணஉதவி செய்யவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.



மத்திய அரசின் நிதி அமைச்சர் Jim Flaherty கடந்த ஜுலை 12, 2013 இல் தெரிவிக்கையில் மத்திய அரசு ரொறொன்ரோவின் நிலக்கீழ் தொடர்வண்டி பாதைத்திட்டத்திற்கு பண உதவி செய்யும் என்று கூறியுள்ளார். ஆனால் அவர் எந்த அளவு பண உதவி என்று குறிப்பிடவில்லை. றொப் போர்ட் ஜுலை 15, 2013 இல் மாகாண அரசின் போக்குவரத்து அமைச்சர் Glen Murry யை சந்தித்து மாகாண அரசை $1.8 பில்லியன் பண உதவி செய்யவேண்டும் எனக்கேட்க இருக்கிறார்.

LRT தொடர்வண்டிப்பாதை 7 தொடர்வண்டி நிலையங்களையும் 9.9 கி.மீ நீளத்தையும் உடையது. நிலக்கீழ் தொடர்வண்டி பாதை 3 தொடர்வண்டி நிலையங்களையும் 7.6 கி.மீ நீளத்தையும் உடையது. LRT தொடர்வண்டி பிரயாணம் 15 நிமிடங்களை எடுக்கும், ஆனால் நிலக்கீழ் தொடர்வண்டி பிரயாணம் 10 நிமிடங்களை மட்டும் எடுப்பதோடு இல்லாமல் கெனடி தொடர்வண்டி நிலையத்தில் பிரயாணிகள் இறங்கி மாறவேண்டிய தேவையையும் தவிர்க்கின்றது. LRT தொடர்வண்டி பாதையோ நிலக்கீழ் தொடர்வண்டிப் பாதையோ மோட்டார் வாகன பாதைகளினூடாக செல்லமாட்டாது. இதனால் மோட்டார் வாகன போக்குவரத்திற்கு எந்த ஒரு இடஞ்சலும் வரமாட்டாது.

புதிய தொடர்வண்டி பாதைக்காக ரொறொன்ரோ மக்களின் சொத்து வரியை 2.4% மட்டில் படிப்படியாக உயர்த்துமாறு நகர அலுவலகர் Joe Pennachetti இன் பிரேரணை ஒன்றிற்கு பதிலளித்த றொப் போர்ட் தான் அவ்வாறு அதிக அளவு சொத்து வரி அதிகரிப்பை ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஆனால் சிறிதளவு சொத்து வரி அதிகரிப்பு தவிர்க்க முடியாது என்றார்.

றொப் போர்ட் திட்டத்தின்படி சொத்து வரி 2015 இல் இருந்து ஒவ்வொரு வருடமும் 0.25% ஆக 4 வருடங்களுக்கு அதிகரிக்கப்படும். இதன் மூலம் ரொறொன்ரோ வீட்டு உரிமையாளர் தமது சொத்துவரியில் வருடம் ஒன்றுக்கு 5 டொலர் அதிகரிப்பையே உணருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# குவிபெக் இல் தொடர் வண்டி விபத்து

மொன்றியல் நகரில் இருந்து 250 கி.மீ கிழக்கில் உள்ள Lac-Megantic என்ற கிராமத்தில் தொடர்வண்டி விபத்து யூலை 06, 2013 அதிகாலை 1:15 மணியளவில் நடைபெற்றது. இவ்விபத்தில் 50 பேர் வரையில் இறந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதுவரை 35 பேருடைய இறந்த உடல்கள் எடுக்கப்பட்டுள்ளன. 30 இற்கு மேற்பட்ட கட்டிடங்கள் முற்றாக சேதம் அடைந்துள்ளன. இறந்த சிலரது உடல்கள் முற்றாகவே எரிந்து காற்றுடன் கலந்திருக்கலாம் (Vaporized) என சந்தேகிக்கப்படுகிறது என்று CBC செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க எல்லையில் இருந்து 35 கி.மீ தூரத்தில் இருக்கும் இந்த கிராமத்தில் 6,000 பேர் வாழ்கின்றனர். இந்த நகரத்தினூடாக அமெரிக்க நிறுவனமான Rail World இற்கு சொந்தமான தொடர்வண்டி பாதை செல்கிறது. அதில் யூலை 05, 2013 இல் 73 எரிபொருள் கொள்கலன்களை இழுத்துக் கொண்டு ஐந்து இயந்திரங்களுடன் Rail World இற்கு சொந்தமான MMA எனப்படும் நிறுவனத்தின் தொடர்வண்டி வந்தது. இதை Lac-Megantic இல் இருந்து 11 கி.மீ தூரத்தில் அதன் ஓட்டுனர் இரவு 11:30 மணியளவில் நிறுத்தி விட்டு தனது அன்றைய வேலை முடிவடைந்ததால் அவர் அருகில் உள்ள விடுதிக்கு ஓய்வு எடுக்கச் சென்று விட்டார். அத்தொடர்வண்டியை அடுத்த நாள் காலை இன்னொரு ஓட்டுனர் வந்து எடுத்துச் செல்வதாக இருந்தது. இத்தொடர்வண்டியில் சுத்திகரிக்கப்பட்டாத மசகு எண்ணெய் அமெரிக்காவில் உள்ள New Town, North Dakota இல் இருந்து Saint John, New Brunswick இல் உள்ள Irving Oil Refinery நிறுவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதன் 73 எரிபொருள் கொள்கலன்களில் 72 இல் சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெய் இருந்தது. ஒவ்வொரு கொள்கலன்களும் 113,000 லீற்றர் மசகு எண்ணெயை கொண்டிருந்தன.



தொடர்வண்டி நிற்பாட்டப்பட்டிருந்த இடம் உயரமான பகுதியாக இருந்தது. அதன் ஓட்டுனர் தொடர்வண்டிகளுக்கு சரியான முறையில் தடுப்புக்களை பிரயோகிக்கவில்லை என தற்போது சந்தேகிக்கப்படுகிறது. இரவு ஒருமணியளவில் தொடர்வண்டி தானாகவே பின்னோக்கி வரத்தொடங்கியது. அது உயரமான இடத்தில் இருந்து மிகவும் வேகமாக வந்து Lac-Megantic கிராமத்திற்கு அருகில் உள்ள தொடர்வண்டி பாதை வளைவில் தடம்புரண்டது. இதனால் மசகு எண்ணெயை கொண்ட ஐந்து கொள்கலன்கள் வெடித்து தீப்பற்றிக் கொண்டது.

தொடர்வண்டி உயரத்தில் இருந்து வரும்போது மணிக்கு 63 கி.மீ வேகத்தில் வந்ததாக கணிக்கப்படுகிறது. அது அவ்வேகத்திலேயே மணிக்கு 16 கி.மீ வேகத்தில் மட்டுமே செல்ல வேண்டிய தொடர் வண்டிப்பாதை வளைவில் திரும்பியதாலேயே இந்த அனர்த்தம்

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.


Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலை-நகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. ,
   5215 Finch Ave. E. #201,
   Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: www.vlambaram.com
   www.tamilvanakkam.com




# கனடா ஒரு கண்ணோட்டம்

## கடந்த இதழ் தொடர்ச்சி

கனடா தேர்தல் திணைக்களத்து இலவச தொலைபேசி இலக்கத்தை (1 800 463 6868) பயன்படுத்தி, அல்லது நீங்கள் இணையவச-தி படைத்தவர் என்றால், அதன் இணையத் தளத்தை (www.elections.ca) அணுகி உங்கள் மக்களவை உறுப்பினரைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

உங்கள் மக்களவை உறுப்பினருக்கு உங்கள் தேர்தல்தொகுதியில் ஓர் அலுவலகம் உண்டு. நீங்கள் பின்வரும் முகவரியைப் பயன்படுத்தி உங்கள் மக்களவை உறுப்பினருக்கு ஒரு கடிதமும் எழுதி அனுப்பலாம்:

House of Commons
Name of your member of
The House of Commons
Ottawa, Ontario
K1A 0A6

நீங்கள் மக்களவைக்கு அனுப்பும் கடிதத்துக்கு முத்திரை ஒட்டத் தேவையில்லை.

### அரசியல் கட்சிகள்

கூட்டாட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுள் அநேகர் ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆட்சி புரியும் விதம் குறித்து ஒரே எண்ணம் கொண்டவர்கள் ஒரே அரசியல் கட்சியினராய் அமைவார்கள். சில அரசியல் கட்சிகள் நீண்ட காலமாக இயங்கி வருகின்றன. எனினும் கனடியர்கள் எந்த வேளையிலும் புதிய அரசியல் கட்சிகளை அமைக்கலாம். அரசியல் கட்சி உறுப்பினர்கள் கூடித் தமது எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் ஆராய்வார்கள். தமது வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், தாம் மேற்கொள்ள விரும்பும் அலுவல்களுக்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டுவார்கள். அவர்கள் முன்வைக்கும் திட்டம் கட்சியின் அலுவல் திட்டம் எனப்படும்.




*வாக்குரிமை கனடியப் பிரசையின் சலுகையும் பொறுப்பும் ஆகும்.*

தேசிய தேர்வாளர் இடாப்பிலிருந்தே வாக்காளர் நிரல்கள் தயாரிக்கப்படுகின்றன.

அரசியல் கட்சி உறுப்பினர்கள் புரியும் உதவிகள்:

- கட்சியின் அலுவல் திட்டத்தை தீர்மானித்தல்,
- கட்சியின் தலைவரைத் தெரிதல்,
- கட்சியின் வேட்பாளர்களைத் தெரிதல்,
- தேர்தலின்பொழுது வேட்பாளர்களுக்காக பிரசாரம் செய்தல்

ஓர் அரசியல் கட்சியையும் சேராத வேட்பாளர்கள் சுயேச்சை வேட்பாளர்கள் எனப்படுவர்.

### வாக்களிப்பு

வாக்குரிமை கனடியப் பிரசையின் சலுகையும் பொறுப்பும் ஆகும். கனடா தேர்தல் திணைக்களம் கட்சி சாரா அமைப்பாகும். கூட்டாட்சித் தேர்தல்களையும் வாக்கெடுப்பு களையும் நடத்துவது அதன் பொறுப்பு.

பின்வரும் தகுதி உடையவர்கள் கூட்டாட்சித் தேர்தலில் அல்லது வாக்கெடுப்பில் வாக்களிக்கலாம்:

- கனடியக் குடியுரிமை
- வாக்களிக்கும் நாளில் ஆகக் குறைந்தது 18 வயது
- வாக்காளர் நிரலில் பதிவுடைமை

கூட்டாட்சித் தேர்தல்களிலும் வாக்கெடுப்பு களிலும் பயன்படுத்தப்படும் வாக்காளர் நிரல்கள் தேசிய தேர்வாளர் இடாப்பிலிருந்து தயாரிக்கப்படுபவை. இது கூட்டாட்சித் தேர்தல்களிலும் வாக்கெடுப்புகளிலும் வாக்களிக்கும் தகுதியுடைய 18 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் கொண்ட கனடியப் பிரசைகளின் தரவுகள் கொண்ட இடாப்பு - கணினி வாயிலாகத் திரட்டப்படும் தரவுகள் கொண்ட இடாப்பு.

நீங்கள் குடியுரிமை பெற்றதும் வாக்களிக்கும் தகுதி அடைகிறீர்கள்.
உங்கள் பெயர் தேசிய தேர்வாளர் இடாப்பில் இடம்பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும்.

தேர்தல் அறிவிப்பு வெளியாகியதும் வாக்காளர் தகவல் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்வீர்கள்.

உங்கள் வாக்கு இரகசியமானது.

வாக்களிப்பது பற்றிய மேலதிக விபரங்களுக்கு கனடா தேர்தல் திணைக்களத்தின் இணையத் தளத்தை அணுகவும்: www.elections.ca

தேசிய தேர்வாளர் இடாப்பில் தேர்வாளர் ஒவ்வொருவருடைய பெயரும் முகவரியும் பாலும் பிறந்த திகதியும் இடம்பெற்றுள்ளன. கனடா குடியுரிமை-குடிவரவு அமைச்சு உட்பட இன்றைய தரவுத் தரப்புகள் ஊடாக தேசிய தேர்வாளர் இடாப்பினை கனடா தேர்தல் திணைக்களம் புதுப்பித்து வருகிறது.

நீங்கள் குடியுரிமை பெற்றதும் உங்கள் பெயரைத் தேசிய தேர்வாளர் இடாப்பில் சேர்ப்பது முக்கியம். அதன் மூலம் நீங்கள் வாக்களிக்கும் தகுதி அடைகிறீர்கள்.

நீங்கள் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் பொழுது, உங்கள் விண்ணப்பப் படிவத்தில் சம்பந்தப்பட்ட கூட்டில் புள்ளடியிட்டு, உங்கள் பெயர், முகவரி, பால், பிறந்த திகதி என்ப வற்றைக் கனடா தேர்தல் திணைக்களத்துக்கு அனுப்புவதற்கு நீங்கள் இணக்கம் தெரிவிக்கலாம்.

நீங்கள் சம்பந்தப்பட்ட கூட்டில் புள்ளடியிட்டு, இணக்கம் தெரிவித்தால் மாத்திரமே மேற்படி விபரங்கள் கனடா தேர்தல் திணைக்களத் துக்கு அனுப்பப்பட்டு, தேசிய தேர்வாளர் இடாப்பில் சேர்க்கப்படும். அவை தேர்தல் நோக்கங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படும்.

தகுதியுடைய கனடியர்கள் தாம் கூட்டாட்சி அரசாங்கத்துக்கு அனுப்பும் வருமான வரிப் படிவத்திலும் தம்மைத் தேசிய தேர்வாளர் இடாப்பில் சேர்ப்பதற்கு இணக்கம் தெரிவிக்கலாம்.
தேர்தல் அறிவிப்பு வெளியானதும், தேசிய தேர்வாளர் இடாப்பில் இடம்பெற்ற தேர்வாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்காளர் தகவல் அட்டையை கனடா தேர்தல் திணைக்களம் அனுப்பி வைக்கும். வாக்களிக்கும் திகதியும் இடமும் அந்த அட்டையில் பொறிக்கப் பட்டிருக்கும். உங்களுக்கு ஒரு மொழி பெயர்ப்பாளர் அல்லது மற்றும் பிற தனி வசதிகள் தேவைப்பட்டால் நீங்கள் பயன்படுத்தக்கூடிய இலக்கமும் அதில் காணப்படும்.

நீங்கள் தேசிய தேர்வாளர் இடாப்பில் இடம்பெற இணக்கம் தெரிவிக்காவிட்டாலும் அல்லது வாக்காளர் தகவல் அட்டையைப் பெற்றுக்கொள்ளாவிட்டாலும், தேர்தல் நாள் வரையிலும் உங்களை வாக்காளர் நிரலில் சேர்க்கலாம். சேர்க்கும் விதம் பற்றிய விபரங்களுக்கு கனடா தேர்தல் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம். அதன் இலவச தொலைபேசி இலக்கம்: 1 800 463 6868. அல்லது அதன் இணையத் தளத்தை அணுகலாம்: www.elections.ca

தேர்தல் நாளில் அல்லது முன்கூட்டியே வாக்களிப்பதற்கு உங்கள் வாக்காளர் தகவல் அட்டையில் பொறிக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லவும். ஒரு தேர்தல் அதிகாரி உங்களிடம் ஒரு வாக்குச் சீட்டைத்

**தொடர்ச்சி 09ஆம் பக்கம்**

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing


- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# "ஏன் இந்தக் கொலைவெறி"

# நம்மவரு நம்மாழ்வார்



## சத்குரு வாசுதேவ்

ஊர்வன, பறப்பன, முட்டை இட்டுக் குஞ்சு பொரிப்பன, குட்டி போட்டுப் பால் கொடுப்பன என்று அழகாக வகைப்படுத்திய மனிதன், அவற்றுக்கும் தனக்கும் உள்ள தொடர்பினை உணர்ந்ததாகத் தெரியவில்லை. மனிதனின் கொலைவெறி ஆட்டத்தால் விளைந்த அவலங்களை நம்மாழ்வார் இங்கே விவரிக்கிறார்.

## நம்மாழ்வார்:

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் நடந்தது இது. சாலை ஓரங்களில் 'எல்ம்' மரங்கள் வளர்ந்திருந்தன. அவற்றின் இலைகளை ஜப்பான் வண்டுகள் தின்றன. மரங்களின் அழகு ஜப்பான் வண்டுகளால் குறைந்துபோனதாகக் கருதிய விஞ்ஞானிகள், D.D.T என்ற உயிர்க் கொல்லி நச்சுக் கரைசலை விமானத்தின் மூலம் தெளித்தார்கள். வண்டுகள் செத்துப் போயின. ஆனால், நஞ்சு அங்கு நின்று போகவில்லை.

D.D.T நஞ்சு படிந்த இலைகள் மண்ணில் விழுந்தபோது, அவற்றை மண்புழு உண்டு மடிந்து போயின. போதிய அளவு நஞ்சு உண்ணாத புழுவின் இயக்கம் தொய்ந்தது. நஞ்சு உண்ட மண் புழுவைத் தின்ற ராபின் பறவைகள் மாண்டன. குறைந்த நஞ்சு உண்ட ராபின்கள் கூடு கட்டவில்லை. கூடு கட்டிய அனைத்தும் முட்டை இடவில்லை. இட்ட முட்டைகள் அனைத்தும் குஞ்சாக மாறவில்லை. ராபின் பறவைகள் மலடாகிப் போனதை உணர்ந்தார்கள்.

தெளித்த நச்சின் ஒரு பகுதி ஆற்று நீரில் கலந்தது. மீன்கள் மெதுவாக நகர்ந்தன. மீன்களைத் தின்ற வழுக்கைத் தலைக் கழுகு (அமெரிக்காவின் தேசியப் பறவை) மலடாகிப்போனது. இதனைப் புத்தகமாக வடித்துள்ளார் கடலியல் விஞ்ஞானி, ராச்சேல் கார்சன்.



ராபின் பறவை, வசந்தம் வரப்போவதைக் கட்டியம் கூறுபவை. அவை மடிந்து போனதால், வசந்தத்தை வரவேற்க ஆள் இல்லை. அதனால், தான் எழுதிய புத்தகத்துக்கு 'மௌன வசந்தம்' என்று பெயர் சூட்டினார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நாடு முழுவதும் இருந்த பச்சைத் தவளைகளைப் பிடித்து மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார்கள். பாம்புகளுக்குத் தீனி இல்லாது போயிற்று. பாம்புகள் ஊருக்குள் வந்தன. அங்குதான் சேமிக்கப்பட்ட தானியத்தைத் தின்று எலிகள் பெருகிக்கிடந்தன.

மேற்குத் தொடர்ச்சி மலையில் இருந்த காடுகளை அழித்துத் தேயிலைத் தோட்டம் போட்டார்கள். தனது தீவனம் குறைந்து போனதால் யானைகள், மனிதர்கள் பயிர் வைத்த கரும்புத் தோட்டங்களுக்கு வருகின்றன. யானைகள் ஊருக்குள் புகுந்து கலாட்டா செய்கின்றன என்று பத்திரிக்கைகள் செய்திகள் வெளியிடுகின்றன.

செடிகளைத் தின்னும் பூச்சிகளைப் பிற பூச்சிகளும் பறவைகளும் தின்னுகின்றன. தட்டான், சிலந்தி, குளவி, பொறிவண்டு போன்ற உயிரினங்களின் உணவு, தாவர உண்ணிகள். பயிரில் நஞ்சு தெளித்ததால் நன்மை செய்யும் உயிரினங்கள் அழிந்தன. அதனால் பயிர்களில் பூச்சிகளால் ஏற்படும் சேதம் அதிகரித்தது.

கீழைக் கடலில் உள்ள மாலைதீவு பகுதிக்கு, பணக்கார நாட்டவர் துப்பாக்கிகளுடன் உல்லாசப் பயணம் போனார்கள். அங்குள்ள மரங்களில் எடாடோ பறவை இருந்தது. அந்த அப்பாவிப் பறவைகளுக்கு மனிதர்கள் தங்களைச் சுட்டு, கறி சமைத்து உண்பார்கள் என்பது தெரியாது. அவை பயந்து, ஓடித் தப்பிக்க முயலவில்லை. அவ்வளவு பறவைகளையும் கொன்று தின்றார்கள்.

இப்போது அங்கு, அந்த மரங்களின் இனப் பெருக்கம் அடியோடு நின்றுபோனது. அதற்குக் காரணியாக இருந்த எடாடோ பறவையைத்தான் கொன்று தீர்த்து விட்டோமே. எடாடோ பறவையின் குடல் வழியாகப் புகுந்து வெளியேறுகிற மரத்தின் விதைகள் மட்டுமே முளைப்பதாக, காலம் போன பிறகு மனிதன் கண்டு கொண்டான்!

'ஒரு உயிர் சார்ந்தே மற்றொன்று இந்த உலகத்தில் வாழ முடியும். மனிதனிடம் மட்டும் ஏன் இந்தக் கொலைவெறி'! மாறுங்கள் மனிதர்களே!

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org







விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

# மோட்கேஜ் கிளினிக்



தயா (PK) கந்தையா
BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001083
**Cell : 416-716-8707**



ஜெ இராசதுரை MBA, BBA (Hon), AMP
**Mortgage Development Manager / Agent**
FSCO Lic # M 08001428
**Cell : 416-624-4843**

- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேண்டுமா?
- கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமேன்டையும் ஒரே பேமேண்டாக மாற்ற வேண்டுமா?
- ரீபைனான்ஸ் செய்ய வேண்டுமா?
- 2 வது மற்றும் 3வது மோட்கேஜ் தேவையா?
- பாங்க்ரப்சி செய்தோருக்கான மோட்கேஜ் தேவையா?
- உரிய நேரத்தில் மோட்கேஜ் தவணைப் பணத்தினை செலுத்தமுடியாது பவர் ஒப் சேலினை எதிர்நோக்குகிறீர்களா? உடனடித்தீர்வுக்கான ஆலோசனைகள் தேவையா?
- உங்கள் வீட்டினை வாடகைக்கு விட வேண்டுமா?
- அனைத்து ரியல் எஸ்டேட் சம்பந்தமான சேவைகளையும் குறைந்த செலவில் செய்ய வேண்டுமா?
- மற்றும் பல சேவைகள்

**இலவச ஆலோசனைக்கு தயக்கமின்றி அழையுங்கள்**



உதயன் (Utha) மாணிக்கவாசகர்
Mortgage Agent
FSCO Lic # M 11001140
**Cell : 647-282-8842**



நிஷாந்தன் சுவர்ணராஜா
Mortgage Agent
FSCO Lic # M 10001839
**Cell : 647-385-2710**



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-644-3555

CENTUM™ Rapid Mortgages Inc.
LIC # 10156

rapid realty inc.

# விளையாட்டுத் தகவல்கள் 351

## முத்தரப்பு கிரிக்கெட்: இந்தியா வெற்றி! மேலும் ஒரு மகுடம்!

இலங்கைக்கு எதிரான இறுதிப் போட்டியில் கடைசி ஓவரில் வெற்றிக்கு 15 ரன்கள் தேவை என்ற நிலையில் எரங்கா வீசிய ஓவரில் 6,4,6 என்று ஒருநாள் கிரிக்கெட்டின் கிரேட் பினிஷர் தோனி பின்னி எடுக்க இந்தியா ஒரு விக்கெட் வித்தியாசத்தில் அபாரவெற்றி பெற்று மேலும் ஒரு கோப்பையைக் கைப்பற்றியது! இலங்கை முதலில் 201 ரன்களுக்கு மடிந்து போக, இந்தியா 203/.9 என்று கடைசி ஓவரில் வெற்றி பெற்றது. புவனேஷ் குமார், வினய் குமார், இஷாந்த் சர்மா ஆகியோரை நம்பி ஒரு முனையில் நின்று சாதித்துக் காட்டிய தோனியின் அசாத்திய தன்னம்பிக்கை இன்று வெளிப்பட்டது. முதலில் ரங்கன்னா ஹெராத் ஓவர் முடியட்டும் என்று கட்டுப்படுத்திக் கொண்டார். பிறகு சுரங்க லக்மல் ஓவர் முடியட்டும் என்று காத்திருந்தார். பிறகு யார்க்கர் அம்பு வீசும் மலிங்காவும் முடியட்டும் என்று காத்திருந்தார். காத்திருந்து காத்திருந்து கடைசியில் ஒரு ஓவரில் 15 ரன்கள் தேவை என்ற நிலை வந்தது. அருமையாக வீசிய எரங்கா கடைசி ஓவரை வீச வந்தார். முதல் பந்தை ஐடியாவாக வெளியே வீசினார். தோனி ஒரு மாடையடிக்கு சுழற்று சுழற்றினார். ஆனால் பந்து சிக்கவில்லை. 2வது பந்து மோசமான பந்து என்று சொல்ல முடியாது. இது மிகப்பெரிய சிக்சர்! இலங்கை வீரர்கள் அதிர்ச்சியடைந்தனர்.


அடுத்த பந்து ஆ∴ப் ஸ்டம்பில் விழுந்ததை அபாரமாக பாயிண்ட் திசையில் பவுண்டரி அடித்தார். மீண்டும் இலங்கை அதிர்ச்சி. 3 பந்துகள் உள்ளன 5 ரன்கள் வெற்றிக்குத் தேவை. அப்போது ஆ∴ப் ஸ்டம்பில் லெந்தில் ஒரு பந்து விழ அதனை ஒரே இழுப்பு இழுத்தார் எக்ஸ்ட்ரா கவர் திச்சையில் சிக்சர்! இந்தியா வெற்றி பெற்றது. மீண்டும் தோனியின் முன்னால் இலங்கை மடிந்தது என்றே கூறவேண்டும். அவர் இருந்தால் இலங்கையால் வெற்றியை ருசிக்க முடிவதில்லை என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டது. உண்மையில் இதுபோன்ற ஒரு பினிஷிங்கை ஒருநாள் கிரிக்கெட்டில் பார்க்கமுடியாது. தோற்க வேண்டிய போட்டியை தனி மனிதனாக நின்று தோனி ஜெயித்துக் காட்டினார். முன்னதாக ரோகித் சர்மா அபாரமான இன்னிங்ஸை ஆடினார். கடினமான பிட்ச். பேட்டிங் எளிதல்ல. பந்துகள் ஸ்விங் ஆயின, பவுன்ஸ் ஆனது, ஸ்பின்னர் வீசும்போது திரும்பவும் செய்தது. துவக்கத்தில் தவானுக்கு எரங்கா வீசிய பந்து ஆக்ரோஷமான பந்து. பந்து மட்டையின் விளிம்பில் பட்டு கேட்ச் ஆனது. கோலிக்கு பந்து ஸ்விங் ஆக அவர் மட்டையில் மெலிதாகப்பட்டு சங்காவிடம் கேட்ச் ஆனது எரங்கா பயங்கரமாக வீசினார். 27/2 என்ற நிலையில் தினேஷ் கார்த்திக் இறங்கினார். ஆனால் ரோகித் பொறுமையாக நல்ல பேட்டிங் உத்தியுடன் ஆடினார். மலிங்கா வந்தவுடன் ஒதுங்கிக் கொண்டு ஒரு பந்தை சேவாக் செய்ய அது தேர்ட்மேன் திசையில் சிக்சருக்குப் பறந்தது. கார்த்திக் நிறைய பீட்டன் ஆனார். நிறைய பந்துகள் ரோகித்திற்கே இன்சைடு எட்ஜ் எடுத்தது. ஆனாலும் கார்த்திக் பதட்டமடையாமல் விக்கெட்டை காத்து வந்தார். அவர் 3



பவுண்டரிகளுடன் 23 ரன்கள் எடுத்து மீண்டும் ஹெராத்தின் பந்தில் அவுட் ஆனார். ஆனால் இந்த முறை அவரைக் குறை கூற முடியாது. கட் செய்யவேண்டிய பந்துதான். ஆனால் கட்ச் நேராக ஜெயவர்தனேயிடம் சென்றது. 77/3 என்ற நிலையில் ரெய்னா களமிறங்கினார். வந்தவுடன் மேத்யூஸ் பந்தை கவர் திசையில் ஒரு பளார் பவுண்டரி. பிறகு லக்மல் வீசிய லென்த் பந்தை நேராக ஒரு சிக்சர். ரோகித் சர்மாவும் ஒரு சில பவுண்டரியை அடித்து 58 ரன்கள் எடுத்திருந்தார். அப்போது 139/3 என்ற நிலையில் வசதியான வெற்றி என்றே தோன்றியது. ஆனால் ரோகித் துரதிர்ஷ்டமான அவுட்! ஹெராத் வீசிய பந்து உண்மையில் உருண்டு வந்தது என்றே கூறவேண்டும். ரோகித் பவுல்டு ஆனார். தோனி களமிறங்கிய நிலையில் 27 பந்துகளில் 1 பவுண்டரி ஒரு சிக்சருடன் இன்றைய தினத்தில் சிரமமின்றி ஆடிய ரெய்னா தேவையில்லாமல் லக்மல் பந்தை ஒரு சுழற்று சுழற்ற அது எட்ஜ் எடுத்து கேட்ச் ஆனது. ஜடேஜாவை 5 ரன்னில் எல்பி செய்தார் ஹெராத். அடுத்த பந்தே அஷ்வினுக்கு ஒரு பந்தை திரும்பச் செய்து அவரையும் எல்.பி. செய்ய இந்தியா 152/7 என்று ஆனது.

அதன் பிறகுதான் புவனேஷ் குமாரை (0) வைத்துக் கொண்டு தோனி 15 ரன்களை சேர்த்தார். புவனேஷ் 15 பந்துகள் சாலிட் டி∴பென்ஸ் ஆடினார். குமார் மலிங்காவின் 5 பந்துகளை எதிர்கொள்ள நேரிட்டபோது இயற்கையாக அவர் அவரிடம் யார்க்கரில் எல்.பி.ஆனார்.

167/8, வினய் குமார் களமிறங்கி 16 பந்துகள் ஆடினார். அவர் 5 ரன்கள் எடுத்ததும் மிகச்சிறந்த பங்களிப்பு என்றே சொல்லவேண்டும். அவர் மேத்யூஸ் பந்தை தாறுமாறாக ஏதோ செய்து ஆட்டமிழந்தார். ஆனால் 168-இலிருந்து தோனி ஸ்கொரை 182 ரன்களுக்கு உயர்த்தினார். 47வது ஓவரில்தான் இது நடந்தது. இஷாந்த் களமிறங்குகிறார். அதன் பிறகுதான் இஷாந்தை வைத்துக் கொண்டு வெற்றியை சாதித்தார். 7 பந்துகள் ஆடிய இஷாந்த் முக்கியமான கட்டத்தில் 2 ரன்களை எடுத்தார். அந்த 2 ரன்களை அவர் உயிரைக் கொடுத்து ஓடியதால்தான் கடைசி ஓவரில் தோனிக்கு ஸ்ட்ரைக் கிடைத்தது. இல்லையெனில் அது சிங்கிளாகியிருந்து தோனியினால் கடைசி பந்தில் சிங்கிள் எடுக்க முடியாது போனால் இஷாந்தே கடைசி ஓவரை சந்தித்திருப்பார். உண்மையில் தோனி ஒரு ஜீனியஸ்தான்! அப்படித்தான் கூறினார் இயன் சாப்பல் ஒருமுறை. இன்றும் அதனை நிரூபித்தார். ஆட்ட நாயகன் விடுதைத் தட்டிச் சென்றார். முன்னதாக இலங்கை கடைசி 8 விக்கெட்டுகளை 30 ரன்களில் இழந்து 201 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. தோனி கூறுகையில்: மலிங்கா அல்லது பிற அனுபவமிக்க வீச்சாளர்களுக்கு எதிராக ரிஸ்க் எடுக்க விரும்பவில்லை. அதனால் எரங்கா பந்தில் எனது வாய்ப்புகளை முயன்று பார்த்தேன் வொர்க் அவுட் ஆனது. இந்த ஷாட்களுக்கு ஹெவி பேட் தேவைப்படும் என்பதால் ஹெவி பேட்டை மாற்றிக் கொண்டேன். இவ்வாறு கூறினார் கேப்டன் கூல் தோனி.



**எஸ். கணேஷ்**

## கனேடிய மத்திய...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

ஏற்பட்டது என சந்தேகிக்கப்படுகின்றது.

இவ்விபத்தால் மக்களுக்கும், உடமைகளுக்கும் ஏற்பட்ட சேதத்தை விட சுற்றுப்புற சுற்றாடலும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. கிட்டத்தட்ட 100,000 லீற்றர் சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெய் இக்கிராமத்திற்கு அருகில் உள்ள Chaviere ஆற்றில்



கலந்துள்ளது. இந்த எண்ணெய் ஆற்றுநீருடன் 80 கி.மீ தூரத்திற்கு மேல் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இவ்விபத்து கனடிய தொடர்வண்டி சரித்திரத்தில் 1864 ஆம் ஆண்டு நடந்த 90 பேரை பலி கொண்ட St. Hilaire, குவிபெக் விபத்திற்கு பிறகு நடந்த மிகப்பெரிய விபத்தாக கருதப்படுகிறது. குவிபெக் மாகாண முதல்வர் Pauline Marois இவ்விபத்தில் இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து $60 மில்லியன் டொலரை Lac-Megantic கிராமத்தை மீளமைக்கவும் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவும் ஒதுக்கியுள்ளார். இவ்விபத்து பற்றி எலிசபெத் மகாராணி யூலை 8இல் விடுத்த அறிக்கையில், தனது கவலையையும் இவ்விபத்தால் பாதிக்கப்பட்டவர்களும் பாதிக்கப்பட்ட இடமும் விரைவில் வழமைக்கு திரும்ப வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8. Classes available at *Scarborough & Stouffville* **Contact: 647.340.9490 / 416.732.2228**

**யோகா சோதிடம்**

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# அடமானக்கடன் பெறும் புதிதாக அமலாக்கப்பட்ட முறையின் ஒரு வருட பூர்த்தி

கனடிய மத்திய அரசின் நிதி அமைச்சர் திரு. ஜிம் ஃபிளஹெற்றி (Jim Flaherty), அடமானக்கடன் பெறும் முறையை இறுக்கமாக்குவதற்காக கடந்த வருடம் யூலை 09, 12 புதிய தகமைகளை நடைமுறைப்படுத்தினார் என்பது 'விளம்பரம்' வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். ஆதன வியாபாரத்தின் விலை அதிகரிப்பை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்காகவே, இவ்வாறான இறுக்கமான முறையை கொண்டு வந்ததாக தெரிவித்திருந்தார். நீண்ட கால கனடிய பொருளாதார நிலைமையை கருத்தில் கொள்பவர்கள் அமைச்சரை புகழ்ந்தார்கள். அதேசமயம், இதனை எதிர்த்தவர்களும் இருக்கவே செய்தார்கள். எது எவ்வாறாயினும் அமைச்சர் எதிர்பார்த்தது போல் நடைமுறை யில் இல்லாமல் போயிருந்தாலும் ஒரு குறிப்பிட்டளவு, அமைச்சர் நினைத்தது போலவே நடந்தது. இந்த புதிய கடன் பெறும் முறையினால் 29% ஆன முதல் தடவை வீடு வாங்குபவர்கள் ஆதனச் சந்தையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்கள் அல்லது தாம் வாங்க இருக்கும் காலத்தை பின்போட்டுள்ளார்கள். இதே புள்ளி விபரத்தின் படி, 66% ஆனவர்கள் தமது நிலைப்பாட்டில் எதுவிதமாற்றமும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த பல வருடங்களாக ஆதனத்தின் விலை அதிகரிப்பு ரொறொன்ரோ, வன்கூவர் போன்ற நகரங்களிலேயே பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே நிதி அமைச்சர் எதிர்பார்த்தது போல ஆதன வியாபாரம், சிறிது மந்த நிலையில் செல்வதனைக் காணலாம். ஆகக்குறைந்த வட்டிவீதமும் ஆதன வியாபாரத்தை தக்கவைப்பதற்கு காரணமாகலாம். எனினும், யூன் 2013, ரொறொன்ரோ பெரும்பாகத்தில் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த ஆதன வியாபாரம் 1% குறைவாக உள்ளதனைக் காணக்கூடியதாக உள்ளது. எனினும் சராசரி ஆதனவிலை கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 4.7% அதிகரித்து உள்ளது. ஆயினும் சந்தைக்கு விற்பனைக்கு கொண்டுவந்த ஆதனங்களின் எண்ணிக்கை 6.1% இனால் குறைந்துள்ளது. இதனால் விற்பனைக்கு போதிய வீடுகள் காணப்படவில்லை. விலை அதிகரிப்பிற்கு இதுவும் ஒரு காரணமாகலாம். விலை



அதிகரிப்பிற்கு காரணமாக, தனி வீடுகளினதும் (Detached Houses), இரண்டு சேர்ந்த வீடுகளினதும் (Semi Detached Houses), பல தொடர் வீடுகளினதும் (Attached Houses) வியாபாரமும் காரணமாகலாம்.

கனடிய ஆதன விலையை சீராக வைத்திருப்பதற்கு வேறும் சில காரணங்கள் உள்ளன. அண்மையில் உலகில் வாழ்வதற்கு நன்மதிப்புள்ள நாடாக கனடா தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதனால் பணம் படைத்தவர்கள் கனடாவிலேயே முதலிட விரும்புகின்றார்கள். அனேகமான நாட்டில் உள்ள வசதி படைத்தவர்கள் தமது பணத்தின் ஒரு பகுதியை நம்பிக்கையான இடத்தில் முதலிடவே விரும்புவார்கள். அவ்வாறான நாட்டின் வரிசையில் கனடா முன்னிலையில் இருக்கின்றது. கனடாவிற்கு அடுத்து அடுத்ததாக சுவீடனும் சுவீட்சலாந்தும் உள்ளன. இன்னொரு அறிக்கையில் உலகில் உள்ள சிறந்த நகரங்களில் முதல் 10 இற்குள் ரொறொன்ரோவும் உள்ளது. இந்நிலை 2025 வரை இருக்கும் என குறிப்பிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது. முதலாவதாக நியூர்யோர்க், இலண்டன், சிங்கப்பூர் நகரங்களும், கனடாவின் ரொறொன்ரோ 10வது இடத்திலும் உள்ளது.

நியூர்யோர்க் முதலிடத்தில் இருந்தபோதும், ரொறொன்ரோ நியூயோர்க்கிற்கு அண்மை யில் இருப்பதால் ரொறொன்ரோவில் வாழ்வதற்கே மக்கள் விரும்புகின்றார்கள். ஏனெனில் உலகமே ரொறொன்ரோவில் வாழ்கின்றது. இது போன்ற பல காரணங்கள் ரொறொன்ரோ ஆதன வியாபாரத்தில் குறிப்பிட்டளவு பங்கை வகிக்கும். எனினும் குறிப்பிட்ட சில காலங்களிற்கு ஆதன வியாபாரத்தில் மந்த நிலை ஏற்பட்டாலும் நீண்ட கால முதலீடாக எண்ணும்போது ஆதன முதலீடு சிறந்ததே.

## புதிய அடுக்குமாடியின் கட்டிட செலவு இருமடங்காகலாம் (?)

அடுத்த மாதம் சந்திக்க இருக்கும் ரொறொன்ரோ நகரசபையின் உயரதிகாரி

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

## தொடர் - 394

களின் கூட்டத்தில் நகரசபைக்கு நிர்மாண நிறுவனங்களினால் கொடுப்பனவு செய்யப் படும் தொகை (Development Charge) இருமடங்காக அதிகரிக்க கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது. தற்பொழுது Builders இனால் ஒவ்வொரு இரு (2) அறை கொண்ட அடுக்குமாடி அலகுகளிற்கு செலுத்தப்படும் $12,412 தொகையானது $23,036 ஆக அதிகரிக்கப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

இவ்வாறு ஒரு நிலைமை ஏற்பட்டால் ரொறொன்ரோ பகுதியில் கட்டப்பட இருக்கும் அடுக்குமாடி அலகுகளின் விலையும் அதிகரிக்கலாம் என எதிர் பார்க்கலாம். இவ்வாறு பெறப்படும் தொகை

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"




Raja Mahendran, P.Eng.
Broker / Owner

**5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969**

**CONVENIENCE STORE FOR SALE**
Over 10 years in business. convenience / Grocery / Audio /CD/ video/ Lotto/Stamps..
Asking only $99,900

**Brand New Condo. For sale**
**FRONT & SPADINA (Toronto)**



1 + Den. 633Sq.ft. Close to CN Tower, Rogers, Sky Dome, Aquarium... etc.
Asking price $289,900

**HOUSE FOR SALE**
**HWY 07 & 9TH LINE**
4 Bedroom house for sale. 2 Garage. Close to all facilities. Price $689k.

**HOUSE FOR SALE**
**LAKESHORE & PARKLAWN**
2 Bedroom house for sale. 2 Washrooms. Close to all facilities.
Asking price $419,900

**CONDO FOR SALE**
**FINCH & MIDDLEFIELD**
2 Bedroom condo for sale. 1 Washroom. Parking, laundry. Close to TTC, mall, GTA Square mall. Price $199k.

**HOUSE FOR SALE**
**EGLINTON & MIDLAND**



Free hold 2 storey town house for sale. Over 1600Sq.ft.
3 Bedroom finished bsmt.
Close to RH King School.
Asking Only $419,900

**HOUSE FOR SALE**
**NEILSON & SHEPPARD**



Semi detached 4 bedroom house for sale. 2 Storey.
Asking Only $299,900

# ரொறொன்ரோ நகர எல்லைக்குட்பட்ட மனைகளுக்கு புதிய தண்ணீர் மீற்றர் இது நகரசபையின் நிர்ப்பந்தம்!


***CITY OF TOROTNO COMPULSORY WATER METER PROGRAM***

வீட்டின் கதவை தட்டி தங்கள் வீட்டின் 'தண்ணீர் மீற்றர்' கருவியினை மாற்றி நவீன தொழில்நுட்பங்களுடன் சேர்ந்த 'நீர்மானி' (water meter) ஒன்றினை பொருத்தப் போகின்றோம் என கம்பனி அடையாள அட்டையுடன் யாரும் அணுகிக் கேட்டால் உடனடியாக நம்பி அனுமதித்தல் என்பது எவராலும் முதலில் இயலாத ஒன்றாகவேயிருக்கும்.

ஏனெனில் கடந்த வருடங்களில் வீடுகளின் வாயு விநியோகத்தினை (Gas supply) மொத்த வியாபார ஒப்பந்த அடிப்படையில் எடுத்த கம்பனிகள் தங்கள் கம்பனி பிரதிநிதிகள் மூலம் வீட்டு கதவினை தட்டி தங்களின் வாயு செலவுகளை (Gas Expenses) குறைப்பித்து தருகின்றோம் என்று விண்ணப்பங்களில் கைச்சாத்துகளை வாங்கி, தொடர்ந்து மீற்றர் கருவிகளை மாற்றியமைக்க அனுமதித்து எதிர்கொண்ட சில கசப்பான அனுபவங்கள் சகலரையும் எச்சரிக்கும்.

ஆனால் தற்போது ரொறொன்ரோ நகர-சபை எல்லைக்குள் உள்ள சகல மனைகள், கட்டிடங்கள், வர்த்தக தளங்கள் யாவற்றிலும் புதிய தண்ணீர் மீற்றர் கருவி பொருத்தி வருவதனை நகரசபையினர் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இதனை சகலரும் அனுமதித்தேயாக வேண்டும் என்பது ஒரு செய்தி அறிக்கையாக சகல மனைகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக நீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகள், அநியாயமான நீர் வெளியேற்றம் போன்றவற்றினை துல்லியமாக கண்டு பிடிப்பது, சிக்கனமாக நீரை பயன்படுத்துவது போன்ற பல அனுகூலங்களை இப்புதிய தண்ணீர் மீற்றர் பெற்றுத்தருகின்றது என்கின்றார் நகரசபையில் இத்திட்டத்தின் மனேஜர் திரு. கார்லோ ஹசேல் (Mr. Carlo Casale, Project Manager water meter program city of Toronto)

அவர் மேலும் இது பற்றி தெரிவிக்கும்போது, சுமார் 72,000 மனைகளுக்கு இதுவரை தண்ணீர் மீற்றர் எதுவுமில்லை. ஆனால் அவர்களிடமிருந்து தண்ணீர் கட்டணமாக ஒரு குறிப்பிட்ட தொகையினை மட்டும் நகரசபை இதுவரை காலமும் அறவிட்டு வந்தது. இத்தகைய தண்ணீர் மீற்றர் இதுவரை காலமும் இல்லாது இருந்த மனைகள் ஒவ்வொன்றுக்கும் புதிய கருவி




பொருத்துவதுடன் ஏற்கனவே பழைய மீற்றர் இருந்த வீடுகள் ஒவ்வொன்றிலும் பழைய மீற்றர் அகற்றப்பட்டு தற்போது அறிமுகப்படுத்தும் புதிய கருவியினை பொருத்தி வருகின்றோம் என தெரிவித்தார்.

• அடுத்த ஆறு வருடங்களுக்குள் சுமார் 465,000 புதிய தண்ணீர் மீற்றர்கள் நகரத்தின் எல்லைக்குட்பட்ட சகல மனைகளுக்கும் பொருத்தி இணைப்பு முடிக்கப்படல் வேண்டும் என்ற ஒப்பந்த அடிப்படையில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## கனடிய தகவல் தொடர் 199

• நகரசபையினர் சகலருக்கும் கடித மூலம் அறிவித்தல் வழங்கி வருகின்றனர். தாங்களாகவே நகரசபைக்கு அழைத்தும் இவற்றினை இணைப்பதற்கு திகதி நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

• தொழில் நுட்பவியலாளர் நகரசபையின் பெயர் பதித்த உடுப்பு அணிந்த நிலையில் தமது படத்துடன் சேர்ந்த அடையாள அட்டையினை சட்டையில் மாட்டியபடி வருவார். நகரசபையின் குறிப்பிட்ட அனுமதிக்கப்பட்ட தொழில் நுட்பவியலாளரினை தவிர வேறு எவரும் இந்த வேலையினை செய்ய முடியாது. அதாவது எங்களிடம் சொந்தமாக தொழில் நுட்பவியலாளர் இருக்கின்றார், கருவியினை தாருங்கள் நாமே இணைத்து விடுகின்றோம் என கேட்க முடியாது. அவர்களும் கொடுக்கமாட்டார்கள். அவர்கள் தங்கள் தொழிலை துரித கதியில் அவர்களாகவே முடித்து விடுவார்கள்.

• இந்த இணைப்புகள் வேலைகள் எவற்றுக்கும் தாங்கள் கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை. சகலதும் இலவசமாகவே இணைக்கப்படும்.

• தொழில் நுட்பவியலாளர் வீட்டுக்கு வந்து இந்த இணைப்பினை பொருத்தும் போது 18 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் வீட்டில் நிற்க வேண்டும்.

• சுமார் 30 - 90 நிமிடங்களுக்குள் இணைப்பு வேலை முடிந்து விடும். இணைப்பு வேலை ஆரம்பிக்க முன்பு வீட்டுக்குள் சகல நீர் விநியோகங்களும் வேலை முடியும் வரை தற்காலிகமாக நிறுத்த வைக்கப்படும்.

சில வீடுகளில் தண்ணீர் நிறுத்தும் கருவி (Shut off valve) சுவரினுள் இருந்தால் சுவர் மட்டை (Dry wall) சிறுபகுதி சுமார் 48"- 85" நீள அகலத்தில் வெட்டி எடுத்தே தண்ணீர் ஓட்டம் நிறுத்த வேண்டி ஏற்படலாம்.

• இப்புதிய நீர்மானி இணைப்பதற்கு வீட்டு உரிமையாளர் அனுமதிக்கவில்லையானால் முதலில் தண்டனை பண ரிக்கற் வழங்கப்படும். தொடர்ந்து நீதிமன்ற ஆணைகள் வரலாம்.

• "Neptune technology group canada" என்னும் ஒரு கம்பனியே இக்கருவிகளை உற்பத்தி செய்து வருகிறது. அதன் தொழில் நுட்பவியலாளர்களே ரொறொன்ரோ நகரசபைக்கு தற்போது பணி புரிந்து வருகின்றனர்.

எனவே இவர்களுக்கு அச்சமில்லாமல் புதிய தண்ணி மீற்றரை பொருத்துவதற்கு கதவினைத் திறந்து அனுமதிக்கலாம்.

**ஸ்ரீ கைலாசம் சைவசமய கிரியைகள் சேவை**

சைவ கிரியைகள், ஆலோசனைகள், சைவமுறைப்படி சமயதீட்சை,
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு), அந்தியேட்டி (புன்ரதகனம், கல்பூசை) என்பவற்றை
சைவ முறைப்படி செவ்வனே செய்துகொள்வதற்கும், அவை தொடர்பான
ஆலோசனைகளுக்கும் 'இணுவையூர்' சிவஸ்ரீ.மு.சு.வைத்தியநாதன்குருக்கள்
(பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க முன்னாள் சைவக்குருக்கள்)

தொடர்புகளுக்கு: ***647.629.5468 / E.mail:smskurukkal@yahoo.com***



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# கனடா ஒரு...

## 03ஆம் பக்கத்தொடர்ச்சி

தருவார். உங்கள் தேர்தல்தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் அந்த வாக்குச் சீட்டில் ஆங்கில நெடுங்கணக்கு ஒழுங்கில் இடம்பெற்றிருக்கும்.

நீங்கள் தெரிவுசெய்யும் வேட்பாளரின் பெயருக்கு அருகில் புள்ளடி (X) இடவும். அடுத்து நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதை மற்றவர்கள் காணாதவாறு உங்கள் வாக்குச் சீட்டை மடிக்கவும். மடித்த வாக்குச் சீட்டை தேர்தல் அதிகாரியிடம் கொடுக்கவும். அவர் வாக்குச் சீட்டின் இலக்கத்தைக் கிழித்தெடுத்துவிட்டு வாக்குச் சீட்டை உங்களிடமே திருப்பித் தருவார். அதன் பின் உங்கள் வாக்குச் சீட்டை வாக்குப் பெட்டியில் இடவும். அல்லது உங்களுக்காக அதனைப் பெட்டியில் இடும்படி தேர்தல் அதிகாரியிடம் கூறவும்.



கனடா தேர்தல் சட்டங்களின்படி உங்கள் வாக்கு இரகசியமானது. அதாவது நீங்கள் வாக்களிப்பதை எவரும் அவதானிக்க முடியாது. நீங்கள் குறியிட்ட வாக்குச் சீட்டை எவரும் பார்க்க முடியாது. நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதைப் பற்றி மற்றவர்களுடன் நீங்கள் கதைக்கலாம். ஆனால் நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதைத் தமக்குச் சொல்லும்படி எவரும் உங்களை வற்புறுத்த முடியாது.

வாக்களிப்பு நிலையங்கள் மூடப்பட்டதும் தேர்தல் அதிகாரிகளால் வாக்குகள் எண்ணப்பட்டு வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மூலம் பெறுபேறுகள் அறிவிக்கப்படும். கனடா தேர்தல் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் தேர்தல் முடிவுகளை நீங்கள் காணலாம்: www.elections.ca

தொடரும்...

*- மணி வேலுப்பிள்ளை*

# நிலாவும் உலாவும்



எட்டாத உயரத்திலே வட்ட நிலவோ
வந்து வந்து போவதினால் கிட்டவில்லையோ
வளர்ந்து தேய்ந்து போவதானால் வண்ண நிலவோ
பௌர்ணமியில் வருவதனால் பால் நிலவோ

திருமணத்தின் பின்னர் அது தேன் நிலவோ
கன்னக்குழி விழுவதென்ன கன்னத்திலா
உன் விம்பம் விழுந்ததென்தன் கண்ணிலா
என் நினைவு தொலைந்ததென்ன உன்னிலா

நீ கோபம் கொண்டதென்ன என்னிலா
உன் சீற்றம் தணிந்தது என்ன என் சொல்லிலா
உன் சிந்தை மகிழ்ந்ததென்ன அன்பிலா
என் கனவு மிதந்ததென்ன விண்ணிலா

உன்மதிப்பு உயர்ந்ததென்ன பண்பிலா
செல்வம் தவழ்ந்ததென்ன கையிலா
வானம் பொழிந்ததென்ன மண்ணிலா
கப்பல் கவிண்டதென்ன கடலிலா

சேலை விழுந்ததென்ன முள்ளிலா
சிலைகள் பொழிந்ததென்ன கல்லிலா
வீரம் வந்ததென்ன வில்லிலா
வாழ்வு வந்ததென்ன பணிவிலா

சர்க்கரை கலந்ததென்ன பாலிலா
இன்பதுன்பம் வந்து போகும் வாழ்விலா
நிலவு மறைந்ததென்ன முகிலிலா
முற்றும் துறந்து விடும் முடிவிலா

- இனியா





முதியோர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கும், அறுவைச் சிகிச்சை அல்லது காயங்களிலிருந்து குணமடைவதற்கும், ஃபிசியோதெரப்பி (உடலியல் மருத்துவம்), உடற் பயிற்சி மற்றும் விழுவதைத் தவிர்ப்பதற்கான வகுப்புகள் உதவுகின்றன.

பொதுநிதியால் நடாத்தப்படும் இச்சேவைகள் தேவைப்படும்போது, முதியவர்கள் அவற்றை தொடர்ந்து பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் சமூகத்தில் தற்போதுள்ளதும் இனி வரப்போகிறதுமான சேவைகளைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்.

ontario.ca/physiotherapy
முதியோர் தகவல் இணைப்பு: 1-888-910-1999
TTY (செவிப்புலன் குறைந்தோர்க்கு): 1-800-387-5559

Ontario

# தமிழ் தேசிய இனப்பிரச்சினையை மதத்தால் உடைக்கமுடியாது

## சி. மகேந்திரனுடனான பேட்டி

கடும் மழையின் பின் ஓய்ந்து உறங்கிக் கொண்டிருந்த ஒரு மாலை நேரம் எழுத்தாளரும் தாமரை இதழின் ஆசிரியரும், தனது வாழ்நாட்களை கம்யூனிசக் கட்சிக்கும் அதன் செயல்பாட்டுக்கும் அர்ப்பணித்தவருமான சி. மகேந்திரனை 'விளம்பரம்' பதிப்பாளர் ராஜா மகேந்திரனுடன் ஸ்காபரோவில் சந்தித்தோம். நாள் முழுவதும் பேட்டியும் உரையாடலுமாக களைத்திருந்தபோதும் உற்சாகமாக பதிலளித்தார். முதலில் அதற்காக நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ரதன்: ஈழத் தமிழ் மக்களுக்காக தன்னுயிரை மாய்த்த முத்துக்குமாரை நீங்கள் நன்கறிவீர்கள். அவரது நினைவுகளை எங்களுடன் பகிருங்கள்.

மகேந்திரன்: தீக்குளித்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவரை வைத்தியம் பார்த்த பெண் வைத்தியர் அவரைப் பார்த்து 'ஏன் இப்படிச் செய்தாய்? திருமணம் செய்ய வேண்டிய வயதில்..." எனக் கேட்ட போது, முத்துக்குமார் 'அதற்கென்ன பெண்ணைப் பாருங்கள் நான் திருமணம் செய்கின்றேன்' என அந்த எரிகாயங்களின் மத்தியிலும் சிரித்துக் கொண்டு கூறினார். பின்னர் அவரே பெண் வைத்தியரிடம் கூறிய செய்தி 'நான் செய்யாவிட்டால் யார் தான் ஈழத் தமிழருக்காக செய்வார்கள்?' என்பதே. அவரது தியாகத்தை வார்த்தைகளால் கூறமுடியாது. கருணாநிதி முதலமைச்சராக இல்லாமல் வேறு யார் இருந்திருந்தாலும் மிகப் பெரிய போராட்டமே தமிழ் நாட்டில் நடந்திருக்கும்.

ரதன்: ஒரு இடதுசாரியாக இருந்து கொண்டு தமிழ்த் தேசியத்தை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள்?






## நேர்காணல் - ரதன்

மகேந்திரன்: இடதுசாரிகள் சகலவிதமான அடக்குமுறைக்கும் எதிராக போராடுபவர்கள், குரல் கொடுப்பவர்கள். பொருளாதார, ஜாதி, மத ஒடுக்குமுறைக்கு எதிராக தொடாந்து போராடுபவர்கள். தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறையும் அத்தகையதே. 19ம் நூற்றாண்டில் அயர்லாந்து போராட்டத்தை யாருமே ஆதரிக்காத சூழலில் முதலில் ஆதரித்தவர் கார்ல் மார்க்ஸ். ஒரு இனம் ஒடுக்கப்படும் பொழுது தேசிய இனப் பிரச்சினையில் இடதுசாரிகளின் குரல் கணிசமாக இருக்கவேண்டும். உலகமயமாதலின் உச்சத்தில் இடது சாரிக்கட்சிகள் தேசிய இனப் பிரச்சினையில் ஒடுக்கப்பட்ட இனத்துக்கு ஆதரவாக குரல் கொடுப்பதில் இடதுசாரிகள் முன்னணியில் உள்ளார்கள்.

ரதன்: தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையில் மதம் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றதா? தேசிய இனப்பிரச்சினையில் மதம் என்ன பாத்திரத்தை வகிக்கின்றது?

மகேந்திரன்: தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையை மதத்தால் உடைக்க முடியாது. தமிழ் மொழி ஒன்றில் தான் பல மதங்கள் உள்ளன. பொத்தம், சமணம், முஸ்லீம், கிறிஸ்தவம், இந்து என பல மதங்கள். Bishop Robert Caldwell கிறிஸ்தவ மதத்தை பரப்பவே இந்தியா வந்தார். தமிழ் மொழி மீதான பற்றால் ஒப்பியல் அகராதியை உருவாக்கினார். கொன்ஸ்ரைன் யோசப் பெக்சி, (Constantine Joseph Beschi) வீரமாமுனிவராக தனது பெயரை மாற்றிக் கொண்டார்.

ரதன்: அப்படியிருந்தும் இன்று இலங்கையில் முஸ்லீம்கள் ஒரு தனி இனமாக உள்ளதே?

மகேந்திரன்: இலங்கையில் ஒரு பிரத்தியேக நிலைமை உள்ளது. ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் ஆதிக்க சக்தியின் ஒரு Brand ஆகின. மாநில அடையாளங்களை கூட்டுவதற்கும் தக்கவைப்பதற்கும் இவ்வாறு இலங்கை முஸ்லீம்கள் செயற்படுகின்றார்கள். இலங்கையில் உள்ள சூழலை வேறுவிதமாக பயன்படுத்துவதற்கு இவர்கள் முயற்சிக்கின்றனர். அடையாளத்தை தக்க வைப்பதன் மூலம் அதிகாரத்தை அடையாளம் என்பதே காரணம். இவ் அடையாள அரசியல் கால வெளிச்சத்தில் மிக மோசமாக ஏமாந்து போவார்கள். தமிழ் நாட்டில் மனித நேய மக்கள் கட்சி என்னும் முஸ்லீம் கட்சி இரண்டு சட்டசபை உறுப்பினர்களை சட்ட மன்றத்தில் கொண்டுள்ளது. ராஜபக்சவுக்கு எதிரான போர்க்குற்றவாளி தீர்மானம் சட்டமன்றத்தில் கொண்டு வந்தபோது இவ்விரு உறுப்பினர்களும் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

ரதன்: தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையில் இந்தியா?

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# MIDTOWN Honda

**3400 Dufferin Street**
**Toronto, ON M6A 2V1**

**Across from Yorkdale Mall**

## 2013 Civic
LX AUTO
$0 down @ 1.99%
$124.00/bw
FINANCE FOR 84 MONTHS /bw + tax

**FINANCE**

## 2013 CR-V
LX 4WD
$0 down @ 1.99%
$176.00/bw
FINANCE FOR 84 MONTHS /bw + tax

## 2013 Civic
LX AUTO
$0 down @ 2.99%
$113.00
/bw + tax
LEASE FOR 48 MONTHS

**LEASE**

## 2013 CR-V
LX 4WD
$0 down @ 1.99%
$167.00
/bw + tax
LEASE FOR 48 MONTHS

## NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

Receive an Samsung Galaxy Tab 7.0 with purchase of a USED or NEW vehicle FINANCE OR LEASE



FROM TONY SIVA

புதிய பாவித்த வாகனங்களை
தமிழில் உரையாடி
மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள அழையுங்கள்

## DON'T MISS OUT! on these GOOD Deals!

**Civic** 40 in stock
2008 and up @ 3.49% for 72 months
Biweekly payment Starting from
$72. + tax
Price starting from $9,788.

**Accord** 7 Left
2008 and up @ 3.49% for 72 months
Biweekly payment Starting from
$113. + tax
Price starting from $15,688.

**2009 & 2011 Toyota**
Price starting from
$11,488. + tax

**HONDA certified used vehicles come with 6 Years or 120,000 km Warranty**

**CR-V** 7 in stock
2008 and up @ 4.99% for 72 months
Biweekly payment Starting from
$128. + tax
Price starting from $12,288.

**Honda PILOT** 7 in stock
2008 and up Starting from
$20,888. + tax

**2009 & 2010 ACURA CSX**
Price starting from
$16,898. + tax

**Odyssey** 5 in stock
2008 and up @ 5.99% for 60 months
Biweekly payment Starting from
$171. + tax
Price starting from $12,288.

**2010 - C 250 Mercedes Benz**
$24,588 + tax

**2009 & 2010 ACURA TL**
Price starting from
$17,188. + tax

**2004 & up BMW 323i**
5 in stock
Price starting from
$11,488 + tax

**2010 Lexus RX350**
$32,588 + tax

**2009 ACURA RDX**
3 in stock
Price starting from
$21,988. + tax



**Tony Siva**
ரோனி சிவஞானம்
**647-269-0749**
tonymidtown@hotmail.com

## 2008 and up used cars
Interest Starting from 1.99%

Visit my website www.midtownhondausedcars.com

# காலத்தோடு வளரும் கணினிகள் -25


அன்பான வாசகர்களே!

கணினிக்குப் புதியவர்களின் நன்மை கருதி இணையம், மின்னஞ்சல் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கான செயன்முறைக் குறிப்புக்களைப் பற்றிக் கடந்த சில இதழ்களில் எழுதியிருந்தேன். இந்தக் குறிப்புக்களின் உதவியுடன் எல்லோரும் கணினிப்பாவனையாளர்களாக மாறிவிடலாம். இதுவரையில் கணினியைப் பயன்படுத்தாதவர்கள் குறைந்த பட்சம் இணையம், மின்னஞ்சல் போன்றவற்றைப் பயன்படுத்திக் கணினி உலகில் வலம் வந்து விடலாம்.

இணையம், மின்னஞ்சல் தவிரக் கணினியைப் பயன்படுத்தும் எல்லோரும் அறிந்திருக்க வேண்டிய விடயம் சொற்பரிமாற்றம் (Word Processing). ஒரு கணினியில் கடிதம் ஒன்றினைத் தட்டச்சு செய்வதற்கு அல்லது பல பக்கங்களைக் கொண்ட ஒரு நூலை உருவாக்குவதற்கு வேண்டிய தட்டச்சினைச் செய்வதற்கு சொற்பரிமாற்ற மென் பொருட்கள் உதவுகின்றன. பல்வேறு சொற்பரிமாற்ற மென்பொருட்கள் பாவனையில் உள்ளன. குறைந்த பட்சம் ஏதோ ஒரு சொற்பரிமாற்ற மென்பொருளைப் பயன்படுத்துவதற்குரிய அறிவைக் கணினிக்குப் புதியவர்கள் பெற்றுக் கொள்வது அவசியம். இந்த இதழில் இருந்து சொற்பரிமாற்றம் பற்றிய சில தகவல்களை இந்தத் தொடர் கட்டுரையில் எழுதலாம் என நினைக்கின்றேன். கணினிக்குப் புதியவர்களின் நன்மை கருதிச் சொற்பரி-மாற்றம் பற்றிய செயன்முறைக் குறிப்புக்களையும் சேர்த்துக் கொள்கின்றேன். சொற்பரிமாற்ற மென்பொருளானது தட்டச்சு செய்யவும், அவற்றில் மாற்றங்களைச் செய்யவும், வடிவுறுத்தல் (Formatting) செய்யவுமெனப் பல்வேறு வசதிகளைக் கொண்டதாக உள்ளது.



ஆரம்பத்தில் 1970ற்கும் 1980ற்கும் இடைப்பட்ட காலத்தில் தட்டச்சுக் கருவிகளில் சொற்பரிமாற்ற வசதி இருந்தது. இந்தக் காலத்தில் உள்ள சொற்பரிமாற்ற மென்பொருட்களில் சொற்களில் உள்ள எழுத்துப் பிழைகளையும், இலக்கணப் பிழைகளையும் திருத்தும் வசதிகள் உள்ளன. சொற்பரிமாற்றம் (Word Processing) என்ற சொல்லை 1960இல் ஐபிஎம் (IBM) நிறுவனத்தினர் முதலாவதாகப் பயன்படுத்தினார்கள். 1976இல் எலக்ரிக் பென்சில் (Electric Pencil) என்ற சொற்பரி-மாற்ற மென்பொருள் நுண் கணினிகளில் (மைக்கிரோ கொம்பியூட்டேர்ஸ்களில் (Microcomputers) பயன்படுத்தப்பட்டது. 1980ஆம் ஆண்டில் word Perfect, XyWrite, Microsoft Word, Pfs:Write போன்ற சொற்பரிமாற்ற மென்பொருட்கள் பயன்பாட்டில் இருந்தன. 1986ஆம் ஆண்டில் PC Magazine 57 சொற்பரிமாற்ற மென்பொருட்களைப் பட்டியலிட்டது. 1984இல் MacWrite, Microsoft Word போன்ற சொற்பரிமாற்ற மென்பொருட்கள் அப்பிள் குடும்பக் கணினிகளில் பாவனைக்கு வந்தன. இப்பொழுது ஐபிஎம் (IBM) குடும்பக் கணினிகளில் இன்று பிரசித்தி பெற்று விளங்கும் Ms Office மென்பொருட்களில் ஒன்றான Ms Word என்ற சொற்பரிமாற்ற மென்பொருள் (Word Processing Software) பற்றிய வரலாற்றுத் தகவல்களைக் கவனிப்போம். சார்ள்ஸ் சிமோன்யி (Charles Simonyi), றிச்சார்ட் புரோடி (Richard Brodi) ஆகியோர் முதலாவது Microsoft Word (Ms Word) மென்பொருளை 1981இல் உருவாக்கினார்கள். Word 1.0 என்ற சொற்பரிமாற்ற மென்பொருள் அக்டோபர் 1983இல் வெளிவந்தது. Word 2.0 1991 இலும், Word 6.0 1993 இலும் வெளியா கின. வருடங்களைப் பெயரில் கொண்டு Word 95, Word 97, Word 2000, Word 2001, Word 2002 என்றவாறு வெளிவந்து Word 2013 வரை வந்து விட்டது. ஒவ்வொரு ஆண்டிலும் வெளிவரும் Ms Word சொற்பரிமாற்ற மென்பொருட்களில் படிப்படியாக வளர்ச்சியுற்று பல்வேறு வசதி-களைக் கொண்ட ஒரு மென்பொருளாக இன்று விளங்குகின்றது. இந்த ஒரு மென்பொருளை மட்டும் பயன்படுத்தக் கற்றுக்கொள்வதின் மூலமே கணினி மூலம் நிறைய வேலைகளைச் செய்து விடலாம் என்ற நிலைக்கு வந்து விட்டது. எனவே கணினிக்குப் புதியவர்கள் இணையம், மின்னஞ்சல் போன்றவற்றிற்கு அப்பால் இந்த மென்பொருளைப் பயன்படுத்தக் கற்றுக் கொள்வது அவசியமாகின்றது. இந்த மென்பொருளும், வேறு சில




மென்பொருட்களுடன் சேர்ந்து Microsoft Office என்ற பெயரில் மைக்கிரோசொவ்ற் (Microsoft) நிறுவனத்தால் விற்கப்படுகின்றது. நீங்கள் வாங்கிய கணினியில் இந்த மென்பொருளை வாங்கி நிறுவிக்கொள்வது அவசியமாகின்றது.

உங்கள் கணினியின் தொழிற்பாட்டுக்கு மிகவும் அத்தியாவசியமாகிய Windows XP, Windows 7 போன்ற இயக்க அமைப்பு மென்பொருட்களில் (Operating System Software) மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளைக் கொண்ட சொற்பரிமாற்ற மென்பொருட்களாக Notepad, Wordpad போன்றவை கணினியில் துணைப்பொருட்களில் (Accessories) ஒன்றாகக் காணப்படும். இவற்றில் நோட்பாட் (NotePad) என்பது சில குறிப்புக்களைத் தட்டச்சு செய்வதற்குப் பயன்படும். டெஸ்க்ரொப்பில் (Desktop) அடியில் இடதுபக்க மூலையில் காணப்படும் Start பட்டனை கிளிக் செய்து All Programs தெரிவை கிளிக் செய்த பின்பு தோன்றும் பட்டியலில் Accessories என்பதை கிளிக் செய்த பின்பு தோன்றும் பட்டியலில் Notepad இனைத் தெரிவு செய்வதன் மூலம் நோட்பாட் என்ற சிறிய மென்பொருளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த மென்பொருள் மூலம் குறிப்புக்களைத் தட்டச்சு செய்து கோப்புக்களாக (Files) கணினியில் சேமிக்கவும், இவற்றை அச்சுப்பதிவு (Printing) செய்யவும் முடியும். இந்த மென்பொருளில் கோப்புக்கள் .txt நீட்டிப்புடன் (extension) text format ஆகச் சேமிக்கப்படுவதால் நிரலர்கள் (Programmers) இந்த மென்பொருளை அதிகம் பாவிப்பதுண்டு. எந்தவிதமான சொற்பரிமாற்ற மென்பொருள் பற்றிய அறிவும் இன்றி சிறிய குறிப்புக்களை தட்டச்சு செய்து வைத்துக்கொள்வதற்கு இந்த மென்பொருள் உதவியாக இருக்கும். உங்கள் கணினியில் Ms Word போன்ற மென்பொருட்கள் இல்லாதவிடத்து இந்தச் சிறிய மென்பொருளை பாவித்துக் கொள்ளலாம். இந்த மென்பொருளில் கோப்புக்களைச் சேமிக்கவும், அச்சுப்பதிவு செய்யவும் ஏதுவாக வசதிகள் உள்ளன. எழுத்துருக்களை மாற்றி தட்டச்சு செய்யத்தக்க வசதியும் இருப்பதால் தமிழ் எழுத்துருக்களைப் பயன்படுத்தி தமிழிலும் இந்த மென்பொருள் மூலம் தட்டச்சு செய்யலாம். சில அடிப்படையான text editing வசதிகளும் இந்த மென்பொருளில் உண்டு.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள்.

அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம்.

தொடரும்...



- அகணி -
authorakani@yahoo.com

**COMMERCIAL UNIT FOR SALE**
Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.
*Pl. Call: 416.451.0271 / 416.315.9397*

Summer TUTORING
"By Qualified & Experienced Tutors"
KEEN TUTORING CENTRE
- MATH, SCIENCE
- CHEMISTRY, PHYSICS, BIOLOGY
- Adv. FUNCTIONS, CALCULUS &VECTORS
- UNIVERSITY 1st & 2nd year
✓ Get a head start for High Scoring
Call : 647 341 3975, 647 869 3974

# ஓடும் நீர் உறைவதில்லை 169

## புத்திசாலியான திருடன் ஆணவத்தின் அடித்தளம்

திருடர்கள் பலவிதம். ஒவ்வொரு திருடரும் ஒவ்வொரு விதம். திருடர்களை அறிந்து கொள்வதற்கு முன்னர் "திருட்டு" என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். "ஒருவருக்குச் சொந்தமான ஒன்றை அவரது அனுமதி இன்றி உடைமை கொள்ளல் திருட்டு" ஆகும். இங்கே அனுமதி என்பது கொடுப்பவரின் உரிமை மாற்றம். அதாவது ஒன்றை நாம் எமது சொந்தம் ஆக்குவதற்கு அதன் உரிமையாளர் அதன் மீதான தனது உரிமையை எமக்கு மாற்றம் செய்தல் வேண்டும். உரிமை மாற்றம் செய்யப்படாமல் நாம் உடமை கொள்ளும் அனைத்தும் திருட்டுத்தான். திருட்டு இரண்டு வகையானது. ஒன்று நேரடியான திருட்டு. மற்றையது மறைமுகமான திருட்டு. நேரடியான திருட்டு என்பது மேலே குறிப்பிட்டதைப் போன்று ஒன்றை நாம் உரிமை மாற்றம் செய்யப்படாமல் சொந்தமாக்கியிருத்தலாகும். மறைமுகமான திருட்டானது ஒன்றை நாம் சொந்தம் கொள்வதற்கு அதற்கான வெகுமதியைக் கொடுத்தாலும் அந்தப் பொருளை எமக்குக் கொடுத்தவருக்கு அதன் மீது உரிமை இல்லாவிடின் அதுவும் களவு தான். அதாவது, திருடப்பட்ட ஒரு பொருளை திருட்டுப் பொருள் என நாம் அறியாமல் திருடியவரிடம் விலை கொடுத்து வாங்கினாலும் அதுவும் திருட்டுத்தான். ஏனெனில் அந்தப் பொருளின் மீதான உரிமை அதன் உண்மையான உரிமையாளரிடம் இருந்து மாற்றப்படவில்லை என்பதனாலாகும்.

திருடர்கள் பலவிதமானவர்களாக இருந்தாலும் அவர்களையும் இரண்டு வகைக்குள் உள்ளடக்கலாம். உங்களை (மனதை)த் திருடுபவர்கள் ஒரு வகை. உடைமைகளைத் திருடுபவர்கள் இன்னொரு வகை. உண்மையில் நாம் எல்லோரும் திருடர்கள் தான். ஏனெனில் இந்த இரண்டு வகைத் திருட்டில் ஏதாவது ஒன்றை நாம் செய்திருப்போம் அல்லது செய்து கொண்டிருக்கிறோம். இந்தத் திருடர்களில் அசையும் அசையாச் சொத்துக்களைத் திருடுபவர்கள் சட்டத்தால் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு திருட்டின் தன்மைக்கும் திருடப்படும் சொத்தின் பெறுமதிக்கும் ஏற்றவாறு தண்டனையின் தன்மை அமையும். மாறாக மனதைத் திருடுபவர்கள் சமுதாய ஒழுக்க விதிகளுக்கு முரண்படாமல் திருடுவார்களாயின் அவர்கள் தண்டிக்கப்படாமல் தட்டிக்கொடுக்கப்படுகிறார்கள். இந்தத் திருடர்கள் அன்பு, அறிவு, அமைதி ஆகிய மூன்றையும் தமது திருட்டுக்கான கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். திருட்டு சிலருக்கு ஒருதொழில். சிலருக்கு ஒரு கலை. திருடர்கள் திறமைசாலிகள். ஆனால் புத்திசாலிகள் அல்ல. இவர்களால் ஒருவரிடம் இருக்கும் அத்தனை சொத்துக்களையும் திருட முடியாது. ஏனெனில் மற்றவர்களுக்குத் தெரியாமல் அங்கு இங்கு என்று புதைத்து வைத்திருக்கும் சொத்துக்களையோ, ஒருவரிடம் உள்ள தொட்டுணர முடியாத கல்வி, புத்திக் கூர்மை, அனுபவம் போன்ற சொத்துக்களையோ திருட முடியாது. ஆனால் எந்தவித மட்டுப்படுத்தலுக்கும், கட்டுப்படுத்தலுக்கும் இடங்கொடாத ஒரேயொரு திருடன் இருக்கிறான். இந்தத் திருடன் தான் புத்திசாலியான திருடன். யார் இந்தத் திருடன்? இந்தப் புத்திசாலியான திருடன் எம்முடன் சேர்ந்தே இருப்பான். ஒரு கணப் பொழுதேனும் எம்மை விட்டுப் பிரிய மாட்டான். எம்மால் சேகரிக்கப்படும் அனைத்தும் இந்தத் திருடனின் பார்வையிலும் பதிவிலும் இருந்து தப்புவதில்லை.

நாம் ஒவ்வொருவரும் எமக்கே உரித்தான பிரத்தியேகமான வாழ்க்கை முறையைக் (Exclusive living system) கொண்டவர்கள். நாம் வாழ்வது போல் இன்னொருவர் வாழ்ந்ததுமில்லை, வாழப் போவதுமில்லை. அத்தனை சிறப்பு வாய்ந்த வாழ்க்கை முறையை நாம் ஒவ்வொரும் நகர்த்திக் கொண்டிருக்கிறோம். இந்த வாழ்க்கை முறையில் நாம் ஒவ்வொருவரும் அறிவு, மதிநுட்பம், அனுபவம், அசையும் அசையாச் சொத்துக்கள் உட்பட பலவற்றைச் சேகரித்தவண்ணம் நகர்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த நகர்வுடன் புத்திசாலியான அந்தத் திருடனும் இணைந்து நகர்ந்துகொண்டிருக்கின்றான். தனக்குச் சாதகமான ஒரு சந்தர்ப்பத்தில் இந்தப் பிரத்தியேகமான வாழ்க்கை முறைக்கு, எமது நகர்வுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் 'மரணம்' தான் அந்தத் திருடன். முற்றுப்புள்ளி வைப்பதன் மூலம் நாம் சேர்த்து வைத்த அனைத்தையும் எமது அனுமதி இல்லாமல் எடுத்துச் செல்லும் அந்தத் திருடன்தான் (கூற்றுவன், காலன், இயமன் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும்) "மரணம்". மரணத்தைப் போல் எவருமே திருட முடியாது. உலகில் அதீத திறமைமிக்க திருடனிடம் கூட இந்தப் புத்திசாலியான திருடன் திருடிவிடுவான்.

நன்றியுடன் - KG Master

• • •

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

நாம் எல்லோரும் மிகவும் சாதாரணமாகப் பயன்படுத்தும் சொற்களில் 'ஆணவம்' என்பதும் ஒன்று. ஒருவரது மனோபாவம் அல்லது நடத்தை ஏதோ ஒருவகையில் எம்மைப் பாதிக்கும்போது அந்தப் பாதிப்பானது எமக்கு ஒரு மனப் பாதிப்பைத் தரும்போது அவரை ஆணவம் பிடித்தவர் என்றும் ஆணவக்காரர் என்றும் குறிப்பிடுகின்றோம். "ஆணவம் பிடித்தவர்" என்பது ஒருவர் ஆணவத்தால் பிடிக்கப்பட்டவர் என்றும் 'ஆணவக்காரர்' என்பது ஆணவத்தின் சொந்தக்காரர் எனவும் பொருள் கொள்ளப்படுவது வழக்கம். ஒருவர் ஆணவத்தால் பிடிக்கப்பட்டுள்ளாரா அல்லது ஆணவத்தை அவர் பிடித்துள்ளாரா அல்லது ஆணவம் என்பது ஒருவர் பற்றிய இன்னொருவரது பிரத்தியேகப் பார்வையா என்பதை அறி-வதற்கு இந்த ஆணவம் பற்றிய சமூகப் பார்வைகளை முதலில் நோக்குவோம்.



ஆணவம் என்பதற்குப் பல வடிவங்களை நாம் கொடுக்கிறோம். அகங்காரம், கிறுக்கு, திமிர், மிடுக்கு, மேதாவித்தனம், அதிகாரத் தன்மை, அடக்கும் தன்மை எனப் பாதிக்கப்படுபவர் பார்வைக்கு ஏற்றவாறு அந்த வடிவங்கள் அமைகின்றன. இந்த வடிவங்ககளைப் பொறுத்து வடிவமைப்பாளர்களின் தன்மையும் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த வடிவமைப்பாளர்களில் பலர் ஒப்பீட்டு ரீதியில் தம்மை குறைவாக மதிப்பீடு செய்பவர்களாக இருப்பார்கள். அதாவது தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாக இருப்பார்கள். ஒருசிலர் தமது சுய இலாபம் கருதி அடக்கமாக இருப்பதுபோல் நடிப்பவர்களாக இருப்பார்கள். ஒருசிலர் ஏதாவது ஒரு குற்றச் செயலால் தம்மைத் தாமே அடிமையாக்கி அடங்கி இருப்பார்கள்.

கல்வி, பொருளாதாரம், சமூகநிலை என்பவற்றில் ஒப்பிட்டு ரீதியில் தன்னைவிட ஒருவர் உயர்வாக இருப்பது ஏதோ ஒருவகையான மனப் பாதிப்பை இன்னொருவருக்கு ஏற்படுத்தும்போது பாதிப்புக்கு உள்ளாகுபவர் அவற்றையே மற்றவரது ஆணவத்துக்கான காரணமாகக் கொள்வது வழக்கம். அதே நேரத்தில், கல்வி, பொருளாதாரம், சமூகநிலை என்பவற்றை மட்டுமல்ல எவற்றையெல்லாம் பயன்படுத்த முடியுமோ அவற்றை எல்லாம் கருவிகளாகப் பயன்படுத்தி மற்றவர்களை மட்டம் தட்டும் மனித ஜீவன்களும் ஆணவம் பிடித்தவர் என்ற பட்டத்தை மிகவும் இலகுவாகப் பெற்றுவிடுகிறார்கள். ஆனால் ஆணவத்துக்கான அடித்தளம் இவற்றுக்கப்பால் வேறு ஒன்றாக இருப்பது தான் உண்மை. 'ஒன்றாக' என்று ஒருமையில் குறிப்பிடுகின்றேனே என்று ஆச்சரியப்பட வேண்டாம். ஆணவத்துக்கான அடித்தளமாக அமைவது தனித்தன்மைக்கு (individuality) ஏற்படும் சவால் தான். எனது தனித்தன்மைக்குச் சவால் இல்லை என நான் உணரும் போது ஆணவம் எழுவதற்குச் சாத்தியம் இல்லாமல் போய்விடுகிறது. மற்றவர்கள் எனது ஆணவத்துக்கு எவை-யெல்லாம் காரணம் எனக் கருதுகிறார்களோ அவை அனைத்தும் என்னிடம் இருந்தாலும்

**KG Master: --**
www.kgmaster.com
www.facebook.com
kgmaster.lifecoach

கூட அவை எனது தனித்தன்மைக்குச் சவாலாக அமையாதபோது ஆணவம் எழுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. எனவே ஆணவத்தின் அடித்தளம் தனித்தன்மைக்கு ஏற்படுத்தப்படும் சவால் தான். நாம் ஒருவரது தனித்தன்மைக்குச் சவாலாக அமைந்தாலோ அல்லது எமது தனித்தன்மைக்கு ஒருவர் சவாலாக அமைவதாகக் கருதினாலோ ஆணவம் வெளிப்பட்டுவிடும்.

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹராஜியின் உரைகள்**



| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am Rogers Cable Channel - 20 Bell Express vu Channel - 219 |

# உடலும் உள்ளமும் நலம்பெற தியானம்!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### *Meditation for body and mind*

பரபரப்பான இன்றைய உலக சூழ்நிலையில் மனிதர்கள் தமது உடல் ஆரோக்கியத்திலும் மனநிலையின் தன்மையிலும் அக்கறை கொள்வதற்கே நேரம் கிடைப்பதில்லை. ஏதோ நோய் வரும்போது மருத்துவர்களும் மருந்துகளும் இருக்கின்றன என்ற திருப்தியில் இருந்து விடுகின்றனர். தியானம் என்றாலே அது இல்லற வாழ்வைத் துறந்தவர்களும், வேலை இல்லாது வீட்டில் இருப்பவர்களும் செய்ய வேண்டிய ஒன்று என்றும் தமக்கு இப்போதைக்கு தேவை யற்றது என்றும் அதை ஒதுக்கி விடுகின்றனர்.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் நாம் அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகளில் தியானம் ஒன்றாக வேண்டும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய நவீன உலகில் தொழில் நுட்பத்தினாலான பொருட்களைச் சார்ந்தே வாழ வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டு விட்டோம். இன்று எல்லோர் கையிலும் தொலைபேசி, தொலைக்காட்சி, குளர், வெப்ப சாதனங்கள், சமையல் அறை முதல் படுக்கை அறை வரை இயந்திரங்களின் பாவனை. இதேபோல் மனிதனும் தானே இயந்திரம் போல ஆகி விட்டான். இந்த பரிதாப நிலையிலிருந்து நம்மைக் காப்பதே தியானம் ஆகும்.

பொறுமை, நிதானம் என்பதையெல்லாம்



காணமுடியாது. எங்கேயும் எப்போதும் ஓட்டம். எனவே வாழ்க்கை போகிறது. வருமானத்தைக் கருத்தில் கொண்டு பலரும் பல்வேறு இடங்களைத் தேடி அலைகின்றனர். வாகனங்களில் அதிக நேரம் பயணிக்கின்றனர். இவற்றால் அவர்களுக்கு உடலில் ஏற்படும் பாதிப்புகளைக் கூட தெரிந்துகொள்வதற்கும் நேரமில்லை. அதுமட்டுமன்றி நீண்ட நேரம் கணினி முன் (Computer) இருந்து வேலை செய்பவர்கள் காலப்போக்கில் உடல், மனரீதியாக பல பாதிப்புக்குள்ளாவது தவிர்க்க முடியாததொன்றாகும்.

இதற்கெல்லாம் விடைகாண்பதே 'தியானம்'. மிக எளிய முறையில் அன்றாடம் தியானத்தை செய்யப் பழகினால் போதும். அதன்மூலம் பெறும் பலன்கள் அதிகம். மிகக் குறைந்த நேரம் செலவிட்டாலே போதும். தேவையற்ற விடயங்களைத் தவிர்த்துவிட்டு அந்த நேரத்தில் தியானப் பயிற்சி செய்தல் வேண்டும். ஆரம்பத்தில் சிறிது சிரமமாகத் தோன்றினாலும் பழகப் பழக எளிதில் கைகூடும். நாம் அன்றாடம் மேற்கொள்ளும் கடமைகளுள் ஒன்றாகவே தியானத்தையும் செய்ய வேண்டும். நாம் அன்றாடம் அதிக நேரத்தை செலவிடும் மடிக்கணினி (Laptop), தொலைக்காட்சி (TV) போன்றவற்றைத் தேவைக்கு மட்டும் பாவிப்பதோடு நிறுத்திக் கொண்டு மீதமுள்ள நேரத்தை உடற்பயிற்சி, ஓய்வு, தியானம் போன்றவற்றிற்காகப் பயன்படுத்தினால் உடலும் உள்ளமும் சீராகும். இன்று பெரும்பாலோருக்கு இருப்பது அதிகமான மன உளைச்சலும், சஞ்சலமும் தான். இவை தான் உடலில் நோய் தோன்று வதற்கு வழிவகுக்கின்றன. இன்றைய சமூக பொருளாதார ஏற்ற தாழ்வுகளும் மனிதனின் நிம்மதியைக் கெடுத்துவிடுகின்றன. பெரும்பாலும் மனதில் குழப்பமான சிந்தனையோடு வாழ வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தியானம் என்பது (Meditation) நம்மை காப்பாற்றி கரை சேர்க்கின்றது.

அதேபோல் உடல் உபாதைகளும் இன்றைய காலப்பகுதியில் மிக அதிகமாகவே காணப்படுகிறது. ஏற்கனவே குறிப்பிட்டது போல் மனிதன் இயந்திரங்களோடு இயந்திரமாகவே வாழ்கிறான். இயந்திரம் தொடர்ந்து உபயோகிக்கும் போது தேய்ந்து விடுவது போல மனித உடலும் சீக்கிரமே தேய்மானமாகி விடுகிறது. இன்றைய வாழ்வியல் முறையில் இளமையிலேயே முதுமை அடைவது அதிகரித்து வருகிறது. முன்பெல்லாம் வயது முதிர்ந்தவர்களுக்கு வரும் வியாதிகள் அனைத்தும் இப்போது சிறுவயதிலேயே வந்து விடுகிறது. இளவயதில் நீரிழிவு (Diabetes), உயர் இரத்த அழுத்தம் (Hypertension), இருதயத்தைப் பாதிக்கும் கொலஸ்ரோல் (Cholesterol), Heart Block போன்றவை வருவது சர்வசாதாரணமாகி விட்டது. இந்த பயங்கரத்திலிருந்து விடுபட்டு உடலையும், மனதையும் நன்கு காத்து வாழ வேண்டியது நமது கடமை. உடல் நலமும், மனவளமும் மிக்கவர் தான் சிறந்த மனிதராக வாழமுடியும். இதற்கு தியானப் பயிற்சிதான் சிறந்த வழி.

### தியானம் செய்பவர்கள் கவனத்திற்கு!

முதலில் குடியிருக்கும் இடத்திலோ அல்லது வேறேதும் அமைதியான வணக்கத்தலத்திலே, பொருத்தமான ஒரு இருக்கையில் அமரவேண்டும். அடிக்கடி இடத்தை மாற்றுவது பலன் தராது. ஆரம்ப நாட்களில் மனம் ஒருவழிப்படுவது சற்று கடினமாயிருந்தாலும் நாளடைவில் இலகுவாகிவிடும். உடலைத் தூய்மையாக வைத்திருத்தல் முக்கியமானது. சுகாசனத்திலோ, பத்மாசனத்திலோ அல்லது வஜ்ராசனத்திலோ அமர்ந்தபடி கண்களை இலேசாக மூடியபடி இருக்கவும். அப்போது மனம் அங்கும் இங்குமாக அலை பாய்ந்து கொண்டிருக்கும். ஆரம்ப நாட்களில் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு அதுபோன போக்கிலே விடவேண்டும். பின்பு அது படிப்படியாக அமைதியடைவதை காணமுடியும். சில சமயம் அதன் வேகம் அதிகரிக்கலாம். இடையிடையே தூங்குவது போன்ற உணர்வும் ஏற்படலாம். இவ்வாறு மனநிலையில் பல மாறுதல்கள் ஏற்படும். இதையிட்டு மனம் சஞ்சலப்படாது தொடர்ந்து முயற்சியுடன் பயிற்சியும் செய்ய வேண்டும்.

அதன்பின் மனதில் சிலமாறுதல்கள் தென்படும் போது அதை ஒருமுகப்படுத்தும் பயிற்சிகளை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு மிக இலகுவான வழி சரசுவாசத்தில் மனத்தை ஒருங்கச் செய்வது அதாவது மூக்குதுவாரத்தின் வழியாக நடைபெறும் உள், வெளி சுவாசத்தின்மேல் மனதை குவித்தல் (Focus) இலகுவான வழிமுறையாகும். இதனை தினமும் மனம் தளராது கடைப்பிடிக்கும் போது மன ஒருமைப்பாடு மேலோங்கி மனோசக்தி அதிகரிக்கும், தன்னம்பிக்கை வளரும், நினைத்த காரியங்கள் கைகூடும். மனம் செம்மைப்பட்டு உடலின் ஆரோக்கியம் பிறக்கும்.

### பிற்குறிப்பு

தியானப்பயிற்சி பழக ஆரம்பிக்கும் போது ஒரு குருவின் வழிகாட்டலின்படி செய்வது தான் பலன் தரக்கூடியது. தியானம் பழக ஆரம்பிக்குமுன் பிராணாயாமம் என்னும் மூச்சுப் பயிற்சியை சற்றுநேரம் செய்வது தான் சிறந்த முறையாகும்.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4




ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

TBC Toronto Business College

DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
Duration: 35 Weeks (co-op available)

Business Administration
Duration: 26 Weeks

Computerized Accounting
Duration: 26 Weeks

Medical Office Admin.(MOA)
Duration: 32 Weeks

Personal Support Worker(PSW)
Duration: 26 Weeks (NACC Diploma)

SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள்?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்
(திருப்பிச் செலுத்தத் தேவையில்லை)
Second Career மறுக்கப்பட்டவர்கள்
New Immigrants are also Welcome

Certificate Courses
MS Office 2010, Quick Books 2011
Simply Accounting 2011, Accpac 5.6
Canadian Securities Course
Online Stock Trading
Bank Teller, First Aid & CPR
Food Handler Certification

OACC PROUD MEMBER

416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)



# அடமானக்கடன் பெறும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

களினாலேயே தெருக்கள், போக்குவரத்து வசதிகளிற்குரிய செலவுகள், தண்ணீர் போன்றவற்றிற்குரிய செலவுகளிற்காக பாவிக்கப்படுகின்றது. புதிய Proposal இரண்டு மடங்காக இருந்தாலும், பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படி, Development Charge அதிகரிக்கலாம். ஆனால் இருமடங்காக இருக்காது என கருத இடமுண்டு. ஏற்கெனவே நகர சபையில் ஆட்சியிலிருந்த திரு. David Miller, Toronto land transfer tax என்ற இரண்டாவது நிலமாற்றுவரியை கொண்டுவந்தவர் என்பது நினைவு கொள்ளத்தக்கது.

**2012 ஜூலை 09 ஆம் திகதி கொண்டுவரப்பட்ட அடமானக்கடனின் மாற்றாக**

1. அடமானக்கடன் திருப்பி கொடுக்கும் காலம் 30 வருடத்திலிருந்து 25 வருடமாக குறைக்கப்பட்டது.

2. ஆதனத்தைப்பாவித்து பெறும் கடனின் அதிக அளவானது வீட்டின் பெறுமதியின் 85% இலிருந்து 80% ஆக குறைக்கப்பட்டது.

3. ஒரு மில்லியனிற்கு அதிக பெறுமதியான வீடுகளுக்கு CHMC நிறுவனத்தினால் காப்புறுதி வழங்கப்படமாட்டாது.

4. மொத்த வருமானத்தின் 39% வரை மட்டுமே அடமானக்கடனிற்காகவும் + சோலை வரிக்காகவும் மற்றும் மொத்தவருமானத்தின் 44% வரை மட்டுமே அடமானக்கடன் + சோலைவரி + மற்றைய கடன்களிற்காக பாவிக்கலாம். [GDS 39%, TDS 44%]

# சமூக ஊடாடல் அச்சம்!

## AGORAPHOBIA

வீட்டுக்கு வெளியே செல்லப்பயந்து வீட்டுக்குள் முடங்கிக் கிடப்பவர்கள் பலரை தினசரி பார்க்கிறோம். சிலர் இதனை கூச்ச உணர்வுடன் உள்ளதாக எண்ணுவர். ஆனால் உண்மையில் இது கூச்சமல்ல. மிகவும் மோசமான சூழ்நிலைக்கு கொண்டு செல்லக்கூடிய சமூக ஊடாடல் அச்சநோய் (Social anxiety disorder) என்று எவருக்கும் தெரிவதில்லை. ஆயிரக்கணக்கான அச்ச உணர்வுகள் உண்டெனினும் சமூக ஊடாடல் அச்சமே மிகவும் மோசமானதாகும்.

சமூக ஊடாடல் அச்சத்திற்கான 'Agoraphobia' என்ற ஆங்கில சொல்லின் மூலவேர் கிரேக்க மொழியாகும். 'Agora' என்பதன் கருத்து மக்கள் கூடும் இடம், சந்தை என்பதாகும். எனினும் வெளியே செல்வதற்கும், திறந்த இடங்களில் செல்லவும், வீதிகளில், தனிப்பட்ட இடங்களில் செல்லவும் ஏற்படும் பயமே இதுவாகும். படிப்படியாக கடைகள், தேவாலயங்கள், தியேட்டர்கள், பொதுப்போக்குவரத்துக்கள், நெருக்கமான இடங்கள், பலர் கூடும் பெரிய அறைகள், நீண்ட வரிசை போன்ற இடங்களில் நுழைய பெரிய அச்சம் ஏற்படும். பொதுவாக ஏழுபேரில் ஒருவர் இப்படியான அச்சமுள்ள வர்கள் என கணிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடாடல் அச்சம் மிகவும் சிக்கல் வாய்ந்த தொன்றாகும். இவர்கள் வேலைத்தளங்களில் வேலை செய்யவும், சமூக தொடர்புகளிலும், குடும்ப வாழ்விலும், பிரயாணங்களிலும் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்வர். இதனால் சிலருக்கு பீதி (Panic) ஏற்படுவதும் உண்டு. சிலவேளைகளில் பிள்ளைகளுக்கு கூட



இப்படி ஏற்படலாம். இதனை 'School phobia' என அழைப்பர். 'பிள்ளை பாடசாலைக்கு கள்ளம் படுத்துகிறார்' என பொதுவாக கூறுவதெல்லாம் இந்த நோய் பற்றியதையேயாகும். அப்படியான பிள்ளைகளுக்கு சிகிச்சை தேவைப்படுகிறது.

பொதுவாக இப்படியான அச்சமுள்ளவர் களை இனம் காணும்போது பல அடையாளங்கள் தேவைப்படும். வயது வந்தவர்களிடையிலேயே பொதுவாக வரும் இப்பிரச்சினையின் போது அவர்களுக்கு பதட்டம், நெஞ்சு படபடப்பு, வாய் திக்குதல்,

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# சங்க இலக்கியத்தில் காதல் கோலங்கள்

காதலனே என் உள்ளம் நிறைந்தவன் பரந்து விரிந்த மார்பகத்தை உடைய அவனது அழகே தலைவி யைக் கொள்ளை கொண்டதோ?

அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்
குணம்பொள் அருவிக் கான்கெழு நாடன்
மணம்கமழ் வியன்மார்பு அணங்கிய செல்லல்
இதுஎன அறியா மறவரற் பொழுதில்
'படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தக்கை
நெடுவேட் பேண தணிகுவள் இவள் என,
முதவாய்ப் பெண்டிர் ஆவாய்க் கூற,
களம் நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி,
வளநகர் சிலம்பம் பாடிப் பலி கொடுத்து,
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்,
முருகுஆற்றுப் படுத்த உருகெடு நடநாள்,
ஆரம் நாற, அருவிடர்த் ததைந்த சாரல்
சாரல் பல்பூ வண்டுபடச் சூடி
களிற்று - இரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்து இயங்கும் மரபின் வயப்புலி போல,
நல்மனை, நெடுநகர்க் காவலர் அறியாமை
தன்நசை உள்ளத்து நம்நசை வாய்ப்ப,
இன்உயிர் குழைய முயங்குதொறும் மெய்ம்மலிந்து,
நக்கனென் அல்லெனோ யானே – எய்த்த
நோய்தணி காதலர் வர, ஈண்டு
ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே?
அகநாநூறு 22 (வெறிப்பாடிய காமக்கன்னியர் -பெண்புலவர்)

பரந்து விரிந்த அவனது நறுமணம் கமழும் மார்பினை உடைய அவர் குன்றும் குன்று சார்ந்த இடமாகிய குறிஞ்சி நிலத்தின் தலைமகனாவான். அங்கு காந்தர்வக் கன்னிகள் அல்லது காதல் தேவதைகள் உலாவும் வான்முட்ட உயர்ந்து நிற்கும் மலைக்குன்றின் உச்சியில் இருந்து வீழும் நீர்வீழ்ச்சி அந்தக் காந்தர்வக் கன்னியர்களினால் ஆட்கொள்ளப்பட்டதுவோ. அன்னைக்கு தன்மகளின் நடத்தையில் ஐயம் ஏற்படுகின்றது. எனவே காதல் கடவுளருக்கு மடைபரப்பி அந்தத் தீய தேவதையை



ஓட்டிவிடவேண்டும் எனப் பெற்றமனம் எண்ணுகின்றது. அதனால் அவள் மந்திரம் செபித்து தனது மகளைப் பீடித்துள்ள அந்தப் பிசாசை விரட்ட நினைக்கின்றாள். உண்மையை அறிந்து இறைவனை வணங்குவதற்கும் அதற்கேற்ற யாகத்தைச் செய்வதற்கும் ஏற்ற இடத்தைத் தெரிவுசெய்யும் படி காதல்வயப்பட்ட தலைமகளின் அன்னை கட்டளை இடுகின்றாள். இது மலைவாள் மக்களின் மரபாதல் வேண்டும். தனது மகளைப்பீடித்துள்ள பிசாசை ஓட்ட வேண்டும் எனத் தாய்மனம் எண்ணுவதில் தவறில்லையே? இங்கே அதற்காக குறிஞ்சிக்குமரன் அதாவது எதிர்ப்படும் அனைத்தையும் தவிடுபொடியாக்கக் கூடிய நீண்ட வேலை உடைய முருகனை வழிபட்டு அதனை அகற்ற நினைக்கின்றாள் அன்னை. அதற்கான ஒழுங்குகளையும் செய்கின்றாள். இதற்கு பண்டைய பிசாசை விரட்டும் கலையை நன்கறிந்த மலைக்குறத்தியை அழைத்து இதனைச் செய்வதற்கு அன்னை ஆயத்தங்களைச் செய்கின்றாள். அதற்கு சந்தனக் கட்டைகள் அவியில் இட்டு இரத்த தானம் முருகனுக்குச் செய்வது வழக்கமாக இருந்துள்ளது. இதனை அறிகின்றாள் தலைமகள். அவளது மனமோ மேலும் துன்பமடைகின்றது. அது நடக்க இருக்கும் அதே நடுயாமத்தில் 'எனது காதலன் வண்டுகள் மொய்க்கின்ற நறுமணம் வீசும் புத்தம் புதுமலரால் புனைந்த மாலையை அணிந்து யாரும் அறியாவண்ணம் நடுநிசியில் ஒரு யானையைக் கொல்லுவதற்காக மிகப் பலம்பொருந்திய வேங்கை நகருவது போன்று மலை இடுக்குகளிடையே மறைந்து மறைந்து வருவார். அவரது இதயம் காதலால் நிறைந்திருக்கும். எனக்கு வேண்டியதை அவர் செய்வார். எனது இனிமை நிலை அப்படியே இன்ப மகிழ்வில் உருகி எனது உடலெல்லாம் உணர்ச்சியில் ததும்பி சிரிப்பொலி எழுப்ப அவர் எனது பிரிவு நோயை அகற்ற வருவார். அவர்கள் சொல்வது போன்று பிசாசை அகற்றுவதற்கு

**- த. சிவபாலு -**
B.Ed (Hons), M.A

முருகனை வழிபடுவதால் அது நடக்கப்போவதில்லை. அன்னை எங்கே என் துன்பத்தை அறியப்போகின்றாள். அவள் அறியாள். ஏன் தலைவன் வந்தால் தான் என் துயர் நீங்கும்' எனத் தோழிக்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது.

குறிஞ்சி மகளிரின் காதல் ஏக்கம். இந்த அருமையான கவிதையை வெறிபற்றிய காமக்கண்ணியர் என்னும் பெண்பாற்புலவர் தந்துள்ளார் எனின் பெண்ணின் நிலையை நன்கு அறிந்த பெண்ணின் உணர்வின் வெளிப்பாடாகக் கொள்ளல் பொருத்தமே!



# சமூக ஊடாடல் அச்சம்!

15ஆம் பக்கத்தொடர்ச்சி

வயிறு குமட்டல், தலைவலி, மூச்சுவிட கடினம், உடல் நடுக்கம், காது இரைச்சல் ஏற்படலாம். பதட்டம் கூடியவர்கள் செத்துப் போய்விடுவோமோ! என பதறுவர். பொதுவாக பெண்களுக்கு இப்பிரச்சினை அதிகம் ஏற்பட்டாலும் ஆண்கள் மத்தியிலும் கணிசமான அளவு உண்டு. பல பெண்கள் வைத்தியசிகிச்சை பெற முயல்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடாடல், அச்சம், உடல் உணர்வுகள் மாறி பீதியுணர்வு (Panic) எழுவதால் ஏற்படுகிறது. சமூகபயம், உதவியின்மை, தர்மசங்கடநிலை, என்பவற்றால் இது வலுவடையலாம். பொதுவாக 18-35 வயதுக்கு இடையில் இது ஏற்படலாம். எனினும், 10 வருடங்களுக்கு கூட அவர்கள் சிகிச்சை பெற முயற்சிப்பதில்லை. எனவே, பாடசாலை வயதிலிருந்து படிப்படியாக இது கூடிச் செல்கிறது. பாடசாலைப் பதட்டம் என்பது பிள்ளைகள் இருட்டில் செல்ல பயம் கொள்ளல், பெற்றோரைவிட்டு பிரிந்து செல்ல முடியாமை போன்றன. அத்துடன் பெரியவர்களாகும் போது பெற்றோரை அல்லது துணைவரை இழந்துவிடுதல், ஆஸ்மா நோய், காக்கை வலி முரண்மூளை, மகப்பேற்றில் பிள்ளை இறந்து விடுதல், கர்ப்ப முற்றவேளை கடுமையான சத்திரசிகிச்சை, வேலையிழப்பு, தனிமையில் விடல் என்பவற்றில் இவ் அச்சம் கூடுகிறது. அவுஸ்திரேலியர் ஒருவரின் ஆய்வில் குளிர் மாதங்களைவிட கோடை காலத்தில் இவ் அச்சம் கூடுதலாக குறிப்பிடுகிறார்.



சிலர் வீதிகளை கடக்கும் போதும், பஸ்நிறுத்தம் இடங்களிலும், சனம் நிரம்பிய கடைகளிலும் இவ் அச்சம் அதிகரிப்பதாக கூறியுள்ளனர். இவர்களது பீதிகள் ஏற்படும் இடங்கள் ஆராயப்பட்டவேளையில் பின்வருமாறு அமைந்தன. ஓட்டோவில் பயணம் 15%, வேலை 9%, வீடு 8% பொது இடங்கள் 8%, உணவுச்சாலை 8%, பாட-சாலை 7%, வீட்டுக்கு வெளியே செல்ல 7%, பாலத்தில் 4%, பொதுப்போக்குவரத்தில் 4%, வீதிகளில் 4% என கணிக்கப்பட்டுள்ளது. இதனை Phobia Comprehensive summary of modern treatment என்ற நூல் மூலம் அறிய முடிகிறது. இத்துடன் வீதியில் வாகனம் செலுத்துதல், விமானத்தில் பிரயாணம் செய்தல், உயரத்தில் நிற்றல், மின்தூக்கிகளில் செல்லுதல், முன்பு அறியாத இடங்களில் நிற்றல் என்பவற்றிலும்



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 24ஆம் பக்கம்

AA +Duct & Carpet Cleaners

Duct Cleaning
Free Sanitizing
Work Guaranteed




நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்

Heavy Duty Equipment
Real High Pressure Cleaning
Remove Mold Yeast & Bacteria

$49.99
2 Rooms &
Hall Way

Carpet Cleaning

Call: Chandran
647.779.9531 / 416.871.1921

# "தமிழ் சினிமா நல்ல பாதையில் சென்றுகொண்டிருக்கிறது"



## நேர்காணல்: விஜய் சேதுபதி

### சந்திப்பு: சிவதானு

தமிழ் சினிமா கதாநாயகனுக்கு என்று ஒரு முகம் இருக்கிறது. ஊருக்குள் எங்கு அக்கிரமங்கள், அநீதிகள் நடந்தாலும் அங்கு அவன் இருப்பான். வேல்கம்பு, வீச்சரிவாளோடு பத்து பேர் எதிர்த்து நின்றாலும், நிராயுதபாணியாக நின்று அனைவரையும் வெல்வான். பெண் யாராவது மானபங்கப்படுத்தப்பட்டால் அங்கு வந்து அவள் மானம் காப்பான். நல்ல கருத்துள்ள பாடல்கள் பாடுவான். தேசப்பற்று அதிகம் உள்ளவன். இன்னும் இன்னும் புரையோடிப்போன தமிழ் சினிமா கதாநாயகனின் இந்த முகத்தில் சமீபகால தமிழ் சினிமாக்களில் ஏராளம் மாறுதல்கள். குறிப்பாக, இந்தக் கதாநாயகன் மற்றும் நடிகனுக்கான பிம்பங்களை சட்டை செய்யாமல் முன்னேறுகிறார் நடிகர் விஜய் சேதுபதி!

தமிழ் சினிமாவில் சின்ன, சின்ன வேடங்களில் நடித்து வந்தவர். 'தென்மேற்கு பருவக்காற்று' படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார். சமீப 'சூது கவ்வும்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் தன் முத்திரையை அற்புதமாக பதித்துள்ளார். தற்போது ஒரே நேரத்தில் நான்கு திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் ஒரே நடிகர் இவர்தான். 'பத்மினியும் பண்ணையாரும்' திரைப்பட படப்பிடிப்பில் இருந்தவரை 'விளம்பரம்' இதழுக்காக சந்தித்து உரையாடினோம். எல்லா கேள்விகளுக்கும் விரைவாகவும் நறுக்கென்று சுருக்கமாகவும் விடையளித்தார் விஜய் சேதுபதி.

முதலில் உங்களைப் பற்றி சுருக்கமாக எங்கள் கனடா வாசகர்களுக்கு அறிமுகம் செய்துகொள்ளுங்கள்?

நல்லது. நான் பிறந்தது ராஜபாளையம். படித்தது எல்லாம் சென்னையில்தான். பி.காம். முடித்த பிறகு இரண்டு வருடங்கள் சென்னையில் ஒரு நிறுவனத்தில் வேலைப் பார்த்தேன். அப்புறம், ந.முத்துசாமியின் கூத்துப்பட்டறை நாடக அமைப்பில் இரண்டு வருடங்கள் அக்கவுண்டன்ஸாக கழிந்தது. அங்கே நடக்கும் நாடக ஒத்திகைகளைப் பார்த்துக்கொண்டிருப்பேன். நாடக நடிகர்களுடன் நல்ல நட்பு இருந்தது. அப்போதுதான் நடிப்பு என்றால் என்ன என்று தெரிந்துகொண்டேன். கூத்துப்பட்டறை நடிகர்களுக்கு தமிழ் சினிமாவில் ஒரு நல்ல வரவேற்பு உருவானபோது, நாமும் நடிக்கலாம் என முடிவு செய்தேன். நடிக்க வாய்ப்புத் தேடி பல இயக்குனர்களைப் பார்த்தேன். இயக்குனர் சீனுராமசாமியின் இயக்கத்தில் அறிமுகமானேன். அதன்பிறகு நடந்தது எல்லாம் உங்களுக்குத் தெரியும், உங்கள் வாசகர்களுக்கும் தெரிந்திருக்கும்.

தற்போது தமிழில் புதிதாக திரைப்படம் இயக்க வரும் இளம் இயக்குனர்களில் பெரும்பாலோர் உங்களையே கதாநாயகனாக முன்மொழிகிறார்கள் என்கிறார்கள். உங்களிடம் அவர்களைக் கவர்ந்தது எது என நினைக்கிறீர்கள்?

நான் நல்ல கதைகளாக தேர்ந்தெடுத்து நடிக்கிறேன். எனக்கு பிடித்தமான கதையாக இருந்தால் அது எந்த இயக்குனராக இருந்தாலும் நடிப்பேன். புது இயக்குநர்களுக்கு இது பிடித்திருக்கலாம். தமிழ் சினிமா கதாநாயகன் என்றால் பத்து பேர் சேர்ந்து வந்தாலும் அடிக்கக்கூடியவன் என்பதுதான் நிதர்சனம், சில நேரங்களில் அடிபட்டாலும் பிறகு திருப்பியடிப்பார்கள். கடைசியில் வெல்வது கதாநாயகனாகவே இருக்கும். ஆனால், நீங்கள் 'சூது கவ்வும்' படத்தில் கடைசிவரை அடிவாங்குபவராக வருகிறீர்கள். அந்த கதைப்படி நான் அடிவாங்கனும் என்று இருக்கும்போது நான் அடிவாங்கித்தானே ஆகனும். நான் பெரிய நட்சத்திர நடிகன், அடியெல்லாம் வாங்கமாண்டேன் என்று எப்படி சொல்ல முடியும்? என்னைப் பொறுத்தமட்டில் எனக்காக கதையை மாற்றுங்கள் என்று சொல்லமாட்டேன். கதைக்காக என்னை மாற்றிக்கொள்வேன்.

இனி வரும் படங்களிலும் இந்த உறுதி தொடருமா?

நிச்சயமாக தொடரும். எந்த வேஷமானாலும் ஏற்று நடிப்பதுதானே ஒரு நடிகன் முன்னால் இருக்கும் சவால். உங்கள் குடும்பப் பின்னணி?

தற்போது மனைவி, இரண்டு குழந்தைகளோடு சென்னையில் வாழ்கிறேன். பொதுவாக தமிழ் சினிமாவில் இரண்டு மூன்று படங்கள் வெற்றிபெற்றுவிட்டாலே நடிகர்கள் ரசிகர் மன்றங்களை ஆரம்பிப்பார்கள். அடுத்து அரசியல் கனவு காண்பார்கள். நீங்கள் எப்படி?

நான் இதுவரைக்கும் ரசிகர் மன்றம் ஆரம்பிக்கவில்லை. இன்னும் உயரத்துக்குச் சென்றாலும், தொடர்ந்து படங்கள் வெற்றிபெற்றாலும் ரசிகர் மன்றம் ஆரம்பிக்கவே மாட்டேன். நான் நல்லா நடித்தால் கன்னியாகுமரியிலே இருக்கும் பார்வையாளர்களும் ரசிப்பார்கள். கனடாவில் உள்ள தமிழர்களும் ரசிப்பார்கள். இடையில் ரசிகர் மன்றம் எதற்கு?

நீங்கள் சொந்தப் படம் தயாரிக்கப்போவதாக செய்திகள் வருகிறது?

அது உண்மையான செய்திதான். கூடிய சீக்கிரமே நான் தொடங்கும் படம் விளம்பரம் வெளியாகும். கண்டிப்பாக புதுமுக இயக்குனர்களுக்குத்தான் வாய்ப்புக் கொடுப்பேன்.

தற்போதைய தமிழ் சினிமாவின் போக்கு எப்படி இருக்கிறது?

நான் ஹீரோவாகியிருக்கிறேன். என்னையே ஹீரோவாக ஏற்றுக்கொண்டார்கள் என்றால் தமிழ் சினிமா நல்ல பாதையில் போய்க் கொண்டிருக்கிறது என்றுதானே அர்த்தம்.


சில்லாலை சமூக கலாச்சார கனடாச் சங்கத்தின் வருடாந்த கோடைகால ஒன்றுகூடல்

**காலம்:** ஆடி மாதம் 27ம் திகதி சனிக்கிழமை 2013
**நேரம்:** காலை 9:00
**இடம்:** ***Morningside park, Area 7, (Ellesmere and Morningside Ave.)***

தொடர்புகளுக்கு: 416.296.9220 / 416.629.6468 / 416.509.9319


**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# தமிழ் தேசிய...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

மகேந்திரன்: மக்கள், அரசியல் கட்சிகள், அதிகார வர்க்கம், அரசாங்கம் என நான்கு பிரிவுகள் உண்டு. அரசாங்கம் கொள்கைகளை தீர்மானிக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக அரசாங்கம் செயற்படவேண்டும் என அரச-ியலமைப்புக் கூறுகின்றது. அரசியல் கட்சிகள் மக்கள் உணர்வுகளுக்கு பயப்படுகின்றார்கள். மக்கள் உணர்வுகள் அதிகமாகும் பொழுது சூழ்ச்சிகள் மூலம் உணர்வுகள் அடக்கப்படுகின்றன. சிவசங்கர் மேனன் யார்? மக்கள் பிர-திநிதியா? ஈழப்பிரச்சினையை தீர்க்க முடியாத மனித நேய நாடாக இந்தியா மாறி விட்டது. நேருவின் காலத்தில் இருந்தே ஈழத் தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் நெருக்கமான தொடர்பு இருந்தது. இந்தியாவை அவர்கள் இரண்டாவது தாய்நாடாகவே கருதினார்கள். செல்வநாயகத்தை 'ஈழத்துக் காந்தி' என இந்தியாவுடன் தொடர்பு படுத்தியே கூறுவார்கள். வட-கிழக்கு மக்கள் இந்தியாவை நேசிக்கின்றார்கள். சோனியா, மன்மோகன்சிங் பாரம்பரியமறியாதவர்கள். ஒருவர் வெளிநாட்டுக்காரர், மற்றவர் பொருளாதாரக்காரர்.

ரதன்: இன்று அமெரிக்காவாக இருக்கட்டும், இந்தியாவாக இருக்கட்டும் ஒரு system தான் ஆட்சி செய்கின்றது. ஆட்சித் தலைவர்கள் வெறும் பொம்மைகளே. இதனை எவ்வாறு உங்களது கட்சி எதிர்க்கின்றது?

மகேந்திரன்: இந்திய அரசாங்கம் குறிப்பிட்ட பாதையில் செல்கின்றது. சூழல் மீறப்படும் பொழுது அதுவும் மீறுகின்றது. பங்காளதேசத்தை தனிநாடாக மாற்றும் பொழுது பங்காளதேசத்தில் உள்ள அமைப்பிற்கு ஆயுதங்களை வழங்கி போராட்டத்தை வெடிக்கவைத்து பின்னர் அதனை தனிநாடாக மாற்றினார்கள். இந்திரா காந்தி இருந்த காலத்தில் ஜெயவர்த்தனாவை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். இந்தியா தமிழ் மக்களுக்கு எதிராக ஆயுதங்களை கொடுத்து கொல்ல வைத்தது. ஏழு கோடி தமிழ் மக்களின் ஆசையை நிராசையாக மாற்றிவிட்டது. தமிழ் மக்களுக்கு ஆதரவான கட்சி மத்தியில் ஆட்சி அமைக்க வேண்டும். இந்த சிஸ்ரத்தில் உள்ள குறைபாடுகளை களைந்து ஈழ மக்களின் தீர்வுகளுக்காக செயற்பட சாத்தியங்கள் உண்டு.

ரதன்: ஈழப்பிரச்சினையில் மட்டுமல்லாது, வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களின் நிலையில் மாற்றங்களை கொண்டுவர சாத்தியங்கள் உள்ளதா?

மகேந்திரன்: இன்று கோப்பிரேட் நிறுவனங்களது காலம். பொருளாதார வளர்ச்சி இரண்டு நிலைகளில் உள்ளது. ஒன்று தொழில் மூலமானது. இரண்டாவது நிதி மூலமானது. இந்தியாவைப் பொறுத்தவரை தொழில் மூலதனம் குறைவானது. பங்குச் சந்தைகள் மூலம் நிதி மூலதனங்கள் பெருகின்றன. உண்மையான உற்பத்தி இங்கில்லை. பொய்யான ஒரு கட்டுமானத்தை நிதி மூலதன வளர்ச்சி ஏற்படுத்தும். இந்திய பணக்காரர்கள் உலக பணக்காரர்களாக மாறுகின்றனர். அரசியலமைப்பின் பிரகாரம் இந்தியா ஒரு welfare nation. அரசியலமைப்புக்கு முரணாகவே இந்தியா இயங்கிக் கொண்டுள்ளது. சீனாவில் மனித வளம் அனைத்தையும் பயன்படுத்துகின்றார்கள். அதனால் அவர்கள் நல்ல வளர்ச்சியடைகின்றார்கள். உலகமயமாதல் ஏழைகளையும் ஏழை நாடுகளையும் அதிகரிக்கின்றன.

ரதன்: வட இந்தியாவில் தொடரும் நக்சலைட் போராட்டங்களை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

மகேந்திரன்: செயற்கை கோள்கள் மூலம் பழங்குடி மக்களது வளங்களை கண்டறிந்து அதனை சட்ட விரோதமாக பெரும் நிறுவனங்கள் அரச உதவியுடன் பறிக்கின்றன. இதனை தனி நபர்கள் எதிர்க்கும் பொழுது அங்கே மாவோயிஸ்ட்டுகள் உதவி செய்கின்றார்கள். இதனால் அங்கு ஒரு மக்கள் போராட்டமே தோன்றுகின்றது.

ரதன்: இலங்கைக்கு பல முறைகள் சென்றுள்ளீர்கள். மூன்று புத்தகங்களையும் எழுதியுள்ளீர்கள்.

மகேந்திரன்: இலங்கை ஒரு அழகான நாடு. பொருளாதார வளங்களைக் கொண்டுள்ள நாடு. நல்ல மனிதர்கள் வாழும் நாடு. இராஜபக்சவிற்கு முன்பே பல தலைவர்கள் தமிழ் மக்களை அழித்துள்ளார்கள். இன வெறி அரசியல் மக்களை வெகுவாக பாதித்துள்ளது. தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படும் பொழுதே இலங்கை மக்கள் முன்னேற்றம் சாத்தியப்படும்.

ரதன்: ஈழத் தமிழ் படைப்பாளிகளை நீங்கள் நன்கறிவீர்கள். உங்களை பாதித்தவர்களைப்பற்றிக் கூறுங்கள்.

மகேந்திரன்: தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ் படைப்பாளிகளுக்கு என்றுமே இடமுண்டு. எஸ்.பொ, டொமினிக் ஜீவா, டானியல், மு.தளையசிங்கம் போன்ற பெரும் பட்டியலே உண்டு. தமிழ் விமர்சன உலகிற்கு முக்கியமாக கைலாசபதி, சிவத்தம்பி இவர்களுடன் நு.்.மான் ஆகியோர் ஆற்றிய பங்களிப்பு முக்கியமானது. இப்பட்டியல் மவுனகுரு என நீண்டு செல்கின்றது. 83க்கு பிறகு புலம் பெயர் படைப்பாளிகள் competitive studies ஆக படைப்புக்களை படைக்கின்றார்கள். தமது துயரங்களை வலி-களை இயல்பாக வெளிப்படுத்துகின்றார்கள். இணையத்தளத்தில் தமிழின் முக்கியத்துவத்துக்கு ஈழத் தமிழர்களே காரணம். உலகில் இணையத் தள மொழிகளில் முதல் பத்து இடங்களில் தமிழும் ஒன்று. இந்திய மொழிக-ளில் தமிழ் தான் முதலிடம். இதற்கு பிரதான காரணம் புலம் பெயர் ஈழத்தமிழர்களே. இவர்களுடன் புலம் பெயர் தமிழ்நாட்டுத் தமிழர்களும் கணிசமான அளவு பங்களித்துள்ளார்கள். முள்ளிவாய்க்காலின் பின்னர் மிகச் சிறந்த இலக்கியங்கள் உருவாகிவருகின்றன. இன்னமும் 50 ஆண்டுகளில் தமிழ் மொழி ஈழத் தமிழ் படைப்பாளி களால் உலகின் தலை சிறந்த இலக்கியமாக மாறும். இரண்டாம் உலகப்போரின் பின்னர் ஐரோப்பாவில் பெரும் மாற்றங்களே ஏற்பட்டது. புதிய கலை வடிவங்கள் படைப்புக்கள் உருவாகின. சினிமா, நாடகம், கவிதை என புதிய படைப்புலகமே உருவானது. அதேபோன்ற நிலை தமிழுக்கும் ஈழத்தமிழ் படைப்புக்களால் உருவாகும். நடனக் கலைஞர் பிரேம் கோபாலின் நடனத்தின்-நடிப்பின் வீரியம் Art Fire ஆக கலைத் தீயாக வெடித்தது. இதுபோன்ற பல படைப்பாளிகளும், படைப்புக்களும் தோன்றும். ஏனென்றால் இவர்கள் கொண்டுள்ளது துயரம், பெரும் துயரம்.

ரதன்: தமிழ் நாட்டில் அதிக கவனத்தை ஈர்த்த சோபா சக்தியின் படைப்புக்களை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

மகேந்திரன்: சோபா சக்தியின் மீது எனக்கு மதிப்பில்லை. பின் நவீனத்துவம் கட்டுடைத்தல் போன்ற கொள்கைகள் மூலம் கொல்லப்படும் மக்களையும் அவர்களது வாழ்வையும் கொச்சைப்படுத்தலை ஏற்றுக் கொள்ளமுடியாது. இது ஒரு விதண்டாவாதமாகவே படுகின்றது. பேரினவாதிகளுக்கு



ஆதரவாகவே இப்படைப்புக்கள் உள்ளன. புலம் பெயர் தமிழர் ஒருவர் தமிழ்நாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் ஈழத் தமிழ் மக்கள் சிங்கள தேசிய கீதத்தை இசைப்பதில்லை என புகார் கூறினார். இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். சிங்கள தேசிய கீதம் மனிதர்களைப் பற்றிப் பேசவில்லை. மரங்களைப் பற்றியும் செடிகளைப் பற்றியுமே பேசுகின்றது. மனிதர்களைப் பற்றிப் பேசாத தேசிய கீதத்தை மனிதர்களைப் பாடச்சொல்வதே தவறானது. ஆதிக்க சக்தியை எதிர்க்காத படைப்புக்களும் படைப்பாளிகளும் இலக்கியத்தில் பரிமளிக்க முடியாது.

ரதன்: இறுதியாக 1959ல் இருந்து 'தாமரை' இதழ் தொடர்ச்சியாக வெளிவருகின்றது. இதன் வெளியீட்டில் சந்திக்க நீங்கள் சந்திக்கும் பிரச்சினைகள் என்ன?

மகேந்திரன்: 'தாமரை' ஜீவாவால் ஆரம்பிக்கப்பட்டது. இன்று பெரிய விளம்பரங்கள் இல்லை. பெரிய நிறுவனங்களிடம் செல்ல விருப்பமுமில்லை. அப்படியிருந்தும் சுமார் 10 ஆயிரம் வாசகர்களைக் கொண்டுள்ளது. சகல மக்களுக்காகவும் இதனை இணையத் தளத்தில் வெகு விரைவில் கொண்டுவருகின்றோம். உலகமயமாதலின் பின்னணி மனிதத் தன்மையை முற்றாக நிராகரித்து விட்டது. நுகர்வியத்தை அடிப்படையாகக் கொண்டு வாழும் சமூகத்தின் மறுபக்கத்தை நெறியாக்க அதன் போராட்டத்தை வழிநடத்த தாமரை தொடர்ந்து கொண்டிருக்கும்.



PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE

AVAILABLE FOR RENT
Starting from $100.00

Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

GTA Square Mall (FINCH & MIDDLEFIELD) தொடர்புகளுக்கு: 416.917.6883

# வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் தமிழ்விழா

வடஅமெரிக்கத் தமிழ் சங்கப் பேரவையின் 26 ஆவது வருட தமிழ்விழா கனடியத் தமிழர் பேரவையுடன் இணைந்து யூலை 4, 5, 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் கொண்டாடப்பட்டது. இவ்விழா ரொறொன்ரோவில் உள்ள சொனி (Sony) நடுவத்திலும் அதன் அருகில் உள்ள Novotel Hotel இல் இருந்த கருத்தரங்கு அறைகளிலும் நடைபெற்றது. சொனி நடுவம் கனடாவின் மிகப்பெரிய சொகுசு இருக்கைகளைக்கொண்ட அரங்கு என்பது குறிப்பிடத்தக்கது. அரங்கில் மட்டுமே 3,200 பேர் அமரலாம், அதைச் சுற்றியுள்ள மண்டபங்கள் இன்னும் பல ஆயிரக்கணக்கானோரை கொள்ளும்.

யூலை 4 ஆம் நாள் தமிழ் விழாவிற்கு வெளிநாடுகளில் இருந்து வந்த பிரமுகர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர் மற்றும் தமிழ்விழா அனுசரணையாளர்களுடன் கலந்துரையாடல்களும் விருந்துபசாரமும், கலைநிகழ்வும் நடைபெற்றன.

யூலை 5, 6 நாட்களில் சொனி நடுவத்தின் மண்டபத்தில் பொருட்காட்சிகள் நடைபெற்றன. அதில் சிறப்பாக தனிநாயகம் அடிகள் பற்றிய பல ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மற்றும் அக்கால அமெரிக்க கடற்படைக்கு கப்பல்கள் கட்டுவதற்கு முன்மாதிரியாக இருந்த



வல்வெட்டித்துறை தமிழர் கட்டி வாணிபம் செய்த கப்பலான அன்னபூரணியின் 75 ஆவது ஆண்டை கொண்டாடும் ஆவணங்களும் மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ரொறொன்ரோவில் இருந்து இந்தியா சென்று தமிழ் மொழி பற்றிய ஆய்வுகள் செய்து வந்துள்ள பேராசிரியர் பிறண்டா பெக் அவர்களின் வெளியீடான ‘பொன்னி வள’ என்ற தமிழ் கதை சிறுவர்களுக்கு ஏற்ற பல வடிவங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கலாநிதி பிறண்டா பெக் யாழ்ப்பாணத்தில் 1974 இல் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டு தமிழில் பேசியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைவிட பல நிறுவனங்களின் தகவல் நிலையம், கனடிய தமிழர் பேரவையின் தகவல் நிலையம், நாடுகடந்த தமிழீழ அரசின் தகவல் நிலையம், உலகத்தமிழர் பேரவையின் தகவல் நிலையம் என்பனவும் இருந்தன.



யூலை 5 ஆம் நாள் விழாக்கள் சொனி நடுவத்தின் அரங்கில் மங்கல இசை, மங்கல விளக்கேற்றல், தேசிய கீதம், தமிழ் தாய் வாழ்த்து என்பவற்றுடன் காலை 9 மணிக்கு ஆரம்பமானது. அதை தொடர்ந்து நகைச்சுவை நிகழ்ச்சி, கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதே நேரம் Novotel Hotel இல் இளையோரிற்கான நிகழ்ச்சிகள், தொழில் முயற்சிகள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள், தமிழிசை போட்டிகள் போன்றவை இரவு 11.00 மணிவரை நடைபெற்றன.

சொனி நடுவத்தில் மாலை நிகழ்வுகளில் தனிநாயகம் அடிகளின் விவரணக் காணொளி, தமிழ் ஆரம் நூல் வெளியீடு என்பன நடைபெற்றன. ‘No fire zone’ காணொளியும் அதன் இயக்குனர் திரு. கலம் மக்றேயின் பேச்சும் நடைபெற்றன. அதன் பின்னர் தமிழ்விழா நிகழ்வுகள் 5:30 மணியில் இருந்து 8.00 மணிவரை கனேடிய தமிழர் தேசிய அவையின் கரும்புலிகள் தின நிகழ்விற்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

8:00 மணிக்கு தாயகமக்களின் வலியை எல்லாருக்கும் உணர்த்தும்வண்ணம் பிரேம் கோபாலின் “ஒரு பேரரசனின் புலம்பல்” நடனம் இடம்பெற்றது. அதை தொடர்ந்து தமிழருவி மணியனின் சிறப்புரை ஒளிபரப்பப்பட்டது. இவற்றை தொடர்ந்து மதுரை முரளிதரனின் ஆக்கத்தில் கல்கியின் ‘சிவகாமியின் சபதம்’ நாடகம் நடந்தது. இதில் தமிழக கலைஞர்களுடன் உள்ளூர் கலைஞர்களும் சேர்ந்து 125 இற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றியிருந்தனர். இந்நாடகத்தில் நாகநந்தியாகவும், புலிகேசியாகவும் இரண்டு வேடங்களை ஏற்று நடித்த முரளிதரனின் நடிப்பும் நங்கை சிவகாமியாக நடித்த முரளிதரனின் மகளின் நடிப்பும் மிகவும் மெச்சக்கூடியதாக இருந்தன. ஒரு காட்சியில் நாகநந்தி, புலிகேசி இருவரும் சேர்ந்து தோன்றும் மேடை அமைப்பு மிகவும் சிறப்பாக கையாளப்பட்டிருந்தது. இவற்றைவிட ஆயிரம் ஆண்டு காலத்திற்கு முந்தைய நகர மண்டபங்கள் அழகாக வரையப்பட்டும் அதில் நீர்வீழ்ச்சி போன்ற அசையும் தொழில்நுட்பம் சேர்க்கப்பட்டிருந்த முறையும் மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு முயற்சியாகும். நாகநந்தியின் காவி உடையும், வழுக்கை தலையும், நீண்டகாதும் எவ்வாறு ஒரு புத்தபிக்குவை நிஜமாக மேடைக்கு கொண்டு வந்ததோ அதேபோல் நடராஜரின் அலங்காரத்திலும் சிறிது கவனம் செலுத்தியிருக்கலாம். நடராஜரிற்கு புலித்தோலும் பாம்பும் மட்டுமல்லாமல் நீண்டசடை மிகவும் முக்கியம். நடராஜர் மிகவும் சிறப்பாக தனது பாத்திரத்தை செய்திருந்தாலும் கட்டையாக வெட்டப்பட்ட தலைமுடி ஆடுபவர் நடராஜர் என்ற எண்ணத்தை மனதில் தோற்றுவிக்கவில்லை. மகேந்திரவர்மன் பாத்திரமேற்று நடித்த சுரேஸ் ராஜாவிற்கு தொலைக்காட்சி இரசிகர்களுக்கு வழமையாக தெரிந்த கேலியும், விகடமாகவும் பேசுவதும் மட்டுமல்லாமல் ஒரு குணச்சித்திர பாத்திரம் ஏற்று முக்கிய அரசவேடத்திலும் நடிக்கவும் தெரியும் என தனது நடிப்பின் மூலம் வெளிக்காட்டியிருந்தார். முரளிதரன் தனது நடிப்பாலும், இயக்கத்தாலும் சொனி நடுவத்தின் அரங்கத்தில் நிறைந்திருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட இரசிகர்களின் மனத்தை கவர்ந்து விட்டார். நாடகம் சரியாக 11 மணிக்கு நிறைவெய்தியது.

யூலை 6 ஆம் நாள் விழாக்கள் சனிக்கிழமை காலை சரியாக 9 மணிக்கு தேசிய கீதம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் சொனி நடுவத்தின் அரங்கில் ஆரம்பமானது. அதை தொடர்ந்து ரோபோ சங்கரின் நகைச்சுவை விருந்து, நடிகை ஓவியாவின் பேட்டி என்பன நடைபெற்றன. மினிசோட்டா தமிழ்சங்கத்தின் சிறுவர்களின் வில்லுப்பாட்டில் ‘தீரன் சின்னமலை’ யின் கதை நடைபெற்றது. இதில் பங்குபற்றிய சிறுவர்கள் அழகான நல்ல தமிழ் உச்சரிப்புடன் பாடியிருந்தனர். அதைத்தொடர்ந்து ஏழாவது வருடமாக இலக்கிய வினாடி வினா நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் நல்ல தமிழல் இலக்கியக்வினாக்கள் கேட்கப்பட்டாலும் நிகழ்ச்சித் தயாரிப்பு சரியாக நடைபெற்றிருக்கவில்லை. தொழில் நுட்பக் கோளாறு அடிக்கடி நிகழ்ச்சிக்கு தடங்கலைக் கொடுத்தது. இயக்குனர் மற்றும் நடிகருமான சமுத்திரக்கனியின் தலைமையில் ‘நட்பு’ பற்றி ஒரு விவாதம் நடைபெற்றது. நட்பு ஒருவரை கண்டவுன் ஏற்படுகிறது என ஒரு சாராரும் மற்றவருடன் பழகி அவரைப்பற்றி அறிந்த பின்னர் தான் நட்பு வருகிறது என இன்னொரு சாராரும் வாதிட்டனர்.

இதேநேரம் Novotel Hotel இல் காலை 8:30 இல் இருந்தே மருத்துவ நிகழ்வு, தமிழ் தேனி போட்டிகள், FeTNA பொதுக்கூட்டம், A Gun & A Ring படத்தின் சிறப்பு நிகழ்வு



அருந்ததி ஞா.


தொடர்ச்சி 24ஆம் பக்கம்




TRIDEL®
BUILT FOR LIFE
NEW PROJECT
By Tridel
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc.,
Brokerage*
AQUALINA
AT BAYSIDE TORONTO
SPECIAL
VIP
PACKAGE
Occupancy
Fall 2016
COMING SOON | CONTACT NOW
FOR MORE INFORMATION CALL:
HomeLife/GTA
Realty Inc., Brokerage*
* Independently owned and operated.
416-321-6969
FRONT ST. E
YONGE ST.
LOWER JARVIS ST.
LOWER SHERBOURNE ST.
PARLIAMENT ST.
GARDINER EXPY
LAKESHORE BLVD. E
QUEENS QUAY E
AQUALINA
LAKE ONTARIO
Design By: Saras Studios 647-919-2420

# செங்கடல் ஒரு வெறுங்கடல்

பலத்த எதிர்பார்ப்பின் பின் அந்த நாளும் வந்தது. முதலில் ஒரு தடவை மொன்றியலுக்கு போக முடியாமையினால் தவறவிட்டுவிட்டேன். இம் முறையும் ஒரு நீண்ட விடுமுறை வாரத்தில் அதுவும் திங்கள் மதியம் ஒரு மணிக்கு நடைபெற்றது. திரைப்படம் தொடங்குவதற்கு 30 நிமிடங்கள் முன்பாகவே சென்று விட்டேன். அ. முத்துலிங்கம் படத்தின் திரைக்கதை வசன நூலை வெளியிட நன்றிகள், பாராட்டுக்களின் பின் ஆவலுடன் எதிர்பார்த்த படம் ஆரம்பமாகியது. ஆவலை எதிர்பார்ப்பை ஏற்படுத்திய படம் செங்கடல். படத்திற்கு எதிராக விமர்சனங்கள் தடைகள் என பல வகை விளம்பரங்கள். தொடர்ச்சியாக முகநூல் வரவேற்புக்களினால் ஒரு எதிர்பார்ப்புடனேயே திரையரங்கிற்கு சென்றிருந்தேன்.




இப்படத்தின் கதை வசனகர்த்தா தோழர் சோபா சக்தி 'கொலையும் கலையும்' என்ற கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'உண்மை நிகழ்வுகளைச் சொல்வதால் மட்டுமே ஒரு சிறந்த திரைப்படத்தை உருவாக்கிவிடமுடியாது.

**யுத்தத்தின் பல்வேறு அரசியற் பரிமாணங்களையும் பகுத்துப் பார்ப்பதற்கு நுண் அரசியற் பார்வைகளும் மனித உணர்வுகளுக்குள் ஆழச் சென்று ஊடுருவும் படைப்பு நுட்பமும் இல்லாமல் வெள்ளைத் திரை முழுவதும் சிவப்புச் சாயத்தை அள்ளி விசிறி, நிமிடத்துக்கு நிமிடம் திரையில் வெடிகுண்டுகளை வெடிக்க வைத்துக் குறுக்கு மறுக்காக இராணுவ வாகனங்களை ஓடவிட்டு யுத்தப் பின்புலத்தைக் கொண்டுவந்தால் திரையில் கலை வராது, புகைதான் வரும்...... வெளியிலிருந்து வரும் இனவாதத்தை எதிர்த்து நிற்கும் அதே வேளையில் தனது சொந்த இனத்தைச் சேர்ந்த அரசியற் சக்திகளின் இனவாதத்திற்கு / மனித உரிமைகள் மீறலுக்கு எதிராகவும் படைப்புக்கு உள்ளும், படைப்புக்கு வெளியேயும் குரல் கொடுத்து நிற்பது தான் படைப்பாளிக்கு அறம்.........**

ஒரு திரைப்படம் இவ்வாறு இருக்க வேண்டும் எனக் கூறிய சோபா சக்தி வசனம் எழுதிய படம் இன்னமும் சிறப்பாக இருக்க வேண்டும். அந்த அதிசயத்தை திரையில் நிகழ்த்தினார்களா.. படம் பல விடயங்களை தொடுகின்றது. இலங்கை அகதிகள், இராமேஸ்வர மீனவர்கள், படைப்பாளியின் சுதந்திரம், படைப்பாளியின் தனிமை போன்ற விடயங்களை பேசமுற்படுகின்றது. பிரச்சினையைப் பற்றி பேசுகின்ற படங்கள் அப்பிரச்சினை பற்றிய விடயங்களை அவற்றின் பின் புலங்களை ஆராய்ந்து படமெடுக்க வேண்டும். இணையத்தள பின்னூட்டங்களில் பதிலெழுதுவதன் மூலம் படத்தில் கருத்துக்களை இணைக்க முடியாது. படம் முழுவதும் தவறான பார்வைகள். லீனா மணிமேகலை நடித்து பி.சிவக்குமார் இயக்கிய 'வெள்ளைப் பூனை' படத்தில் பூனை ஒரு தனிமை போக்கும் கருவியாக செயல்படுகின்றது. இப்படத்தில் லீனா ஒரு சிறு ஆமையை வைத்திருப்பார். இங்கும் அவரது தனிமையைப் போக்கும் கருவியாக ஆமை உள்ளது. (இவ் ஆமை இப்பகுதிகளில் இல்லை என இணையத் தளங்களில் நிரூபிக்கின்றார்கள்). ஆராட் என்ற உலகப் புகழ் பெற்ற கனடிய படத்தில் ஆர்மேனியாவில் படம் பிடிக்கப்பட்ட காட்சிகள் உள்ள வீடியோவை விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் பரீட்சிப்பார்கள். அப்போது படம் விரியும். இங்கே பொலிசுகாரர் பரீட்சிக்கின்றார். படத்தில் பல காட்சிகள் பல படங்களின் தழுவலாகவே இருந்தது.

இந்திய மீனவப் படகில் கமராவை கொண்டு செல்லும் ஒருவர் இலங்கை கடற்படையைக் கண்டவுடன் மீனுக்குள் புதைத்துவிடுகின்றார். இலங்கை கடற்படையினர் கண்களில் இருந்தும் கமரா தப்பிவிடுகின்றது. அப்படி இருட்டில் இருந்த கமரா எவ்வாறு இலங்கை கடற்படை அடிக்கும் காட்சிகளை படம் பிடிக்கின்றது. லீனாவிற்குத்தான் வெளிச்சம்.

அகதிகள் குடிசைகள் கட்டப்பட்ட பகுதிக்குள்தான் வாழ்கின்றனர். பின்னர் ஒரு கட்டத்தில் சிமென்ட் வீடு ஒன்றிலும் வாழ்கின்றனர். Continuity மிக மோசமாகவுள்ளது. இலங்கை அகதிகள் இந்தியாவில் மிக மோசமான நிலையில் உள்ளனர். இதனை நேரிலும் கண்டுள்ளேன். இப்படத்தைப் பார்க்கும் பொழுது அகதிகள் ஓரளவு சுதந்திரமாக வாழ்வதாகவே காட்டப்படுகின்றது. ஒருவர் குடிவரவு அலுவலகத்தில் பதியாமல் மூன்று வருடம் வாழ்கின்றார். பிள்ளைகள் பாடசாலைக்கு செல்கின்றனர். பாடசாலைக்கு செல்வதற்கு குடிவரவு பத்திரங்கள் தேவை. லீனா படம் பார்ப்பவர்களை முட்டாள்கள் என நினைக்கின்றாரோ?

இந்திய மீனவர்கள், பெரிய ரோலர் படகுகளைக் கொண்டு இயங்கும் முதலாளிகளால் பாதிக்கப்படுகின்றார்கள். இவர்கள் ரோலர் படகுகளால் அதிக மீன்களைப் பிடிப்பதனால் சிறு மீனவர்கள் மீன்களைத் தேடி நடுக்கடலுக்குச் செல்கின்றனர். இது இலங்கை மீனவர்களுக்கும் நடக்கின்றது. இந்தியப் படகுகள் இலங்கைக்கு கரைக்கு வந்தும் மீன்களைப் பிடிக்கின்றன. இதன் பின்னணி யில் தி.மு.க, அ.திமு.க முதலாளிகள் உள்ளனர். இது தனக்குத் தெரியும் எனக் கூறும் லீனா படத்தில் இதைப்பற்றி எதுவும் கூறவில்லை. இப்படத்தின் பின் உள்ள அரச பலம், தாதாக்களின் பணம் என்பவற்றை விளங்கிக் கொள்ள இதைவிட வேறு என்ன வேண்டும்?

லீனா தான் படம் பிடித்த படச்சுருள்களை பாதுகாப்பு அதிகாரிகளிடம் கொடுத்து விடுகின்றார். அப்படியாயின் இப்படம் எவ்வாறு படம் பிடிக்கப்பட்டது. ஒரே குழப்பமாக உள்ளது. இரானிய இயக்குனர் Jafar Panahi ன் 'This is not a film' என்ற படம் அவர் மீது தடை உள்ளபோது எடுக்கப்பட்டு ஒரு பென்றைவில் பதியப்பட்டு கேக்குனுள் வைக்கப்பட்டு உலக பட விழாக்களுக்கு பயணமானது. லீனாவின் 'செங்கடல்' பொலிசார் வழங்கிய படச்சுருளை வைத்து பாதுகாப்பு அதிகாரிகளுடன் உடன்பாட்டிற்கு வந்த பின்னர் அவர்களுக்கு சார்பாக எடிட் செய்யப்பட்ட படம். லீனாவின் டயறியில் திகதிகள் கூட இல்லை. இதன் வடிவத்துக்கு பலர் சண்டையிடுகின்றார்கள். இது எந்த வகையையும் சாராத ஒன்று. இந்திய மசாலாப்படங்களில் கூட திரைக் கதை நேர்த்தி இருக்கும். இதில் அதுவெதுவுமில்லை.




## வானரன்

மீனவர் பற்றியும் அகதிகள் பற்றியும் துாரதர்சன், சன் செய்திகள், ஜெயாச் செய்திகள், பிபிசி செய்திகள் போன்றவை தொடர்ச்சியாக செய்திகளை வெளியிடுகின்றன. அவ்வாறான ஒரு செய்தியாகவே இப்படம் உள்ளது. இப்பட விமர்சனங்களுக்கு லீனா முக நூலில் அளித்த பதில் வேடிக்கையானது. I am amazed by Srilankan Tamil Intellectuals?! who argue that Indian Tamil fishermen deserve to be killed because some of them use trawler boats! Using trawler nets/boats is not only dangerous for Srilankan Fishermen, but also to Indian fishermen. விமர்சனங்களுக்கு பதிலளிப்பதை விட்டு மீனவர்கள் கொல்லப்படுவதற்கு ஆதரவு வழங்குகின்றோம் என்று கூறுவதெல்லாம் ஒரு நல்ல படைப்பாளிக்கு அழகல்ல.

தமிழ்த்தேசிய பிரச்சினை பற்றி பல படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இருந்து எடுக்கப்பட்ட பல படங்கள் எமது பிரச்சினையை முழுமையாக அறியாமல் வியாபாரத்துக்காக எடுக்கப்பட்டுள்ளன. இப்படமும் அதற்கு விதிவிலக்கல்ல. சிங்கள இயக்குனர்கள் பல படங்களை எடுத்துள்ளனர். இவர்களது சில படங்களை நாம் உடன்படாவிட்டாலும், இவர்கள் பிரச்சினையின் ஆழத்தை அறிந்துள்ளது தெளிவாகத் தெரிகின்றது. ஒரு சில மாதங்களுக்கு முன் செங்கடல் திரையிட்ட அதே அரங்கில் திரையிடப்பட்ட 'With you. With out you' என்ற படம் நல்லதொரு உதாரணம். இப்படம் இந்திய மீனவர்களுக்கும் இலங்கை அகதிகளுக்கும் எதிரான படம். இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுத் தயாரிப்பு. இப்பட இயக்குனர் மீனவர்களின் பிரச்சினைக் காக படமெடுக்கவில்லை, புகழுக்கும் பணத்துக்காகவுமே படமெடுக்கின்றார் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969

# நினைவுகள்

## இயக்குனர் மணிவண்ணன்

## கோபுரங்கள் சாய்வதில்லை

மார்க்ஸிய - பெரியாரிய சிந்தனைகளின் மீது கொண்ட தீவிரப் பற்று, தமிழ் தேசிய அரசியல் மீது கொண்டுள்ள பிடிப்பு, 'ஈழம்' என்றாலே சிறைவாசம் என்ற நிலையிலும் மிரளாமல் தமிழகத்தில் 'விடுதலைப்புலிகள்' ஆதரவு பேசி வந்த தீரம் என தமிழ்த் திரையினருக்குள் வித்தியாசமாகத் தெரிந்தவர் இயக்குநரும் நடிகருமான மணிவண்ணன். இயக்குநர், நடிகர், ஓவியர், பாடகர், களப்பணியாளர் என்று பன்முகங்களை கொண்ட பிரபலம் என்றாலும் எளிமையான தோழர்!



- ஃபிலிம் நியூஸ் கிருஸ்ணன் -

மணிவண்ணனின் சொந்த ஊர், கோவை மாவட்டத்தில் உள்ள சூலூர். தந்தை பெயர் ஆர்.எஸ். மணியம் என்கிற சுப்பிரமணியம். தாயார் மரகதம்மாள். பெற்றோர் இருவருமே அரசியலில் அக்காலங்களில் பிரபலமாக இருந்தனர் என்பதால், பெற்றோரிடமிருந்து அரசியல் ஈடுபாடு இயல்பாகவே மணிவண்ணனுக்கும் வந்தது. இடதுசாரி கருத்துகள் மீது கொண்ட ஈடுபாட்டால், தன் இளமைக் காலங்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 'தீக்கதிர்' பத்திரிகையில் இணைந்து பணியாற்றினார் மணிவண்ணன். அதன்பிறகு திரைத்துறை மீது ஆர்வம் ஏற்பட சென்னைக்கு வந்தார். (தன் கடைசி காலம் வரையிலும், என்ன வேலையாக மதுரை சென்றாலும் 'தீக்கதிர்' அலுவலகத்திற்குப் போகாமல் திரும்ப மாட்டாராம்.) சென்னை வந்த மணிவண்ணனுக்கு இயக்குநர் பாரதிராஜாவின் அறிமுகம் கிடைத்தது. 'கல்லுக்குள் ஈரம்' படம் தொடங்கி பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராக பணியாற்றினார். பின்னர், பாரதிராஜா படங்களின் பிரதான எழுத்தாளராக உயர்ந்தார். 'நிழல்கள்', 'அலைகள் ஓய்வதில்லை', 'காதல் ஓவியம' போன்ற பாரதிராஜாவின் அக்கால வெற்றிப் படங்கள் பலவற்றுக்கு மணிவண்ணன்தான் வசனகர்த்தா.

மணிவண்ணன் இயக்கிய முதல் படம் 'ஜோதி'. மோகன், அம்பிகா நடிப்பில் உருவாக்கி வந்த இப்படம் பாதியிலேயே நின்று போனது. இந்நிலையில், மணிவண்ணன் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்த இளையராஜா, கலைமணியிடம் அறிமுகப்படுத்தி வைத்து, 'இவரை வைச்சு படமெடு. நான் உடனே மியூஸிக் போட்டுத் தரேன்' என்று வாக்குறுதி அளிக்க, கலைமணியின் தயாரிப்பில் 'கோபுரங்கள் சாய்வதில்லை' படத்தை இயக்கினார் மணிவண்ணன். மோகன், ஸில்க் ஸ்மிதா நடித்திருந்த இப்படம் வெள்ளிவிழா கண்டது. தொடர்ந்து 'நூறாவது நாள்', '24 மணி நேரம்', 'பாலைவன ரோஜாக்கள்', 'முதல் வசந்தம்', 'அமைதிப்படை', 'தெற்குத் தெரு மச்சான்' என பல வெற்றிப் படங்களைத் தந்து தமிழின் முன்னணி இயக்குநர்களில் ஒருவரானார். 'இனி ஒரு சுதந்திரம்' - தோல்வியடைந்தாலும் மணிவண்ணனின் பெயர் சொல்லும் படம். தமிழ் தவிர, தெலுங்கு, இந்தி, மலையாளத்திலும் படங்கள் இயக்கியுள்ளார் மணிவண்ணன்.

இவரது கடைசிப் படம், 'அமைதிப்படை' திரைப்படத்தின் இரண்டாம் பாகமாக எடுக்கப்பட்ட, 'நாகராஜசோழன் எம்.ஏ., எம்.எல்.ஏ.' இப்படத்துக்குப் பிறகு, 'தாலாட்டு மச்சி தாலாட்டு', 'நூறாவது நாள் - பாகம் 2', 'பணம் படுத்தும் பாடு' என மூன்று புதிய படங்களை இயக்க ஒப்பந்தமாகியிருந்தார், மணிவண்ணன். ஆனால் அதற்குள் மரணம் அவரை அழைத்துக்கொண்டு விட்டது.

தீவிர அரசியல் பார்வை கொண்டவர், பகுத்தறிவு சிந்தனையாளர் என்றாலும் வழக்கமான தமிழ் சினிமா வியாபாரப் படங்களைத்தான் மணிவண்ணன் எடுத்திருக்கிறார். இதைப் பற்றிய கேள்விகள் வந்தபோதெல்லாம், 'சினிமாவை சினிமாவாக மட்டுமே நான் பார்க்கிறேன்! அதில் அல்வாவோடு சேர்த்துதான் மருந்தை கொடுக்க வேண்டும். ஒரேயடியாக மருந்தை மட்டுமே கொடுத்தால் அப்புறம் நானே மருந்து சாப்பிட வேண்டி வரும்' என்று பதில் சொன்னார் மணிவண்ணன். 'சினிமாவை சினிமாவாக மட்டுமே' பார்த்தால் மணிவண்ணனின் பங்களிப்பு தமிழ்த் திரையுலகில் நிச்சயம் பெரியதுதான். 'எனக்கு ரொம்பவும் புடிச்ச இயக்குநர் மணிவண்ணன். என்னை நிரம்பவும் பாதித்தவர். இயக்கம் என்ற வார்த்தையே இவரது படங்களில் இருக்காது. அது வெளியில் தெரியாமலேயே இயக்கியிருப்பார்' என்கிறார் இயக்குநர் மகேந்திரன்.

மொத்தம் 50 படங்கள் இயக்கியுள்ள மணிவண்ணன், 400 படங்களுக்கும் மேல் நடித்துள்ளார். பாரதிராஜா இயக்கத்தில் ரஜினி நடித்த 'கொடி பறக்குது' படத்தில் தான் மணிவண்ணன் நடிகராக அறிமுகமானார். 'கொடி பறக்குது' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோது, வில்லன் அரசியல்வாதி பாத்திரம் யார் என்றே முடிவு செய்யாமல், ரஜினி சம்பந்தப்பட்ட காட்சிகளையே முதலில் படமாக்கிக் கொண்டிருந்தார்களாம். அந்தப் படத்தில் வசனம் எழுதிய கையோடு, இணை இயக்குநராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தார் மணிவண்ணன். படப்பிடிப்பு தளத்தில் மணிவண்ணனின் உடல்மொழியைக் கவனித்த ரஜினி, 'அந்த அரசியல்வாதி கேரக்டருக்கு நம்ம மணியையே நடிக்க வைச்சா என்ன? வசன உச்சரிப்புல பின்னுறாரே?' என்று அழுத்தமாக சிபாரிசு செய்ய, நடிகரானார் மணிவண்ணன்.

50 படங்கள் இயக்கியிருந்தாலும், மணிவண்ணன் சம்பாதித்த சொத்துக்கள் எல்லாம், அவர் நடித்த படங்களின் மூலமாக வந்ததுதானாம். இதனால், தன்னை நடிகனாக்கிய நன்றிக் கடனுக்காக தன் மகள் திருமணத்தில் தாலி எடுத்துக் கொடுக்கும் பாக்கியத்தை ரஜினிக்கு தந்து, மேலே குறிப்பிட்ட சம்பவத்தை நெகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்தார் மணிவண்ணன்.

உருக்கமான இந்த நிகழ்வே மணிவண்ணனுக்கும் அவரது குருநாதர் பாரதிராஜாவுக்கும் இடையிலான விரிசலை இன்னும் அதிகமாக்க காரணமானது முரண் என்றுதான் சொல்லவேண்டும். மணிவண்ணன் மகள் திருமணத்தில் தாலி எடுத்துக் கொடுக்கும் கௌரவத்தைத் தனக்குத்தான் 'மணி தருவான்' என பாரதிராஜா கருதியிருந்திருக்கிறார். எனவே, இச்சம்பவத்தின் மூலம் மணிவண்ணன் தன்னை அவமானப்படுத்திவிட்டதாக பாரதி ராஜா கருதினார். அதன்பிறகு ஊடகங்களிடம் பேசிய மணிவண்ணன், "இதுல என்ன ஈகோ வேண்டிக் கிடக்கு? ரஜினிக்கு நான் என் நன்றியைத்தானே செலுத்தினேன்?" என்று சொல்ல, இடைவெளி இன்னும் அதிகமாகி, பின்பு பேச்சுவார்த்தை அற்ற நிலைமைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தது!

பாரதிராஜாவுடனான முதல் விரிசல், காவிரி பிரச்சினை காரணமாக நெய்வேலி மின்சாரத்தை கர்நாடகாவுக்குக் கொடுக்கக்கூடாது எனத் திரைத்துறையினர் நெய்வேலியில் நடத்திய ஆர்பாட்டத்தில் உருவானது. அந்த ஆர்ப்பாட்டத்தின்போது தலைமை தாங்கிய பாரதிராஜா, 'தன்னைத் தவிர வேறு யாரும் அறிக்கைவிடக் கூடாது, ஊடகங்களிடம் பேசக் கூடாது' என அறிவித்திருந்தார். ஆனால், அப்போது வைகோவின் ம.தி.மு.க. கட்சியில் இருந்த காரணத்தினாலும் தமிழ்ப் பற்றாளர் என்ற முறையிலும் மணிவண்ணன் அந்தப் போராட்டத்தின் முக்கியத்துவம் பற்றி பத்திரிகைகளுக்கு பேட்டியளித்தார். இது குருவுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. சிஷ்யன் தன்னை மிஞ்சிவிட்டான் என்ற எண்ணம் கோபமாக உருவெடுத்தது.

நெய்வேலி கூட்டத்தை புறக்கணித்து ரஜினி சென்னையில் தனியே ஒரு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதும், 'ரஜினி ஒரு கன்னடர்' என ரஜினியைக் கண்டித்து பாரதிராஜா அறிக்கை வெளியிட்டார். அப்போது ரஜினிக்கு ஆதரவாக பேசிய மணிவண்ணன், 'கொடி பறக்குது' படத்துல ரஜினியை நடிக்க வைச்சப்போ அவர் கன்னடர்ன்னு தெரியலையா? அப்போ அவரை வைச்சு சம்பாதிச்சிட்டு, இப்போ அவர் கன்னடர், தெலுங்கர் என்று பேசுறது பச்சை சந்தர்ப்பவாதம்' என்றார். இடையில் மனம் உருகும் விதத்தில் அழுதுகொண்டே, தன் குருநாதரிடம் மன்னிப்பு கேட்பதாக, ஒரு வானொலிக்கு மணிவண்ணன் பேட்டியளித்தும், பாரதிராஜா தன் சிஷ்யனை மன்னிக்க தயாராக இல்லை. 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் வாசகர்கள் கேள்விகளுக்கு பதிலளித்து வந்த பாரதிராஜா, மணிவண்ணன் சம்பந்தமான ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் போது, 'மணிவண்ணன் ஒரு பிச்சைக்காரனாக இருந்தவன். அவனை நான் கோடிஸ்வரனாக்கினேன். ஆனால், அவன் பிச்சைக்காரனாக இருக்கத்தான் லாயக்கு' என்ற அர்த்தம் வரும் வகையில் குறிப்பிட்டார். பாரதிராஜாவின் அந்த பதில் வந்ததும் அதைப் படித்து நிறையவே வருத்தப்பட்டிருக்கிறார் மணிவண்ணன். தனது குரு இன்னமும் தன்னை புரிந்து கொள்ளவில்லையே என்று நண்பர்களிடம் சொல்லியவர், பலர் வற்புறுத்தியும் பாரதிராஜாவுக்கு பதிலளிக்க மறுத்துவிட்டார். அது தன் கடைசிகாலம் வரை குருநாதருடன்

சேர முடியாமலே செய்துவிடும் என்றிருக்கிறார். இதற்கு பதில் கேட்டு பல பத்திரிகைகள் முயன்றபோது அவருடைய கைபேசிகள் அணைத்து வைக்கப்பட்டிருந்தன.

ஏற்கெனவே உடல்நலம் குன்றியிருந்த

**தொடர்ச்சி 38ஆம் பக்கம்**


திவ்ய ஆற்றுக்கால் தேவி ஜோதிடம்



திருமணப்பொருத்தம் முறையாகப் பார்க்கப்படும், திருமணத்தடை, குழந்தைபாக்கியம் இன்மை, படிப்புத்தடை, குடும்பக்கலகம் போன்ற தோஷங்களுக்கான பரிகாரங்கள் செய்வதற்கும் பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எதிர்கால கல்வித்தடை நிவர்த்திக்கும் ஆலோசனை வழங்கப்படும்.

Call: Meenakshisundram Ramasamy 416.439.2002

# சமூக...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

ஏற்படலாம். இவ்வாறான அச்சத்தினை உடனே நிறுத்த முடியாது. வழக்கமாக இது நீண்டகால தீராத பிரச்சினையாக கொள்ளப்படினும் சிலவேளை மாறிவிடவும் கூடும். வைத்தியம் செய்யாது விட்டால் மோசமடையலாம். இவர்கள் உலகம் ஒரு ஆபத்தான இடம் (The world as a dangerous place) என எண்ணுவர். மரபு வழியாக இவ்வாறான அச்சம் எழக்கூடும் எனவும் அறியப்பட்டுள்ளது. இந்நோயாளிகள் மது, போதை வஸ்துகளை பாவித்து தப்பித்து கொள்ளவும் முயல்வர். சிலர் தம்முடன் யாராவது இருக்க வேண்டுமென வற்புறுத்துவர்.

பொதுவாக அச்ச உணர்வுள்ளவர்கள் பரபரப்பு கொள்வர். இதனால் வெளியே செல்வதினை தவிர்த்துக் கொள்வர். அல்லது ஒரு துணையை கூட்டிச் செல்வர். பொது இடங்களில் பொலிஸ் இருந்தால், வைத்தியர் இருந்தால் துணிந்து செல்வர். எனினும், உடல்உள ரீதியில் பதட்டம் கூடி இப்படியான சனநெருக்கம், சத்தமுள்ள இடங்கள், கடும் சன நெரிசல், பிரகாச விளக்குகள், இயங்குநிலை இடங்களுக்கு செல்வதினை தவிர்க்கவே விரும்புவர். சிலர் நாய்களையோ, அல்லது குடை, பொருட்கள் ஏற்றும் வண்டி (Trolley), என்பவற்றினையும் கூடவே கொண்டு செல்வர். சிலருக்கு இவ் அச்சமானது பதட்டம் (Anxiety), மிகையுணர்ச்சி (Hysteria), முரண்மூளை (Schizophrenia) என்பவற்றையும் ஏற்படுத்தி விடும். சில புதுமையான அச்ச உணர்வுகளும் உள்ளன. சலூன் கதிரையிலும், அழகுபடுத்தும் நிலைய கதிரையிலும், பல் வைத்தியரது கதிரையிலும், நிர்வாணமாக குளித்தல் என்பவற்றால் கூட பயம் கொள்வர். சிலருக்கு பாலியல் பலவீனம் (Sexual dysfunction) ஏற்படுகிறது எனவும் அறியப்பட்டுள்ளது.

பொதுவாக அச்ச உணர்வு உள்ளவர் பீதி (Panic)யால் தாக்கமுறுவர். இவர்களும் மயக்கமுறல், மரணபயம், ஏனையவர்களின் நோய்களை காணுதல், மாரடைப்பு என்பவற்றிற்கு பீதியடைவர். சிலர் ஒன்றுதல் (Obsessions) என்ற பாதிப்புக்கு உள்ளாவர். அடிக்கடி கைகளை கழுவுதல், பூட்டுக்களை இழுத்து பார்த்தல் போன்றவற்றினை செய்வர். எல்லாமே ஒருவகை பயத்தால் எழுவதுதான். சமூக நிகழ்வுகளுக்கும், திருமணங்களுக்கும் இவ்வகை அச்ச உணர்வினர் செல்ல அஞ்சுவர். நண்பர் வீடுகள், பொருட்கள் வாங்குதல், வேலைக்கு செல்ல மறுத்தல் என்பனவற்றை செய்வர். அதற்காக மன்னிப்பும் கேட்பர். அத்துடன் குடிபோதையில் தம்மை மறப்பர். கூடவே உடல் இரசாயன (Bio chemical) மாற்றங்களும் அவதானிக்கப்பட்டன. இவர்களுக்கு Sodium lactate ஊசி ஏற்றப்பட வேண்டியுள்ளது. மனச்சோர்வு, மனப்பதட்டம், மதுபோதைக்கு அடிமையுறல் வாழ்வினையே முற்றாக சிதைத்துவிட வல்லது. துரதிஷ்டவசமாக இவ் அச்சம் உள்ளவர்களை சாதாரணமான கூச்சம் அல்லது வெட்கம் என நினைத்து பலர் கவலைப்படுவதில்லை.

அச்ச உணர்வு உள்ளவர்களுக்கு சிகிச்சை செய்வது மிகவும் கடினமானதொன்று. ஏனைய சாதாரண அச்சம் போன்றதல்ல இது. பல இணைந்த சிகிச்சைகளே தேவைப்படுகின்றன. பல ஆபத்து இல்லாத சூழ்நிலைப் படங்களை திரைப்படங்கள் மூலம் இவர்களுக்கு காண்பிக்க வேண்டியுள்ளது. வீதி வழியே கூட்டி செல்லல், சனநெரிசலுக்குள் அழைத்து செல்லல் செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் நடத்தை சம்பந்தமான சிகிச்சை (Behavior therapy) வேண்டியுள்ளது. மூச்சுப்பயிற்சி, பதட்ட குறைப்பு பற்றி விளக்குதல் போன்றனவும் வேண்டும். அண்மையில் Invivo எனப்படும் சிகிச்சை உள்ளது. முதலில் ஒரு வீட்டிலிருந்து சொற்ப தூரம் அழைத்து சென்று படிப்படியாக தூரத்தினை கூட்டி செல்லுதல் இந்த முறை. இப்படியே பலவற்றிற்கும் படிப்படியாக செல்லுதல் வேண்டும்.

அடுத்து உளவியல் சிகிச்சை (Psychotherapy) யும் சிறிய அளவில் பயன்படுத்தப்படுகிறது. மருந்துகள் மூலமான சிகிச்சை (Drug therapy). இதிலும் மருந்துகளை வழங்கி படிப்படியாக குறைத்தல் அவசியம். எல்லாவற்றினையும் விட சுய உதவி (Self help) மூலம் சிகிச்சையுள்ளது. சில ஆதரவு குழுக்கள் முதலில் நோயாளியை வெளியே அழைத்துச் சென்று பயிற்சி வழங்கி பின்பு சுயமாக இயங்க வைத்தலே இதுவாகும். நீண்ட நாட்கள் எடுத்தாலும் சிறந்தமுறை இதுவாகும். துணைவர்களும், குடும்ப உறுப்பினர்களும் பங்களிப்பு செய்தல் (Involvement of spouses and family member) மிகவும் முக்கியமாகும். இச்சிகிச்சை கூடிய பலன் தரவல்லது. தங்களுக்கு பழக்கமானவர்களுடன் செல்வதால் இவர்களுக்கு அச்சம் குறைகிறது.

தற்போதைய ஆராய்ச்சிகள் சமூக அச்சத்துடன் மனச்சோர்வு, ஆளுமை குறைபாடு, தீவிர உணர்ச்சி என்பவற்றினையும் இணைத்து செய்யப்படுகின்றன. இதனால் சரியான வரைவிலக்கணம், சிகிச்சை முறைகளை கண்டு பிடிக்கலாம் என வல்லுனர்கள் கருதுகின்றனர். Standardized behavior testis அச்ச உணர்வு படிமுறைகள், பதட்டம் பற்றிய குறியீடு என்பன பற்றியும் ஆராய்கின்றனர். அமெரிக்காவில் மட்டும் 15 மில்லியன் மக்கள் அச்சத்திற்குட்பட்டுள்ளதாக தேசிய மனச்சிகிச்சை நிறுவனம் (The national institute of for mental health) கூறுகிறது. அத்துடன் 130,000 உறுப்பினர்கள் இந்நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குகின்றனர்.

ஆண்களை விட இரண்டு மடங்கு பெண்கள் இவ் அச்ச உணர்வால் பாதிக்கப்படுகின்றனர். Benzodiazepines போன்ற நித்திரை குளிசை பாவிப்போர்கள், நீண்ட காலம் மதுவுக்கு அடிமையானவர்கள், புகைபிடிப்போர்களும் கூட இப்பிரச்சினைக்கு உட்படுவர். தற்போது பதட்டத்திற்கு எதிரான மருந்துகளும் Selective serotonin reuptake in liter (SSR) மருந்துபாவனையில் உள. Prozac, piil, zoloft போன்ற மருந்துகள் இதில் அடங்கும். எனினும், தடுமாற்றம், தூக்க உணர்வு, சமநிலை இழப்பு, ஞாபகமறதி என்பனவும் இதனால் ஏற்பட கூடும். எனவே பொதுவான அச்ச உணர்வுகளிலிருந்து சற்று குழப்பமானது இதுவாகும். சமூக அச்சம் (Social phobia), குறிப்பிட்ட அச்சம் (Specific phobia), ஒன்றல் உந்தல் ஒழுங்கீனம் (Obsessive compulsive disorder), கடும் அனர்த்தத்திற்கு பின்னான ஒழுங்கீனம் (Postraunmatic disorder), பதட்ட ஒழுங்கீனம் (Anxiety disorder), பீதி ஒழுங்கீனம் (Panic disorder) எல்லாமே ஒன்றுடனொன்று தொடர்புள்ளவை. ஒவ்வொன்றும் சிறிய சிறிய வேறுபாடுள்ளவை. எனவே சரியான சமூக ஊடாடல் அச்சம் (Agoraphobia) எது என்பதனை அறிந்தே சிகிச்சை தேவைப்படும். Philip didier என்ற விஞ்ஞான எழுத்தாளர் (1928-1982), Brian Wilson என்ற சங்கீத வல்லுனர் (1942), Kim Banger என்ற நடிகை (1953) H.L. Gold என்ற விஞ்ஞான எழுத்தாளர், உளவியலின் தந்தை சிக்மண்ட் பிராய்ட் போன்றோர் கூட இந்த அச்சத்தினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

சாதாரண பயம் (Fear) போலன்றி அச்சம் (Phobia) என்பது மூளையுடன் நெருங்கிய தொடர்புள்ளது. 2000 க்கும் மேற்பட்ட அச்ச உணர்வுகள் உள்ளதாக மதிப்பிட்டுள்ளனர். சாதாரண கரப்பான் பூச்சி முதல் வெளியே சந்தைக்கு செல்வது வரை எத்தனையோ அச்ச உணர்வுகளுக்கு பலர் உட்பட்டுள்ளனர். இந்த நூற்றாண்டின் முக்கிய ஆய்வே இவ் அச்ச உணர்வு பற்றியதாகும்.

# வடஅமெரிக்கத்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பன நடைபெற்றன. மதிய உணவின் பின்னர் சொனி நடுவத்தின் அரங்கில்



தமிழ் இசைக்கலா மன்றம் நடத்திய வாத்திய இசை நிகழ்ச்சி, மிகூரி தமிழ்ச்சங்கம் நடத்திய நாடகம், தவில் நாதசுவர இசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. தமிழ் தேனி போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசளிப்பும் நடைபெற்றது.

மாலை நடைபெற்ற Vijay TV புகழ் நந்தாவின் 'தண்ணீர்' நடன நிகழ்ச்சி தமிழ் விழாவில் நடைபெற்ற நிகழ்வுகளில் மிகவும் சிறந்த ஒரு நிகழ்வாக இருந்தது என்றால் மிகையாகாது. விஷ்ணுவின் தசாவதாரம் நிகழ்வுகளை நடித்துக்காட்டி அதன் தொடர்பாக தண்ணீரின் மிகப்பெரிய சக்தியும் நடிப்பு மூலம் வெளிக்காட்டப்பட்டது. மேடையிலும் அதன் முன்பு அலைகளாக வரஅமைக்கப்பட்ட திரைகளும் நன்றாக இருந்ததுடன் அழகான முறையில் எந்த ஒரு தடங்கலும் இல்லாமல் கையாளப்பட்டிருந்தது. அதன்பின்னர் நடைபெற்ற மனுவல் ஜேசுதாசனின் 'வேந்தனின் சீற்றம்' நாட்டுக்கூத்து ஒலிவாங்கி சரியாக வேலை செய்யாததால் பார்வையாளர்களுக்கு விளங்குவது சிரமமாக இருந்தது. இந்நாட்டுக் கூத்து எதிர்பார்த்ததை விட நீண்டு சென்றதால் இடையில் நிறுத்தப்பட்டது. ஆனால் இடையில் நிற்பாட்டப்படும்போது அறிவிப்பாளர்கள் அக்கூத்தின் கதையை பார்வையாளர்களுக்கு சுருக்கமாக கூறியிருக்கலாம். மனம் விரும்பி திருமணம் செய்த பெண்ணை காதலன் ஏன் கைவிட்டான் என கடைசிவரையில் பார்வையாளர்களுக்கு தெரிவிக்கவில்லை. மனுவல் ஜேசுதாசன் இவ்வாறான நாட்டுக் கூத்துக்களை தனி ஒரு நிகழ்வாக எதிர்காலத்தில் நடத்துவார் என எதிர்பார்ப்போம்.

இரவு உணவின் பின்னர் 8:15 மணியளவில் பிரபல பாடகர் மனோ, சாருலதா மணி, Vijay TV புகழ் சத்தியப்பிரகாஸ், பிரகதி ஆகியோருடன் அக்கினி இசைக்குழுவினரின் நிகழ்ச்சி ஆரம்பித்து இரவு 11:00 மணிவரை தொடர்ந்தது. இந்நிகழ்வில் விஜே ரிவி சுப்பர் சிங்கர் ரொறொன்ரோ கலைஞர்கள் விஜிதா, சரிகா, மற்றும் சாய் ஈசன் ஆகியோரும் பாடிச்சிறப்பித்தார்கள். இந்நிகழ்விற்கு சொனி நடுவத்தின் அரங்கு நிறைந்து வழிந்ததை காணகூடியதாக இருந்தது. வடஅமெரிக்கத் தமிழ் சங்கப் பேரவையின் 26ஆவது தமிழ் விழா ரொறொன்ரோவில்



இனிதாக ஞாயிறு காலை Novotel Hotel இல் நடைபெற்ற கருத்தரங்குகளுடன் நிறைவு பெற்றது.

இந்நிகழ்வுக்கு ரொறொன்ரோ வானொலி மற்றும் தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக பணியாற்றி சிறப்பாக தமது அறிவுப்புகளை செய்திருந்தார்கள்.

# சார்பியல் - 25

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக


## *The happiest thought of my life*

## என் வாழ்நாளின் மிக மகிழ்ச்சியான சிந்தனை

1665 - 1666 காலப் பகுதி, ஐசாக் நியூட்டன் ஈர்ப்பு விதியினை உலகினருக்குக் கொடுத்த காலம். பிரபலமான ஈர்ப்பு மாறிலி G (பெறுமானம் 6.64 10 $^{11}$ Nm²/kg $^{-2}$) யை அதிசயிக்கத்தக்க விதமாக கொடுத்திருந்தார். ஈர்ப்பு மாறிலியின் பெறுமானத்தை எவ்விதம் கண்டறிந்தார் என்பது இன்னமும் தெரியாத ஒன்றென ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஆனாலும் நியூட்டனின் ஈர்ப்பு விதியினை சரியான-தாகக் காட்டிக் கொண்டு நிற்பது இந்த ஈர்ப்பு மாறி லிதான். அதுமாத்திரமல்ல, இந்த மாறிலிப் பெறுமானமானது இயற்பியலின் பல கணித நிறுவல்களுக்கு இன்னமும் துணைசெய்து கொண்டுதான் இருக்கின்றது.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நியூட்டன் எவ்விதம் ஈர்ப்புவிதியினைக் கண்டுபிடித்தார் என்பதற்கு ஒரு கதை யினைக் கூறுவார்கள். உங்களுக்கும் நினைவிற்கு வரலாம். தனது பாட்டனாரின்



தோட்டத்தில் ஒரு அப்பிள் மரத்தின் கீழ் இருக்கையில் அவரது தலையில் ஓர் அப்பிள் பழம் மரத்தில் இருந்து விழுந்தது. இந்த அப்பிள் பழம் ஏன் கீழே விழுந்தது என்று அப்போது 12 வயதுச் சிறுவனாக இருந்த நியூட்டன் சிந்திக்க, அதுவே பிற்காலத்தில் ஈர்ப்புவிதியை கண்டு பிடிப்பதற்கான ஆரம்பமாக இருந்தது என்கிறார்கள். இந்தக் கதை எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியாது. உண்மையில் இப்படி ஒன்று நடந்திருக்குமானால், நியூட்டனின் அந்தச் சிந்தனையானது அற்புதமான ஒன்றாகக்தான் இருக்கும். அவரது வாழ்நாளின் மகிழ்ச்சியான சிந்தனையா-கத்தான் அது இருந்திருக்கும். ஆனால் நியூட்டன் அப்படியாக ஒன்றும் கூறியதாகத் தெரியவில்லை. அல்லாமலும் ஈர்ப்புவிதியைக் கூட, அவரின் நண்பரான ஹேலி என்பவருக்கு கோள்களின் இயக்கம் பற்றிய தெளிவினைக் கொடுப்பதற்கு உதவிய போதுதான் கண்டுபிடித்தார் எனச் சில ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஹேலி வால்வெள்ளிகளைப் பற்றி ஆய்வுகள் செய்து கொண்டிருந்தவர். வால்வெள்ளிகள் கதிரவக் குடும்ப உறுப்பினர்கள் எனக் காட்டியவா. இவரின் பெயரில் ஒரு வால்வெள்ளி கூட, கதிரவனைச் சுற்றி வலம் வருவது உங்களுக்குத் தெரியும். ஹேலி, தனது ஆய்விற்கு உதவியாக, கெப்பிளரின் விதி யின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தித் தருமாறு நியூட்டனைக் கேட்டிருந்தார். அதனை உறுதி செய்ய எடுத்த முயற்றியின் ஆர்வத்திலோ அல்லது கெப்பிளரின் விதி யின் அழகிலோ அதிக ஈடுபாடு கொண்ட நியூட்டன் ஈர்ப்புவிதியினை உலகினருக்குக் கொடுத்தாகச் சிலர் கூறுகின்றார்கள். ஈர்ப்பினைப் பற்றிய ஆய்வில் கெப்பிளருக்கும் பெரும் பங்குண்டு என்று கூறுவார்கள். கதிரவனுக்கும் கோள்களுக்கும் இடையில் ஏதோ ஒரு மர்மமான விசை இருப்பதனாலேயே கோள்கள் கதிரவனைச் சுற்றுகின்றன எனக் கெப்பிளர் கூறியிருந்தார்.

அப்பிள் பழம் விழுந்து நியூட்டனுக்கு மகிழ்ச்சியான சிந்தனையைக் கொடுத்ததோ இல்லையோ, அயன்ஸ்ரைனுக்கு அப்படியான ஒரு சிந்தனை வந்தது. அதுவும் நியூட்டன் கூறியிருந்த ஈர்ப்பு விடயமாகவே வந்தது. 1907ம் ஆண்டு, நவம்பர் மாதத்தின் ஒருநாள் அப்படியான ஒருநாளாக அயன்ஸ்ரைனுக்கு அமைந்து விட்டது. சிறப்புச் சார்புத் தத்துவத்தின் விளைவுகளைப் பற்றி ஆழமாகச் சிந்தனை செய்து கொண்டிருந்த அயன்ஸ்ரைனுக்கு ஈர்ப்பினது சிக்கல் பெரும் தலையிடியாக இருந்தது. ஈர்ப்பினால் விழுகின்ற பொருட்களுக்கு சிறப்புச் சார்புத் தத்துவமானது பொருத்தமில்லை. ஏனெனில் ஈர்ப்பின் விளைவால் இயங்குகின்ற பொருட்கள் மாறாத வேகத்தில் இயங்குபவை அல்ல. வேகவளர்ச்சியைக் கொண்டிருப்ப தால், அவற்றின் வேகம் மாறிக் கொண்டே இருக்கின்றது. இந்த



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

தொடர்ச்சி 34ஆம் பக்கம்


JEN BOOK STORE

*Ontario* பாடத்திட்டத்திற்கு ஏற்ப புத்தகங்கள்

*JK* தொடக்கம் *Gr 12* வரையிலான

அனைத்து பாடப்புத்தகங்கள் (Text Books) மற்றும் அனைத்து செயல்நூல்களும் (Work Books) மிகவும் மலிவு விற்பனையில் உள்ளன. உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்திற்கு நல்லதோர் தொடக்கம் JEN BOOK STORE.

உங்கள் பிள்ளைகள் Math, English, Science ஆகிய பாடங்களில் பின்தங்கி உள்ளார்களா? கவலைவேண்டாம். இலவச ஆலோசனைகளுடனும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஏற்ற புத்தகங்களை கனடாவில் பன்னிரண்டு வருடங்கள் அனுபவமிக்க ஆசிரியர்களால் தேர்ந்து எடுத்து தருகிறார்கள்.




*3011 Markham Road, Unit 58 M1X 1L9*

*TEL: 416.738.8824 / 416.335.1500*

# BASEMENT RENT

**BRIMLEY & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.887.3993 / 647.298.3993

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry 1 ½ washroom. Close to school, bus, shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.280.6145

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.891.5515

**MARKHAM & HIGHGLEN**
Newly finished bsmt at Middlefield & Highglen. 2 Bedrooms, 1 washroom, kitchen, laundry, Sep. entrance. All necessities within walking distance: high school, public school. Avail. August 01, 2013.
647.287.2807 / 905.554.1931
647.717.6643

**BIRCHMOUNT & SCAR. GOLF CLUB**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.628.7879 / 647.748.7879

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.879.1648

**MCCOWAN & STEELES**
Newly Renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, safety Equipment, laundry, parking, good neighbours. Close to TTC, temples, park, school. Small family preferred. Avail. Anytime.
416.710.7122 / 905.294.7122

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Bathroom, kitchen. Near Elementary school, high school & plaza, etc.
தொடர்புகளுக்கு: 416.728.8552

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2013.
647.852.5142 / 647.501.5142

**FINCH & TAPSCOTT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2013.
தொடர்புகளுக்கு: 647.854.2014

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.495.0110

**MORNINGSIDE & MCNICOLL**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.346.8148 / 647.531.6176 / 416.833.3575

**SHEPPARD & WARDEN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, No parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.448.6464

**MCCOWAN & DENISON**
Bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Small family preferred.
தொடர்புகளுக்கு: 647.896.1639

**MORNINGSIDE & MORNINGVIEW**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, school, stores. Avail. August 01, 2013
தொடர்புகளுக்கு: 416.833.8903

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
416.292.5334 / 647.638.8108

**BRIMLEY & STEELES**
1 Bedroom + den bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.505.4316

**14TH AVE. & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
905.554.4783 / 416.918.1025

**WARDEN & HWY 401**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Washrooms. Close to all facilities. Avail. August 01, 13.
416.817.6514 / 416414.0439

**WARDEN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to facilities. Avail. immediately.
416.431.9832 / 416.315.9348

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, bank. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.523.1312

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, bank, mall, TTC. Avail. immediately. Couple preferred.
தொடர்புகளுக்கு: 647.971.1836

**MARKHAM & MAJOR MACKENZIE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
905.294.3260 / 647.708.2101

**MORNINGSIDE & NIGHTSTAR**
**(Close to Nightstar park)**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, huge living room, laundry. Close to TTC, school, mall. No pets & No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.265.9713

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Avail. anytime.
தொடர்புகளுக்கு: 647.296.7932

**BRIMLEY & LAWRENCE**
1 Bedroom bsmt fo rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.448.1411 / 647.628.1410

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.500.4564

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 905.604.6114

**VICTORIA PARK & LAWRENCE**
1 bedroom walk-out bsmt apt. for rent. Cable television, internet, parking. Close to TTC, Wexford Swimming Pool & Wexford High school, Temples & Churches.
416.288.9575 / 647.866.9575

**MORNINGSIDE / SHEPPARD**
Brand new 2 or 1 bedroom bsmt for rent. Sep. entrance. Gardening செய்யும் வசதியும் உண்டு. Malvern mall, TTC, school, library U OF T அருகாமையில் உள்ளன. Small family preferred. No pets & No smoking. Daycare available.
தொடர்புகளுக்கு: 416.834.1081

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking. Close to bus, shopping, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.896.7740

**NEILSON & FINCH**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. Anytime. Family preferred. தொடர்புகளுக்கு: 416.832.6457

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
905.202.6197 / 647.680.7505

**HIGH GLEN & MCCOWAN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.575.5055

**BIRCHMOUNT & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.8086

**LAWRENCE & SCAR. GOLF CLUB**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, Tamil stores. Avail. immediately.
416.438.2857 / 416.728.9580

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: ***416.551.8379***

**PHARMACY & FINCH**
3 Bedroom bsmt for rent. Also 1 bedroom avail. on main floor. Parking, laundry. Close to TTC, schools. இரண்டு நேரச்சாப்பாடும் கொடுக்கப்படும். Avail. August 01, 2013.
416.201.1222 / 416.299.4895

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, hospital. Couple or Girls preferred. Avail. September 01, 13.
தொடர்புகளுக்கு: 416.836.5482

**LAWRENCE & PHARMACY**
Newly renovated 2 bedrooms raised bsmt for rent. Ample sunlight & ventilation throw large windows. Sep. entrance. Big living room, full kitchen & washroom. Close to TTC, school, mall, temples, etc. Affordable rent. Cable with TVI, Tamil one TV free.
தொடர்புகளுக்கு: 416.285.0428

**MARKHAM & BUR OAK**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to elementary & high school, mall, Go station. Avail. July 15, 2013.
905.209.1421 / 647.405.1962

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. July 15, 2013.
தொடர்புகளுக்கு: 416.889.1083

**BASEMENT & ROOMS FOR RENT ETOBICOKE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in a main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.720.0898

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities.
**KEELE & FINCH**
Furnished rooms for rent. Close to all facilities. Avail. immediately.
***905.209.9212 / 416.562.5113***

**MORNINGSIDE & STAINES**
Newly renovated 2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Internet, cable. Avail. immediately.
416.299.7876 / 647.857.9463

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. New appliances, laminated floor. No pets.
தொடார்புகளுக்கு: 416.917.0557

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom bsmt + 1 Room for rent in main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.754.7172

**தமிழ் அச்சு வடிவமைப்பு**
தமிழ் அச்சுவேலைகள், வடிவமைப்பு தமிழ் மொழியில் வாழ்த்து பா, பாராட்டுப் பத்திரம், நிகழ்ச்சி நிரல், விளம்பரம், துண்டுப்பிரசுரம், விழா மலர், புத்தகம், நினைவு மலர், அறிவித்தல், என்பவை வடிவமைத்து, உரிய நேரத்தில் தரப்படும். தொடர்புகளுக்கு: 647.938.7750

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

மேலும் பக்கங்கள் 27, 28

# ROOM FOR RENT

**PHARMACY & LAWRENCE**
1 Bedroom for rent. Parking, laundry. Close to TTC until 2.00am. . Avail. immediately. Rent $350.
தொடர்புகளுக்கு: 416.660.8367

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent. Washroom, parking. Close to TTC, mall, laundry, free internet. Working people, ladies, man preferred. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.502.3048

**FINCH & MCCOWAN**
2 Bedrooms for rent. Parking, laundry. Close to all facilities. Furniture included. Avail. immediately. Utilities included.
தொடர்புகளுக்கு: 416.670.7262

**MARKHAM & STEELES**
1 or 2 bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.735.5623

**NEILSON & SHEPPARD**
1 Bedroom for rent in main floor. Close to all facilities. Girls preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.822.2827

**MORNINGSIDE & SHEPPARD**
***(Rough river)***
1 Bedroom for rent. Washroom, parking, laundry. Close to all facilities. Working people, ladies or old people preferred. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.899.1123

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 647.388.1481 /416. 759.7016

**MCCOWAN & DENISON**
1 Bedroom for rent in a main floor. Laundry. Close to all facilities. Avail. immediately.
905.554.3595 / 647.532.1233

**FINCH & BIRCHMOUNT**
1room for rent. Laundry. Close to all facilities. No smoking. Rent $350
தொடர்புகளுக்கு: 416.890.5267

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom for rent. Laundry, internet, sep.entrance. Ladies or old people preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.822.2031

**MARKHAM & SHEPPARD**
Sept. apartment 1 bedroom rent on main floor. Laundry. Close to all facilities. Avail. immediately.
416.919.9964 / 905.683.5105

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

# ROOM FOR RENT

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom for rent in a condo. Parking, laundry, kitchen. Close to all facilities. Small family preferred.
தொடர்புகளுக்கு: 647.835.5244

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**MCCOWAN & LAWRENCE**
Room for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
647.294.2212 /416.837.9797
after 6:00 pm

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**MORNINGSIDE & SHEPPARD**
***Morningview Trail***
4 அறைகள் கொண்ட வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Washroom, kitchen must be shared. Female preferred. Close to ttc - 131 bus, school.
தொடர்புகளுக்கு: 416.805.8791

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
647.346.0930 / 647.783.4876

**NEILSON & FINCH /MORNINGSIDE**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. 2 & 3 bedrooms condo. for rent.
647.361.9527 / 416.825.9717

# CONDO FOR RENT

**MARKHAM & EGLINTON**
2 Bedroom condo for rent. Parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.303.1666

**MCCOWAN & EGLINTON**
2 Bedroom + den condo. for rent. 2 Washrooms, laundry, parking. Utilities included. Close to TTC, mall. Avail. August 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.995.6099

**MCCOWAN & SHEPPARD**
2 Bedroom condoவில் 1 Bedroom வாடகைக்கு உண்டு. Sep. washroom, laundry, swimming, gym. Avail. immediately. Close to TTC, mall.
416.616.7882 / 416.299.8947

# SPACE AVAILABLE FREE*

**KENNEDY & EGLINTON** பகுதியில் சிறப்பாக இயங்கி வரும் புதிதாக அமைக்கப்பெற்ற Coin Laundry யினுள் Tailoring (free*) செய்வதற்கான இடம் உண்டு. அனுபவமிக்கவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:416.856.0408

மேலும் பக்கங்கள் 26, 29

# HOUSE FOR RENT

**MIDDLEFIELD & STEELS**
4 Bedroom house for rent. 4 Parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2013.
**BRIMLEY & STEELES**
1 Bedroom bsmt for rent.
தொடர்புகளுக்கு: 905.947.8018

**HOOVERPARK & 9TH LINE**
4 Bedroom house for rent. Parking, laundry.Close to all facilities. Avail. Anytime.
416.321.2300 / 647.995.2662

**NEILSON & FINCH**
Bungalow house 4 bedrooms + 3 bedrooms walk-out bsmt for rent. Close to all facilities. Avail. September 01, 2013.
தொடர்புகளுக்கு: 647.866.9464

**TAPSCOTT & MCLEVIN**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.881.5239

**MARKHAM & DENISON**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.900.7782

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom house for rent. Kitchen, dining & living room. Rent $1,175. Including water, hydro & gas.
தொடர்புகளுக்கு: 416.726.8403

**BRIMLEY & EGLINTON**
3 Bedroom house, Living Room, Kitchen, Full wash room, Main floor Bungalow house. Close to TTC (Kennedy Subway), School, all Amenities. Quiet place. Avail. immediately.
416.265.9138 / 416.271.8467

## APARTMENT FOR SALE

**COLOMBO 04**
கொழும்பு பம்பலப்பிட்டி மிலாகிரிய அவன்யூவில் அமைந்துள்ள 3 அறைகள் கொண்ட தொடர்மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.822.5421
milagsale@gmail.com

# HOUSE FOR SALE

**PRIVATE SALE**
**MEADOWVALE & SHEPPARD**
Beautiful 3 Bedroom house fo sale. 4 Washroom. Finished bsmt. Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.561.3837

## தையல் வகுப்புக்கள்
## தையல் *Orders*

**MARKHAM & LAWRENCE**
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:905.492.0259

# JOB JOB JOB

**GENERAL HELP**
முழுநேர அல்லது பகுதிநேர வேலைக்கு ஆட்கள் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது. Full-time or Part-time
தொடர்புகளுக்கு: 416.717.4430

## குழந்தைகள் பராமரிப்பு

உங்கள் குழந்தைகளை நீங்கள் வேலைக்கு செல்லும் நேரத்தில் வீட்டில் இருந்து பராமரிக்க வேண்டுமா?
அழையுங்கள்: 416.716.2484

## குழந்தைகள் பராமரிப்பு

**MARKHAM & 14TH AVE.**
பகுதியில் 2 வயதுப்பிள்ளையை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை. இடவசதியும், உணவும் கொடுக்கப்படும்.
416.830.6184 / 905.472.7679

# JOB JOB JOB

**KENNEDY & EGLINTON**
***Metro Appliance*** இல் பகுதி நேர வேலைக்கு பெண் ஒருவர் தேவை. ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416.298.4800

# JOB JOB JOB

***Scarborough*** வில் அமைந்துள்ள உணவகத்திற்கு ரொட்டி, பலகாரம் செய்வதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.788.5265

# JOB JOB JOB

Stairs நிறுவனம் ஒன்றிற்கு helper ஒருவர் தேவை. ஆசாரி வேலை தெரிந்தவராக இருக்க வேண்டும். Monday - Saturday 8:00am to 5:00pm.
தொடர்புகளுக்கு: 416.830.3932

# SPACE FOR RENT

Space Rent for classes & meeting
தொடர்புகளுக்கு: 416.738.8824

# TUITION

**KS SUPER TUTOR CENTRE**
**Pre - JK to Grade 8**
English, Reading, Writing, Math, Spelling Bee, Weekly book report, Projects, EQAO Preparation, Homework help in all subjects.
Contact: 647.448.0281

# TUITION

## KEY BOARD CLASSES

**MARKHAM & LAWRENCE**
ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்தர சகல வகுப்பினர்களுக்குமான key board வகுப்புக்கள் Weekdays & Week ends இல் 3 மாத காலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில பாடல்கள் வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# இறைசக்தியுடன் தொடர்பாயிருக்க!

எனது ஆன்மா புனிதமான இறைசக்தியுடன் தொடர்பாக அதனுடன் கொழுவப்பட்டிருக்கின்றது என்பது எனக்கு நன்கு விளங்கியபடியால் நம்பிக்கையின் சக்தியை இப்போ நான் அனுபவித்து அதைப் பிரகடனப்படுத்துகிறேன்.

இறைவனுடன் ஆன்மீகத் தொடர்பினால் பக்தர்கள் அடைந்த அற்புத அனுபவங்களைப்பற்றி, சகலமதங்களும் எடுத்து இயம்புகின்றன. அரச தண்டனையாக கல்தூணில் கட்டப்பட்டு கடலினுள் எறியப்பட்ட அப்பர் பிரான் கல் தோணியாகி மிதந்தபோது

**‘சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ**
**கற்றுணைப் பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினும்**
**நற்றுணையாவது நமச்சிவாயவே’**

எனப் பாடிச் சென்றிருக்கிறார் அல்லவா?



புனித வேதாகாமத்திலும் இறைவனுடன் பிரார்த்தனை மூலம் தொடர்பாயிருந்த பக்தராகிய டானியல், அரச கட்டளையை மீறியதற்காக பசித்திருந்த சிங்கங்களுக் கிடையே வீசப்பட்டார். ஆயினும் அற்புதமாக சிங்கங்கள் டானியலைத் தாக்கவில்லை. டானியலின் இறைபக்தி, இறைசக்தியுடனிருந்த தொடர்பே அவரைப் காப்பாற்றியது. இதனால் பலர் டானியல் மீது பொறாமைப்பட்டார்கள். ஆயினும் தனது சவால்கள் அனைத்தையும் இறைவழிகாட்டலில் தனக்கிருந்த நம்பிக்கையின் துணையுடன் வென்று சரித்திரம் படைத்தார் டானியல். புனித டானியல், அப்பர் பிரான் போல இறைசக்தி உன்னை ஒருபோதும் கைவிடாது எனும் அசையாத நம்பிக்கை உனக்கும் இருந்ததால் பிறரின் விருப்பங்களை நிறைவுவேற்றுவது உனக்குத் தேவையற்ற ஒன்றாகி விடுகிறது. பொறாமையால் பிறர் உன்னை எதிர்த்துத் தாக்கின போதிலும் இறைசக்தியின் பாதுகாப்பு உனக்கு எப்போதும் உண்டு என்ற நம்பிக்கை உன்னைக் கைவிடாது காப்பாற்றியே தீரும். இந்த நம்பிக்கைதான் எந்தச் சவாலையும் சமாளிக்கக்கூடிய தைரியத்தை இறைபக்தர்களுக்குக் கொடுக்கின்றது.

பிறர் உனது நம்பிக்கையில் பொறாமைப்பட்டு உன்னைத் தாக்கினால் அதற்குப் பயந்து உனது விசுவாசத்தைக் கைவிடும் மோசமான செயலை ஒருபோதும் நீ செய்யாதே! உனக்கு என்னதான் நடந்தாலும் நீ எதை இழந்தாலும் உனது இறைநம்பிக்கையை மட்டும் ஒருபோதும் கைவிடாதே. உன்னிடமிருக்கும் சகலதையும் இழந்தாலும் உனது நம்பிக்கையை மட்டும் நீ இழக்கக் கூடாது.

பிரச்சனையின்போது பிற உறவுகள் உனக்கு உதவும் என எதிர்பார்த்து நீ இன்றுவரை நம்பியிருந்திருக்கலாம். உன் ஆன்மீக சக்தி மீதுள்ள பொறாமையால் உன்னைக் குழப்பியடித்து பிரச்சினை தருபவர்களைச் சமாளிக்க புனித ஆன்மீக சக்தி உனக்கு உதவி பாதுகாப்புத் தரவேண்டுமென்று இன்று பிரார்த்தித்துக்கொள்.

**புனித இறைசக்தியுடனான எனது ஆன்மீகத் தொடர்புகளைப் போஷித்துப் பலப்படுத்தி அனுபவிக் கும் முயற்சியில் இன்று தொடக்கம் நான் ஈடுபடப்போகின்றேன்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 223

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214
416.907.6897



லலிதா புரூடி



## திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
647.556.4114 / 416.992.8782

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவில் பிராஜாவுரிமை பெற்ற 39 வயது ஆணுக்கு கனடாவில் இருக்கும் நற்குணமுள்ள பெண்ணை தாயும், சகோதரர்களும் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.525.5109

## திருமண சேவை

உங்கள் பிள்ளைகளின் திருமணத்தை விரைவாக நிறைவேற்றிட எம்முடன் தொடர்பு கொள்ளவும். ஆண், பெண் இருபாலாரினதும் ஜாதகக் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. தொடர்புகளுக்கு : தனம் - ***647.918 0027***
***nallai@hotmail.ca***

## BUSINESS FOR SALE

**BRIMLEY & STEELES**

பகுதியில் அமைந்துள்ள Take out & Catering உணவகம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 647.328.4510

## மணமகள் தேவை

கனடாவில் அரசாங்கத் தாபனம் ஒன்றில் நிரந்தர பணியாற்றும், பிராமண மணமகனுக்கு கனடாவிலோ, அமெரிக்காவிலோ பொருத்தமான மணப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: Sarmathil@gmail.com

**உடனடி வாடகைக்கு**
வீடுகள், கொண்டோக்கள், பேஸ்மண்ட்கள்

**உடனடி விற்பனைக்கு**
Middlefield / Denison
4BR & 4WR Double Garage வீடு
Meadowvale / Sheppard
4+1BR & 3WR Back Split வீடு
Markham / Ellesmere
3+3BR & 2WR பங்களா வீடு
Markham / Highglen
2BR+2WR கொண்டோ
மேலதிக விபரங்களுக்கு
Jey 416-816-9011

## TUTORING

**By Experienced Graduates.**

- Math
- Adv. Function, Calculus & Vectors
- Physics, Data managt, Java
- Computer Training
- CCNA / CCNP Preparation Help

**Contact: 416.706.1654**

## FREE SUMMER CLASS

Gr. 3 - Gr.12, Math, Science, English classes
3 P.M. - 9 P.M. Every Tuesday & Thursday.
July 2nd - July 30th.
University Preparation Class.
Calculus I & II, Linear Algebra, Linear Statics, Dynamics, Mechanics, Physics & Chemistry.
Ruban Master: 416.817.8226

## WAREHOUSE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**

1000 sq.ft for rent in 2300 Sq.ft warehouse.
தொடர்புகளுக்கு: 416.569.4065

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

மேலும் பக்கங்கள் 26, 27

# CAR WANTED

***Toyota Camry - Sienna***
***1997 - 2002. Any KM / Condition***
***Contact: 647.448.2569***

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**
**Pay top dollars.**
**Contact: 416.835.3475**



# காணி விற்பனைக்கு

வவுனியா தாண்டிக்குளம் Railway Station இல் இருந்து ஒரு km தொலைவில் யாழ்ப்பாணம் செல்லும் A9 பாதையில் வீடு கட்டுவதற்கு தயாராக தண்ணீர், மின்சார வசதிகளுடன் எல்லையிடப்பட்ட உறுதிக்ககாணி விற்பனைக்குண்டு. விலை 2 பரப்பு காணி $7,500 கனேடிய டொலர்.

தொடர்புகளுக்கு: 647.719.4354

## FLOORING CLEARANCE CENTER

- Wall to wall carpet starting from 50¢/sqf
- Solid Hardwood starting from $3.49sqf
- 8.33mm Laminate $.89sqf
- USA Eng. Hardwood from $2.99sqf
- 12mm Laminate (10 colours) from $1.15 sqf

***Professional installers available***
***Flooring Clearance Center***
***Please call me for any of your flooring needs : Rajah: 416.917.0557***
***4965 Steeles Avenue West North York, ON, M9L 1R4***

## GRACE HOPPERS DINNING & TAKEOUT

***• Breakfast • Lunch • Dinner Enjoy our Tasty***

***Hoppers, Dosa, Rotti, Kulal pittu with sambol, sambar, Curries, Seafood, Meat, Vegi, Biriyani, Noodles, Salad, Fries, Chicken.***
**We do Catering for your parties too.**



வேலைக்கு ஆட்கள் தேவை

And also enjoy: Coffee, Tea, Icecream, Fresh fruit Juice, Cake, Vadai, Rolls, sandwich.

***We can come and make hoppers for your home parties.***
***Contact: 647.522.7599*** ***3850 Finch Ave. W., Scarborough, ON (Kennedy & Finch)***

## MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at ***Scarborough & Stouffville Contact: 647.340.9490 / 416.732.2228***

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

# வெளிக்கள விருந்துடன் வருடாந்தப் போட்டிகளின் பரிசளிப்பும் விளையாட்டுப் போட்டிகளும்

எமது சங்கத்தின் வருடாந்த "வெளிக்கள விருந்துடன் விளையாட்டுப் போட்டிகளும் - பரிசளிப்பு நிகழ்வும்" July மாதம் 27 ஆம் நாள் சனிக்கிழமை காலை 9:00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்நிகழ்வுக்கு எமது பழைய மாணவர்களும் அவர்களின் வாரிசுகளும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இடம்: ***KID'S TOWN*** L'Amoreaux Park,
3159 Birchmount Road, ***(Birchmount & Mcnicoll)***
Scarborough Ontario.

மேலதிக விபரங்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.
***(416) 414.3327 (416) 293.2851 (416) 299.6645***
***(416) 283.5265 (416) 299.5083***

## AMBIHA SILK (Fancy Jewellery)

***FINCH & MIDDLEFIELD***



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம், மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

அழையுங்கள்: **416.297.5261**



# அருமையான பாதாளம்

இம்முறை நான் அமெரிக்காவுக்கு சென்ற போது ஒரு பிரம்மாண்டமான நூலகத்துக்கு போனேன். அங்கே அபூர்வமான நூல்கள் எல்லாம் இருந்தன. எனக்குப் பிடித்த அமெரிக்க எழுத்தாளர் மார்க் ட்வெய்ன். அவர் எழுதிய அத்தனை புத்தகங்களும் இந்த நூலகத்தில் பூர்வ அட்டைகளுடன் கிடைத்தன. அமெரிக்க இலக்கியத்தின் ஆரம்பமே மார்க் ட்வெய்ன் என்று சொல்வார்கள். இவருக்கு பின்னால் வந்த அமெரிக்க எழுத்தாளர்களில் எவரும் இவரைத் தாண்டவில்லை என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட விசயம். இவர் எழுதிய ஹக்கிள்பெரி/பின் நாவலில் ஓர் இடத்தில் இப்படி வரும். Don't forget to remember that you don't know anything about it. உனக்கு ஒன்றும் தெரியாது என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க மறக்காதே. இதைப் படித்தபோது எனக்கு சிரிப்பு வந்தது. வேறு யாரால் இப்படி எழுதமுடியும்?

**- அ. முத்துலிங்கம் -**

சிறுவயதில் நான் போன பள்ளிக்கூடத்தில் மறதி என்ற வார்த்தைக்கே இடமில்லை. அங்கே பாடங்களை நாங்கள் மனனம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டோம். கணிதத்தில் சூத்திரங்களைப் பாடமாக்க வேண்டும். தமிழிலும் ஆங்கிலத்திலும் பாடல்களைப் பாடமாக்க வேண்டும். சரித்திரத்தில் அரசர்களின் பெயர்களையும் அவர்கள் வெட்டிய குளங்களின் பெயர்களையும் கணக்கில் வைக்க முடியாத தேதிகளையும் பாடமாக்க வேண்டும். வேதியியல் பாடத்தில் நிறைய சமாந்திரங்கள் இருக்கும். அவற்றை யெல்லாம் பாடமாக்க வேண்டும். ஆனால் மிகக் கொடுமையானது பூமிசாஸ்திரத்தில் நாடுகளையும் சமுத்திரங்களையும் மலைகளையும் ஆறுகளையும் பாடமாக்குவது. அதாவது வரைபடத்தில் அவை எங்கே யெங்கே இருக்கும் என்பதை மனனம் செய்வது. பூமிசாஸ்திரம் படிப்பித்த வாத்தியார் மறதியை பள்ளத்துக்கு ஒப்பிடுவார். “வீதியில் நடக்கும்போது எப்படி பள்ளத்தில் விழாமல் எச்சரிக்கையாக நடப்பீர்களோ அப்படியே உங்கள் வாழ்க்கையிலும் மறதியில் விழாமல் நீங்கள் தப்பவேண்டும்” என்று அறிவுரை கூறுவார். கூறிமுடித்த உடனேயே தன் மூக்குக் கண்ணாடியை தேடுவார்.

மறதி என்ற வார்த்தை என்னை படிப்பித்த தமிழாசிரியருக்கு பிடிக்கும். நான் ஒருமுறை கட்டுரை ஒன்றில் ‘ஞாபகமறதி’ என்று எழுதி விட்டேன். அவருக்கு பிடிக்கவில்லை. ஞாபகம் என்றால் நினைவில் வைப்பது. அதற்கு எதிர்ப்பதம் மறதி. அப்படியிருக்க அது என்ன ஞாபகமறதி என்று என்னிடமே கேட்டு தலையில் ஒரு குட்டு வைத்தார். இவரிடம் கற்றதைவிட வாங்கிய குட்டுகளே அதிகம். அந்தக் குட்டின் ஆழமோ என்னவோ இன்றைக்கும் அந்த நினைவு ஆழமாகப் பதிந்துவிட்டது. இவர் ஓய்வு பெற்ற பிறகு ஒருநாள் இவரை வழியில் சந்தித்தேன். வற்றிவிட்ட ஆறுபோல உலர்ந்துபோய் இருந்தார். என்னுடைய பெயரைக் கேட்டார். இரண்டு தடவை சொன்னேன். அவரிடம் படித்ததையும் நினைவூட்டினேன். அவருக்கு எல்லாமே மறந்துவிட்டது. நான் விடைபெறும் போது மறுபடியும் என்னுடைய பெயரைக் கேட்டார். அவருக்கு மறதி வியாதி என்று பின்னர் கேள்விப்பட்டேன்.

எங்கள் புராணங்களிலும் மறதிக்காரர்கள் இல்லாமலில்லை. வேட்டையாடவந்த துஷ்யந்தன், காட்டிலே விளையாடிக் கொண்டிருந்த சகுந்தலையைக் கண்டு மோகித்து அவளை அங்கேயே கந்தர்வ மணம் செய்துகொள்கிறான். அடையாளமாக ஒரு மோதிரமும் தருகிறான். அவ்வளவு அவசரமாக மணம் செய்தவன் அவளை அரண்மனைக்கு அழைத்துப்போகவில்லை. தகுந்த மரியாதைகள் செய்து பரிவாரங்களுடன் வந்து அழைத்துப் போவதாகச் சொல்கிறான். ஆனால் ராஜ்ஜியத்துக்கு திரும்பியதும் அவளை மறந்து விடுகிறான். சகுந்தலை அரண்மனைக்கு வந்து முறையிட்டபோதுகூட அவனுக்கு ஞாபகம் மீளவில்லை. பின்னர் எப்படியோ சகுந்தலையை ஏற்றுக்கொண்டான் என்று முடிகிறது கதை.

மறதி வியாதியிலிருந்து விஞ்ஞானிகளும் தப்பவில்லை. கலீலியோ என்ற தலை சிறந்த விஞ்ஞானி 17ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர்தான் பூமி சூரியனைச் சுற்றுகிறது என்பதை விஞ்ஞானபூர்வமாக முதன்முதலில் நிறுவியவர். இந்தக் கூற்றுக்காக அவருடைய முதுமையான காலத்தில் அவர்மேல் கடவுள் நிந்தனைக் குற்றம் சுமத்தி அவரை வீட்டுக் காவலில் வைத்தார்கள். இந்தச் சமயங்களில் கலீலியோ தான் இளவயதில் எழுதிய கணித சித்தாந்தங்களை எல்லாம் பரப்பிவைத்து கூர்ந்து பார்த்துக்கொண்டே இருப்பார். அப்பொழுது “நான் கண்டுபிடித்து எழுதி வைத்த சித்தாந்தங்கள்கூட எனக்கு ஒன்றும் புரியவில்லையே” என்று கூறி கண் கலங்குவாராம்.

சின்ன வயதில் பள்ளிக்கூடத்தில் மனனம் செய்வதில் எவ்வளவுதான் பயிற்சி பெற்றிருந்தாலும் முதுமையில் மறதி மெல்ல மெல்ல அணுகுவதை தடுக்க முடியாது. சமீபத்தில் கனடா செய்தித்தாள் ஒன்றில் வந்த தகவலை படித்தபோது நான் முன்னெப்பொழுதும் அடையாதவிதமாக அதிர்ச்சியடைந்தேன். தன்னுடைய செயற்கைக்காலை ஒருவர் பொது இடத்தில் மறந்து வைத்துவிட்டு போய்விட்டார். அவரைத் தேடுகிறது கனடா பொலீஸ். இந்தக் கால் பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட இடது கால். அடிடாஸ் ஆண் சப்பாத்து சைஸ் எட்டு. காலின் தேய்வை வைத்து சோதித்துப் பார்த்தபோது குறைந்தது இரண்டு வருடங்களாவது இந்தக் கால் நடந்து உதவி செய்தது தெரிய வந்திருக்கிறது. ஆனால் காலின் சொந்தக்காரரைக் காணவில்லை. மறதிக்கு பரிசு கொடுப்பதென்றால் இந்த ஒற்றைக்கால்காரரை மறக்கமுடியுமா?

எனக்கு வாய்த்த ஆசிரியர்களில் ஒருவர் கேட்கும் கேள்விகளுக்கு புத்தகத்தில் இருப்பதை மனனம் செய்து அப்படியே வரிக்கு வரி சொல்லவேண்டும். பாடம் நடத்தும்போது வாத்தியார் நிற்காமல் கடகடவென்று சொல்லிக்கொண்டு வருவார். மணி அடித்ததும், தண்ணீர் கொதித்ததும் நிற்கும் கேத்தல்போல, பாடத்தை பட்டென்று நிறுத்திவிட்டு புறப்படுவார். இவருடைய பரீட்சைக்கு கண்விழித்து மனப்பாடம் செய்து விட்டு காலையில் பரீட்சை மண்டபத்துக்கு செல்லும்போது எங்களில் சிலர் வாயையே திறக்கமாட்டோம். படித்து சேகரித்தவை வெளியே விழுந்துவிடுமோ என்ற பயம். பரீட்சையில் பாடல் வரிகள் மறந்துபோய் விடும் கணித சூத்திரங்கள் நாக்கு நுனியில் நிற்கும், வெளியே வராது. தேதிகள் எல்லாம் முன்னுக்கு பின்னாக மாறிவிடும். அந்தக் காலங்களில் ஞாபகசக்தி சூரர்களைப் பார்த்து நான் பொறாமைப்படுவதுண்டு. அதிலே ஒருத்தன் சந்திரலேகா படத்தின் வசனங்களை சீன் சீனாக ஒப்பிக்கும் திறமை படைத்தவன். எங்களுடன் அன்னலட்சுமி என்ற பெண்ணும் படித்தாள். கர்வமானவள். மெல்லிய மீசையுண்டு. முழங்கை வரைக்கும் தங்க காப்புகள் குலுங்கும். அரைத்தாவணி உடுத்தி நீண்ட பின்னல் செய்து தவறாமல் ஒரேயொரு மல்லிகைப்பூவை அதில் செருகிவைத்திருப்பாள். வீட்டிலே சங்கீதம் கற்றதால் பள்ளிக்கூடத்தில் அவளுக்கு நல்ல மதிப்பு. நடு மேடையில் உட்கார்ந்து காப்புகளால் பாரம்கூடிய கையால் வலது துடையை பெரிதாக சத்தம்வரத் தட்டி பாடுவதை நான் பார்த்திருக்கிறேன். பள்ளிக்கூடத்தில் நடக்கும் விழாக்களில் எந்த நாள், எந்த நேரம், எந்த காற்று வேகம், எந்த வெப்பம், எந்த ஈரப்பதன் என்றாலும் கடவுள் வாழ்த்து பாடுவது அவள்தான். அவள் வாயினால் பாடுவது போல இருக்காது. முழுமுகமும் அசைந்து தசைகள் சுருங்கி அவள் வாயில் முடிந்து அதற்குள்ளிருந்து சொற்கள் வெளிவரும். ஒருமுறை “வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்” என்று தொடங்கியவள் “பூக்கொண்டு, பூக்கொண்டு” என்று அதே இடத்தில் நின்றுவிட்டாள். தலைமையாசிரியர் ஒவ்வொரு சொல்லாகச் சொல்லிக்கொடுத்து ஒருவாறு அன்று பாடலை முடித்தாள்.

சில வருடங்களுக்கு முன்னர் அப்படியான ஓர் ஆபத்து என்னையும் நோக்கி வந்தது. நான் படித்த பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு நாளும் காலையில் தேகப்பியாச வகுப்பு நடக்கும். முதல் வேலையாக நேர்க் கோட்டில் நின்று நாங்கள் எண்ணிக் கொண்டே வருவோம். அதாவது one, two, three என்ற ஒழுங்கில். இந்த நம்பர்கள் சொல்வதற்கும், தேகப்பியாசத்திற்கும் என்ன தொடர்பு என்று நாங்கள் ஒருவரும் கேட்கத் துணியவில்லை. அந்த மர்மம் அன்றைக்கும் துலங்கவில்லை. இன்றைக்கும் விடுபடவில்லை. அருமை நாயகம் என்ற மாணவனுக்கு sixteen சொல்லவராது. “சிக்கிட்டீன்” என்றே சொல்வான். அந்த வகுப்பு முடியும்வரை எங்களையெல்லாம் சிரிப்புமூட்ட இது ஒன்றே போதும். வரிசையில் நிற்கும்போது எப்படியோ அவனுக்கு அந்த நம்பர்தான் கிடைக்கும். அவனும் சிக்கிட்டீன் என்றே சொல்வான். போகப்போக அவன் வரிசை யில் நிற்கும் முன்பு தனக்கு முன் எத்தனை பேர் நிற்கிறார்கள் என்று எண்ணி 13வது இடத்திலோ 18வது இடத்திலோ போய் தந்திரமாக நின்று கொள்வான். அந்த யுக்தியும் பலிக்க வில்லை. வாத்தியார் பார்த்துவிட்டு உயரப்படிதான் நிற்கவேண்டும் என்று ஆட்களை இடம் மாற்றுவார். உயரமான பத்மநாபன் முதலிலும், படிப்படியாகக் குறைந்து கடைசியில் ஜெகராசசிங்கமும் நிற்கவேண்டும் என்று சொல்வார். கலைந்து மறுபடியும் வரிசையில் நிற்போம். அருமைநாயகம் மீண்டும் சிக்கிட்டீன் ஆகிவிடுவான்.

இந்தச் சம்பவத்துக்கு பிறகு அவன் பெயரே எல்லோருக்கும் மறந்துவிட்டது. சிக்கிட்டீன் என்றால்தான் தெரியும். அவனும் சிக்கிட்டீன் என்று கூப்பிட்டால் பதில் சொல்லப் பழகியிருந்தான். வீட்டிலும் அவனை அப்படி அழைப்பதாக செய்திகள் வந்தன. ஒருநாள் வகுப்பில் ஆசிரியர்கூட சிக்கிட்டீன் என்று அவனைக் கூப்பிட்டது எங்களுக்கு முழு வெற்றி. பலவருடங்கள் கழித்து கொழும்பில் அவனை ஒருநாள் சந்தித்தேன். மனைவியுடன் மிருகக்காட்சிசாலை பார்க்க வந்திருந்தான். அவள் வட்டமான தாலியும், சருகை வைத்து மொடமொடக்கும் சேலையும் அணிந்திருந்தாள். ஒரு திருமணவீட்டுக்கு போவதற்கு வெளிக்கிட்டு பாதியில் மனதை மாற்றி மிருகங்களைப் பார்க்க வந்ததுபோல பட்டது. பதினாறு சொல்லத் தெரியாவிட்டால் என்ன பெரிய நட்டம். அவன் மனைவி பேரழகி. அவள் ஆவலுடன் மிருகங்களைப் பார்த்தாள். சற்றும் குறையாத அதே ஆவலுடன் மிருகங்களும் அவளைப் பார்த்தன. மனைவிக்கு என்னை அறிமுகம் செய்துவைத்தான். நானும் அப்படியே அவனை என் மனைவிக்கு அறிமுகம் செய்யலாம் என்று நினைத்தேன். எவ்வளவு யோசித்தும் சிக்கிட்டீன் என்ற பெயர்தான் எனக்கு ஞாபகம் வந்தது. மனைவியிடம் எப்படி சிக்கிட்டீன் என்று அறிமுகப்படுத்துவது. ஆனால் அவனுக்கு எப்படியோ என் சங்கடம் விளங்கிவிட்டது. முந்திக்கொண்டு ‘அருமைநாயகம்’ என்றான். ஓர் அருமையான பாதாளத்திலிருந்து அன்று நான் காப்பாற்றப்பட்டேன்.

END


@ GTA Square



TUTORING

Saturday & Sunday 9:00 To 11:00


- Math - Grade 9 ,10 and 11 ($10 Per Hour )
- Advanced Functions - Grade 12 ($15 Per Hour )
- Vectors and Calculus- Grade 12 ($15 Per Hour )

Kamal: 416.696.5007 / 647.268.5007

15 years experience in teaching math for high school students
(Priority will be given for home work)


விலா கருணா
முதியோர் இல்லம்
'பழமுதிர் சோலையிது'
HELPING HANDS
SENIOR CARE
VILLA KARUNA
பத்தாவது ஆண்டுப் பூர்த்தியை
முன்னிட்டு நிகழ்த்தும்
முதியோர் படைப்பாக்கப்
போட்டிகள்
சிறுகதைப் போட்டி :
கனடிய வாழ்வு அனுபவங்களைக் கருவாகக் கொண்டதாகவும்,
8½ X11 பேப்பரில் 5 பக்கங்களுக்கு
மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்.
கட்டுரைப் போட்டி:
கனடிய வாழ்வும் வளமும்' என்ற தலைப்பில்
எழுதப்பட்டதாகவும், 8 X11 பேப்பரில்
5 பக்கங்களுக்கு மேற்படாததாகவும்
அமைதல் வேண்டும்.
கவிதைப் போட்டி :
'அந்திப் பொழுதழகு' என்ற தலைப்பில் எழுதப்பட்டதாகவும்,
8½ X11 பேப்பரில் 2 பக்கங்களுக்கு மேற்படாததாகவும்
அமைதல் வேண்டும்.
தயவுசெய்து போட்டிக்கென அனுப்பும் ஆக்கங்களில் உங்கள் பெயரை எழுத வேண்டாம். தனியாக ஒரு பேப்பரில்
உங்கள் முழுப் பெயர், வயது, முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி(இருந்தால்), ஆக்கத்தின் பெயர்
என்பவற்றைக் குறிப்பிட்டு, ஆக்கத்துடன் இணைந்து அனுப்பி வையுங்கள். உங்கள் சொந்த ஆக்கமாகவும், முன்னர்
பிரசுரிக்கப்படாததாகவும், பேப்பரின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
முதல் மூன்று இடங்களைப் பெறுவோர், விலா கருணா- முதியோர் இல்லத்தின் பத்தாவது ஆண்டு விழாவில்,
பெறுமதிமிக்க பரிசில்களும், விருதுகளும் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படவுள்ளனர்.
போட்டிக்கான ஆக்கங்கள்-
Villa Karuna, 602 Brimley Road, Scarborough, ON, M1J 2B5
என்ற முகவரிக்கு 31-7-2013க்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416-266-6473, 416-200-6971, 647-991-7983
www.hhseniorcare.com / email: villakaruna@sympatico.ca

# ஆச்சிக்குட்டிக்கு வாச்ச மாப்பிளை போடா தூ.....! C





என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள் நலம் பெறப் பிரார்த்திக்கிறேன்.

அந்தோனியும் ஆச்சிக்குட்டியும் கதை கடிதம், கடிதமாய் தொடர்வது பெருநாவலாய் வளரும் போல் தெரிகிறது. பயப்படாதே! இத்தோடு நிறுத்துவதாய் தீர்மானித்து விட்டேன். சென்ற வருடத்துக்கு கதைகளையே மறந்து போனேன். ஐம்பத்தைந்து வருடத்துக்கு முன்பு கேட்ட கதைகள் பளிச்சென்று நினைவில் நிற்கிறதே. 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பது போல் இளமையின் கதைகளும் சிலையில் எழுத்துத்தான். இளசுகளுக்கு நம் இனத்தின் கனத்தை, வரலாற்றை, கலாச்சாரத்தை, வியத்தகு விழுமியங்களை கதையோடு கதையாக படிப்போடு பாடமாகச் சொல்லவில்லை. வேற்றுக் காற்று வேரோடு பிடுங்கி எறியாமல் அத்திபாரத்தைப் பெலப்படுத்து.

நண்பா!
அந்தோனி கிறிஸ்தவர். இவருக்குப் பக்கத்து வீட்டுக்காரியான சைவப்பெண் ஆச்சிக்குட்டி யின் மேல் காதல் உண்டாகி விட்டது. இருவரும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் கலவன் பாடசாலையில் மாணவர்கள். வாட்டசாட்டமான அந்தோனி வகுப்புத் தலைவன் (Monitor). வகுப்பில் தையல் பாடமும் நடக்கும். பெண்களுக்குத் தையல் பயிற்சி நடைபெறும்போது ஆண்களுக்கு வரைதல் பயிற்சி நடக்கும். ஒரே வகுப்பில் இந்த இரண்டு பாடங்களை யும் எடுக்கும் தையல் வாத்தியார் ஒரு பெண்மணி. இவரை எல்லா மாணவர்களும் தையல் அக்கா என்றே அழைப்பர். தையல் அக்கா கல்யாணம் முடிக்காதவர். இவவுக்கு மாணவனான அந்தோனியில் ஒரு கண். அன்புப் பேச்சு, அதட்டல் இல்லாத கடுமை காட்டாத கண்டிப்பு என்று தையல் அக்கா அந்தோனியோடு குழைவது ஆச்சிக் குட்டிக்கு நெருடலைக் கொடுத்தது. அந்தோனியோடு சாதாரண மாணவியாய் பழகிய ஆச்சிக்குட்டி தையல் அக்காவின் கரிசனைக்கதைகளை கண்டு அந்தோனி யோடு அந்நியோன்னியம் கொள்ளலுற்றார். வருடமுடிவில் அக்கால வழக்குப்படி ஆச்சிக்குட்டியின் படிப்பு எழுத வாசிக்கத் தெரிந்ததோடு பெற்றோரால் நிறுத்தப்பட்டது. அந்தக் காலத்து பெண்பிள்ளைகள் பலருக்கும் யாழ்ப்பாண வழக்கம் இதுவாகவே இருந்தது. அந்தோனியும் பாடசாலையை விட்டு விலகி ஒரு கடையில் சிப்பந்தியாகச் சேர்ந்து கொண்டார். இதற்கு இவர் வீட்டுப் பொருளாதார நிலையே காரணம். நாட்கள் நகர நகர அந்தோனி ஆச்சிக்குட்டி காதல் யாழ்ப்பாண நகரம் எங்கும் பரவி இருவீட்டார் செவிகளுக்கும் எட்டியது. ஆச்சிக்குட்டி வீட்டார் தங்கள் சைவ பாரம்பரியத்தை மகளுக்குச் சொல்லி காதலுக்கு முற்றுப் புள்ளி வைக்கும்படி வற்புறுத்தினார்கள். ஆச்சிக்குட்டிகுள் அரும்பிய அந்தோனிக் காதல் விடுதல் அறியாவிரும்பினள் ஆக்கியது. 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள். மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள். பின்னை அவனுடைய ஆரூர்கேட்டாள். பெயர்த்தும் அவனுக்கே பிச்சையானாள். அன்னையை யும் அத்தனையையும் அன்றே நீத்தாள். அகன்றாள். அகலிடத்தார் ஆசாரத்தை தன்னை மறந்தாள். தன் நாமம் கெட்டாள். தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே! என்ற தேவாரத்தை பள்ளிக்கூடத்தில் படிப்பு போன்று வீட்டிலிலும் சத்தம் போட்டுப் படிக்கும் பயித்தியக்காரியானாள் ஆச்சிக்குட்டி.

இதனால் தாயின் விளக்கு மாற்றுப் பூசையும், இடியப்ப உரல் இடியும், சுளகு வீச்சு அடியும் பரிசாய் கிடைத்தன. பயித்தியம் முற்றியேதே தவிரப் பலன் எதுவும் கிடைக்கவில்லை. சித்திரை வருடப்பிறப்பன்று முற்றவெளியில் சவாரி வண்டில் ஓடிப் பரிசு பெறும் சவாரித்தம்பர் சின்னக்குட்டியர் என்ற இரண்டு கலை ஆடி ஆவன செய்பவர்களான அனுமான் கலையாடிகளை அழைத்து நீத்துப் பூசணிக்காய் வெட்டி, கற்பூரம் கொழுத்தி, வேப்பிலை அடித்து ஆச்சிக்குட்டியை வழிக்குக் கொண்டுவர எடுத்த முயற்சியும் வெற்றி பெறவில்லை. இந்த அனுமார் கலைக்காரரான சவாரித் தம்பரையும் சின்னக்குட்டியரையும் பிற்காலத்தில் சிரித்திரன் ஆசிரியர் சிவஞான சுந்தரம் தனது நகைச்சுவை கேலிச் சித்திரங்களுக்கு (Cartoon) பயன்படுத்தினாராம். அடிமேல் அடி விழ அம்மியும் நகருவது போல் ஆச்சக்குட்டி வீட்டை விட்டே நகர்ந்து இரவோடு இரவாக அந்தோனியோடு ஓடிவிட்டாள்.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 34ஆம் பக்கம்



# சிவகாமியின் சபதம்

கடந்த யூலை 4, 5, 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் Sony Center இல் FeTNA தமிழ் விழா நடைபெற்றது. யூலை 5ஆம் திகதி சிவகாமியின் சபதம் என்ற நாடகம் நடைபெற்றது. இது 'சிவகாமியின் சபதம்' என்று கல்கி எழுதிய புத்தகத்தை அடிப்படையாக வைத்து செய்யப்பட்ட நாடகம். இக்கதை, ஒரு சிற்பியின் சிவகாமி என்ற மகளின் கதை. இவர் பரதநாட்டிய கலையை நன்றாக பயின்றவர்.

இதனால் இந்தக் கதையின் பெரும்பகுதி நடனமாகவும், சில இடங்களில் நாட-கமாகவும் இருந்தது. நிகழ்ச்சி சிவபெருமானின் நடனத்தோடு தொடங்கியது. பின்னர், நரசிம்மவர்மன் என்ற அரசன் போருக்கு செல்லுமுன் மனைவியிடம் விடைபெறும் சம்பவத்தை காண்கின்றோம். அப்போதுதான் அரசி அரசனிடம் அவரின் முந்தைய கதையைப் பற்றி கேட்கிறார்.

முந்தைய கதையில் அப்போதைய மன்னன் மகேந்திரவர்மனின் அரசகுமாரனான நரசிம்மவர்மனுக்கும், சிற்பியின் மகளான சிவகாமிக்கும் நட்பு இருந்தது. இது அவர்கள் வளர காதலாக மாறியது. இதை சில காட்சிகளில் காண்கின்றோம். இதே நேரம் நாகநந்தி என்ற பௌத்த பிக்கு இக்கதையில் வருகிறார். இவர் பக்கத்து நாட்டு ராஜாவான புலிகேசியின் சகோதரர் ஆவர். இந்த நேரம் சிவகாமியும் அவரது தந்தையும் பல்லக்கில் செல்லுவதை காண்கின்றோம். அப்போது யானை ஒன்று அவர்களை தாக்க வருகிறது. இதை



பரஞ்சோதி என்பவர் கண்டு யானையை வேலினால் தாக்கி துரத்தினார். நாகநந்தி பரஞ்சோதியை சந்திக்கிறார். அவரை தன் சகோதரருக்கு ஓலை கொடுக்கும்படி அனுப்புகிறார். அதில் புலிகேசிக்கு இந்நாட்டு ராஜா ஆன மகேந்திரவர்மனுடன் போர் செய்ய இது நல்ல நேரம் என்று எழுதுகிறார். இதை பரஞ்சோதி எடுத்து செல்லுகையில் அவர் வழியில் ஒருவரை சந்திக்கிறார். அவர் ஓலையை எடுத்து மாத்துகின்றார். இதை அறியாமல் பரஞ்சோதி மறுநாள் ஓலையை எடுத்துக் கொண்டு புலிகேசியிடம் செல்கிறார். ஓலையை மாத்தியவர் தான் மகேந்திரவர்மன் என்று நாம் காணுகின்றோம். கடைசியில் புலிகேசியும் மகேந்திரவர்மனும் மாற்றப்பட்ட ஓலையில் இருந்தமாதிரி சமா-தானம் செய்கின்றார்கள். ஆனால் மகேந்திரவர்மன் தான் ஓலையை மாற்றிய விடயத்தை சொன்னவுடன் புலிகேசி கோபம் கொண்டு மகேந்திரவர்மனுடன் போர் தொடுக்கிறார். நாட்டியம் ஆடும் சிவகாமியும் உட்பட அனைவரையும் சிறைபிடிக்கின்றார்.

நரசிம்மவர்மன், சிவகாமியை ரகசியமாக சிறைமீட்க விரும்பினார். ஆனால் சிவகாமி புலிகேசியை வென்றால் தான் வருவேன் என்று சபதம் செய்கின்றார். இத்துடன் நாடகம் மீண்டும் நரசிம்மவர்மன் புலிகேசியுடன் போருக்கு செல்லும் காட்சிக்கு திரும்பி வருகிறது. அந்த போரில் நரசிம்மவர்மன் வென்று சிவகாமியை சிறை மீட்டார்.

அப்போது விடுதலை செய்யப்பட்ட சிவகாமி நரசிம்மவர்மனுக்கு கல்யாணம் ஏற்கனவே முடிவடைந்து விட்டதை அறிந்து சிவனின் பக்தை ஆகிறார். இத்துடன் நாடகம் முடிகிறது.



**ஞா. ஆரணி**
அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# தெய்வீகம் உங்களை அழைக்கின்றது

### *The Divine is Calling you*

'ஒரு நாள் சிறிய முயல் ஒன்று துள்ளி விளையாடிக்கொண்டிருந்தபோது திடீரென ஒரு கோழிக்குஞ்சைக் கண்டது. அந்த சிறிய முயல் அக்கோழிக் குஞ்சினால் கவரப்பட்டது. அந்தக் கோழிக்குஞ்சு அழகான சிறகு களைக்கொண்டிருந்தது. நானும் கோழிக் குஞ்சு போல் இருந்தால் மிக நன்றாக இருக்குமென்று முயல் குட்டி தனக்குத்தானே கூறிக்கொண்டது. நிலத்தில் பல கோழிச் சிறகுகள் விழுந்து கிடந்ததைக்கண்டு அதை எடுத்து அவற்றினால் தன்னைப் போர்த்திக் கொண்டு கோழிக்குஞ்சுகளின் கூட்டத்தினுள் நுழைய முயற்சித்தது. ஆனால் அதனால் வெற்றியடைய முடியவில்லை' என மகராஜி கூறினார்.

அது ஒரு கோழிக்குஞ்சு அல்லவென்பதை கோழிக்குஞ்சுகள் அறிந்திருந்தன. அவை முயலை விட்டு விலகி விலகிச் சென்றன. இது முயலை மேலும் துக்கத்தில் ஆழ்த்தியது. பின்பு ஒருநாள் இந்தமுயல் சில வண்ணத்துப் பூச்சிகளை சந்தித்தது. அப்போது தானும் அவற்றைப்போல் வர விரும்பியது. முயல் தனக்கு வர்ணங்களை யும் தீட்டி வண்ணத்துப் பூச்சிகளைப் போல தோற்றமளிக்கத் தெண்டித்தது. அது பறக்க முயற்சித்தது. ஆனால் அதனால் பறக்க முடியவில்லை. அது வண்ணத்துப் பூச்சிகளுடன் நட்புப்பூண விரும்பியது. ஆனால் அதை அதனால் சாதிக்க முடியவில்லை. இது அதை மேலும் துக்கமாக்கியது. இது போன்ற முயற்சிகளை அது மீண்டும் மீண்டும் மேற்கொண்டது. ஏனெனில் அதனால் அதன் சொந்த அழகை மெச்ச முடியவில்லை. அது எதுவாக இருந்ததோ அதை அதனால் மெச்ச முடியவில்லை.

இந்த எளிமையான கதை மனிதரின் நிலைமையைத்தான் பிரதிபலிக்கின்றது என மகராஜி கூறுகின்றார். நட்சத்திரங்களைப் பற்றிய விடயங்கள் எமக்கு மிகவும் சுவாரசி யமாக இருக்கும். மோட்சத்தைப் பற்றிய கண்டுபிடிப்புக்கள் மட்டில்லா சுவாரசியத்தை தரும். நாம் எம்மைவிட பிற விடயங்களினால் தான் கவரப்படுகின்றோம். இருந்தும் அந்தப் பதில் - எமது கேள்விகளுக்கான தீர்வு- எம்மை நாம் விளங்கிக் கொள்ளுதல் என்ற எளிமையில்தான் தங்கியுள்ளது.

சர்வதேச ரீதியில் அமைதியைக் கொண்டு வரும் முயற்சிக்காக கௌரவிக்கப்படும் மகராஜி என அழைக்கப்படும் பிரேம் ராவத் அவர்கள், தனது வாழ்நாளின் அதிக பங்கை உலகெங்கும் உள்ள மக்களுக்கு ஒரு அதி விசேடமான செய்தியை வழங்குவதில் செல-வழிக்கின்றார். 'தெய்வீகம்' உங்களுக் குள்ளேதான் வதிக்கின்றது. நீங்கள் தேடும் அமைதியானது ஏற்கனவே உங்கள் உள்ளேயே உள்ளது.

தெய்வீகம் என்பதன் மூலம் நான் கருதுவது என்ன? நீங்கள் கடவுளை நம்பாமல் விட்டாலும் எனக்குப் பறவாயில்லை. நீங்கள் நாஸ்திகனாக இருந்தாலும் பறவாயில்லை. பெரியதொரு விடயம் நடைபெற்றுக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியுமா? உண்மையிலேயே மிகவும் பெரிய விடயம். இந்த உலகமானது சுற்றிக்கொண்டிருக் கின்றது. மிக மிக வேகமாகச் சுற்றிக் கொண்டிருக்கின்றது. எவ்வித ஆதாரமும் இல்லாமல் சுற்றிக் கொண்டிருக்கின்றது. சந்திரனும் சூரியனும் கோடிக்கணக்கான, பல கோடிக்கணக்கான நட்சத்திரங்களும் அங்கே உள்ளன. நான் இதைத்தான் மிகப் பெரிய விடயம் நடைபெறுகின்றது எனக் கூறினேன். அனேக நம்பிக்கைகள் இருக்கின்றன. ஆனால் எனக்கு என்ன தெரியும்?. இந்தப் பிரபஞ்சத்தை உயிரோட்டத்துடன் எது வைத்திருக்கின்றதோ அது என்னிலும் இருக்கின்றதென்பது எனக்குத் தெரியும். என்னையும் அதுதான் உயிருடன் வைத்திருக்கின்றது. அதைத்தான் நான் தெய்வீகம் என்கின்றேன். எனது தெய்வீகம். உங்கள் தெய்வீகம். எல்லா இடமும் சுழல்கின்றது. எரிஒகின்றது. மாறுகின்றது. உருவாக்குகின்றது. அழிக்கின்றது. விடை யங்களை நடைபெறச் செய்கின்றது.

தொடர்ச்சி 38ஆம் பக்கம்


**LAW OFFICE**
**STEFANO FORTINI**
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# Education

## Review Tutorials 13-13

### CHEMISTRY 12 & IB

(A)(i) (ii)



Give IUPAC name of the major product/s

(B)Explain the order of increasing boiling points given below,

| | |
|---|---|
| 2,4-dimethyl pentane | 80.5°C |
| n- Heptane | 98.42°C |
| 2- hexanone | 128°C |
| 1- hexanal | 158°C |

(C) Name the main products

(i) $C_2H_5OH + O_2 \rightarrow$

(ii) $C_2H_5OH \xrightarrow{K_2Cr_2O_7/\ H^+}$

(iii) $CH_3CH(OH)CH_2CH_3 \xrightarrow{K_2Cr_2O_7/\ H^+}$

### IB BIOLOGY

(i) Compare the hydrogen–bonding patterns characteristics of the α- helix and β- pleated sheet.

(ii) What type of RNA has the shortest lifetime in cells.

(iii) Describe the differences between mRNA, tRNA and rRNA.

### PHYSICS 11

(i)Explain " whiplash" in automobile accident.

(ii) What is terminal velocity?

(iii) Discuss the factors which are likely to affect the terminal velocity of an object falling in the earth's atmosphere.

### Physics 11& 12

Two balls are thrown vertically upward, one after the other with a 1.2 s time difference. Balls reach maximum heights at the same instant (these heights are different). If the initial speed of the first ball is 25.0 m/s, determine the initial speed of the second ball.

### ADVANCED FUNCTIONS 12

(A) Determine the $x$ – intercepts, state the degree and the sign of the leading coefficient and describe the end behaviour of the graph of each polynomial function

a) $f(x) = (x-2)(x+4)^2$ b) $g(x) = 2(x-3)(x-5)^3$

c) $h(x) = -2(x+4)(x-2)^3$

(B) Prove:

(i) $\cos^2 x.\cos^2 y + \sin^2 x.\sin^2 y + \sin^2 x.\cos^2 y + \sin^2 y.\cos^2 x = 1$

(ii) $\sec^2 x - \sec^2 y = \tan^2 x - \tan^2 y$

## Answer Key : 13-12

### CHEMISTRY 12 & IB Students

(i) The emission spectrum of atomic hydrogen is divided into a number of spectral lines. These lines are due to electrons moving between energy levels in the atom. Transition of electron in hydrogen between quantized energy levels with different quantum numbers yields a photon by emission with quantum energy

(ii) Third ionization energy magnesium ( $Mg^{2+} \rightarrow Mg^{3+}$ ) is greater than that of Fluorine ( $F^{++} \rightarrow F^{3+}$ ). Reason – removal of an electron from an octet ($Mg^{2+}$, electrons in orbital , 2,8) is harder.

### CHEMISTRY 11

(A ) $CaCO_3 + 2HCl \rightarrow CaCl_2 + H_2O + CO_2$

Number of moles of HCl added , n= cv = 0.50 x0.10= 0.05 Excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH ; $NaOH + HCl \rightarrow NaCl + H_2O$

Number moles of NaOH , n= cv; n= 0.50x 0.022= 0.011mol ; Excess HCl in the mixture= 0.011mol

Moles of HCl reacted with $CaCO_3$ = 0.05- 0.011 = 0.039

Moles of $CaCO_3$ = 0.039 /2 ( stochiometric ratio 1:2)

Mass of $CaCO_3$ = n x Mm = 0.0195 x 100= 1.95 g

Mass percent of $CaCO_3$ = (1.95 x100)/2= 98%.

### CHEMISTRY IB Organic

(i) $E_2$ reaction predominate when a tertiary halide is heated with a strong base.

(ii) (a) 2-chlorobutane (b) 2-methyl butane (c) 3-chloro – 1- iodo pentane (d) 1-chloro-2-methyl propane

### BIOLOGY IB

(i) Roles of eukaryotic DNA polymerases…

Primer synthesis, repair, mitochondrial DNA replication, leading & lagging strand synthesis, Gap filling on lagging strand.

(ii) Glucose can be obtained…

Muscle glycogen converted directly to glucose -1-phosphate by glycogen phosphates, which does not consume energy. But the liver glycogen converted into glucose. Therefore, one fewer ATP will be produced when liver glycogen undergoes ATP production.

### PHYSICS 11

Car A will collide with car B

### PHYSICS 12

bomber plane...(ans 30 ° to the horizontal)

### ADVANCED FUNCTIONS 12

(i) leading coefficient =1

(b) $f(x) = a(x-1)(x-2)(x-3)^2$

Plug the values $f(x)$ =20 and x = 4, and then find the value "a " and write the equation

(ii) $x^4 + 9 \leq 6x^2$ ;

$(x^2 - 3)^2 \leq 0$ ; $x = \mp\sqrt{3}$

*Answer key 13-13 - next issue*

Contact: 647 341 3975
A.Sri Krishnaraj PhD
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# ஆச்சிக்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

நண்பா!

அந்தோனிக்கும் வீட்டில் வசதிக் குறைவு. தனது சிறிய தாயார் வீட்டில் ஆச்சிக் குட்டியைக் கொண்டு போய் குடியேற்றினார். ஆச்சிக்குட்டி வீட்டார் தமது வீட்டைக் கழுவி ஐயரைக் கூப்பிட்டு துடக்கு கழித்தனர். அந்தக்காலத்து ஆத்திரம் இப்படிச் செய்ய வைத்த பல நிகழ்ச்சிகளை நீ அறிந்திருக்கலாம். ஒரு தீட்டும் ஒரு முழுக்கும் என்று சொல்லியபடி வீட்டில் எல்லோரும் தலையில் தண்ணீர் ஊற்றுவார்கள். சாணித்தண்ணீரோ, மஞ்சள் தண்ணீரோ தெளித்து சாம்பிராணிப்புகைபோட்டு வீட்டைப் புனிதப்படுத்துவார்கள். இன்றைய தென்இந்தியத் திரைப்படங்களில் குலம் விட்டுக் குலம் மாறியோ அல்லது சாதிமாறியோ காதல் செய்பவர்களுக்கு கத்தி தீட்டிக் காட்டியோ, எடடா அருவாளை என்று கத்திச் சன்னதமாடுபவர்கள் போல் இல்லாமல் கழிப்புக் கழித்துவிடும் பழக்கம் நம்ம ஊரில் இருந்திருக்கிறது. நிற்க

அந்தோனியும் ஆச்சிக்குட்டியும் கல்யாணம் செய்யாமலேயே கணவன் மனைவி ஆகி விட்டார்கள். காசு இல்லாமையாலும், கல்யாண வீடாய் கொண்டாட்டம் வைத்தால் களேபாரமாய் முடிந்து விடும் என்ற பயத்தினாலும் இப்படி நடந்ததாம். ஆச்சிக்குட்டி தன்னில் வைத்திருந்த பற்றும் பாசமும் அந்தோனியை பெருமகிழ்வில் ஆழ்த்தியது. உயிருக்கு உயிராய் அவளைப் பேணி வாழ்ந்தார். விதி இவர்கள் வாழ்க்கையில் சதி செய்து விட்டது. ஒரு நாள் இரவு ஆச்சிக்குட்டிக்கு மூக்காலும் வாயாலும் இரத்தம் கக்கி இறந்து போனாள். திடீர் அதிர்ச்சியில் அந்தோனி மனமுடைந்து போனார். ஆச்சிக்குட்டியின் சாவுக்கு அவளுடைய வீட்டுக்காரர் சூனியம் செய்தார்கள் என்றும் ஒரு செய்தி. ஆச்சிக்குட்டிக்கு மாரடைப்பு என்றும் ஒரு கதை. பாவம் அந்தோனி பயித்தியக்காரனாகி வீடு வீடாய் பிச்சை எடுக்கத் தொடங்கினார். வயது முதிர முதிர கைகால்கள் வீங்கி அதிக தூரம் நடக்க முடியாத முடக்கு வாதக் காரனானார். உட்கார்ந்த நிலையிலேயே தன் காதலியை நினைத்தும் தனது தனிமைத் துன்பத்தை எண்ணியும் வாய் பிசத்த தொடங்கினார். தன்னைத் தானே திட்டியபடி தனக்குத் தானே தலையிலும் மார்பிலும் அடிபோட்டுக்கொள்வார். அவருடைய திட்டுவாசகங்களில் ஒருவாசகம் மட்டுமே பிற்காலத்தில் தொடர்வாசகமாய் அவர் வாயால் புறப்பட்டது. அதுதான் 'ஆச்சிக்குட்டிக்கு வாச்ச மாப்பிள்ளை போடா தூ' என்பது.

உலகம் பலவிதம் உறவுகள் சிலவிதம்

நண்பா!

நாய்க்குட்டி விசரி பற்றியும் அந்தோனிக் கிழவன் பற்றியும் கேள்விப்பட்ட கதைகள் இன்னும் பல உண்டு. பகிரங்கமாய் எழுத முடியாது. இலக்கணத்தில் இடக்கரடக்கல் உண்டல்லவா? இதை யார் இப்போது கவனிக்கிறார்கள் என்று யோசிக்கிறாயா? நாம் கவனிப்போம். தனியே காணும் போது கதைத்துக் கொள்ளுவோம்.

வேறு என்ன?
பிற பின்பு

# சார்பியல்...

25ஆம் பக்கத்தொடர்ச்சி


வேக வளர்ச்சியை ஈர்ப்புவிசைதான் கொடுக்கின்றது என நியூட்டனின் தனது இரண்டாவது இயக்க விதியின் துணை கொண்டு காட்டியிருந்தார். ஆனால் இயற்கையின் நடத்தையை அறிந்து கொள்வதில் அதிக விருப்பமுடையவரான அயன்ஸ்ரைனுக்கு சிறப்புச் சார்புத் தத்துவமும் நியூட்டனின் ஈர்ப்புவிதியும் இணைந்த ஒன்று இருக்க வேண்டும் என்ற எண்ணம் பெரியதாக உறுத்திக் கொண்டு இருந்தது. மூலகாரணமாக, புதனின் தாறுமாறான இயக்கம் அயன்ஸ்ரைனை ஈர்ப்பு விதியுடன் குழப்பிக் கொண்டு இருந்தது. இப்படியாக இருக்கையில், ஒருநாள் சுவிஸ் நாட்டின் காப்புரிமை வழங்கும் அலுவலகத்தில், தனது வேலை நேரத்தில் ஓய்வாக இருக்கையில் அவருக்கு ஒரு எண்ணம் வந்தது. கார-ியாலயத்தில் ஒரு இரண்டாம் நிலை ஆய்வாளராக இருந்த அவருக்கு ஓய்வு நேரங்கள் அதிகம் கிடைப்பதுண்டு.

அது மாத்திரமல்லாது அதுதான் அவருக்கு பல சிந்தனைப் பரிசோதனைகளைச் செய்வதற்கு உதவியாகவும் இருந்தது. தனது அறையின் யன்னலினூடகப் பார்த்துக்கொண்டு இருந்த அயன்ஸ்ரைனுக்கு, வெளியிலே நண்பர் ஒருவர் மாடியில் இருந்து விழுந்தால் எப்படியிருக்கும் என்ற எண்ணம் எழுந்தது. இதுவே அயன்ஸ்ரைனின் வாழ்நாளின் மிக மகிழ்ச்சியான சிந்தனையாகும். சரி, எங்களது நண்பர் மாடியில் இருந்து விழுவதை யன்னலின் ஊடாகப் பார்த்தால் எங்களுக்கு எப்படி இருக்கும்? சிந்தியுங்கள், அயன்ஸ்ரைன் எப்படிச் சிந்தித்தார் என்பதனை அடுத்த தடவையில் பார்ப்போம்.

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








### 100% Guaranteed Result

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

- கைரேகை
- கல்வி, உத்தியோகம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- குடும்ப பிரச்சினைகள்
- குழந்தை பாக்கியம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- கர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- தொழில் வியாபாரம்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- சர்ப்ப தோஷம்
- கஸ்ட நஷ்டங்கள்

**Tel.:647.856.0559**

**GTA Square Mall (2nd Floor)**
**5215 Finch Ave. E., Unit #257**
**Scarborough ON M1S 0C2**
**(FINCH & MIDDLEFIELD)**

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND®
Niru BRAND
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
Niru BRAND
FALUDA
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

'ஆர் மச்சான் உது?'

'என்ன நீ வரேக்கை வாசலிலை போட் பாக்கேல்லையே?' சிவாவின்ரை கேள்விக்கு எதிர்க் கேள்வி கேட்டான் ஆனந்தன்.

'நான் உதுகளை எங்கை பார்த்தேன், சொல்லடா, ஆர் உது?'

'என்னடா! ஒண்டரை வருசமாய் எங்கடை பேஸ்மன்ரிலை இருக்குது ஆள். மனிசனை உனக்குத் தெரியாதே!' ஆச்சரியமாய்க் கேட்ட ஆனந்தன் பதிலையும் தானே கூறினான்.

'ஓ நீ மாக்கத்துக்குப் போனாப் பிறகு இந்தப் பக்கம் வாறேல்லைத் தானே. அதுதான் உனக்குத் தெரியேல்லை. உவர் இந்தியாவிலையே நல்ல பேமசான சாத்திரியார்.' அங்குமிங்கும் பார்த்தவன் மெதுவாகக் கூறினான், 'ஆக்களின்ரை முகத்தைப் பாத்ததுமே எல்லாத்தையும் சொல்லுமாம். எனக்குத் தெரியாது வாறவை, சொல்லினம். ஒரு கொள்ளை சனம் வந்து வந்து போகினம்.'

'எங்கையடா ஆளைப் பிடிச்சனி?'

'பிடிச்சனியோ? உப்பிடித்தான் நான்தான் இந்தியாவிலை இருந்து ஆரையோ கூப்பிட்டு சாத்திரம் பாப்பிக்கிறேன் எண்டு ஊரிலை எல்லாரும் கதை. உனக்குத் தெரியும்தானே என்னைப் பற்றி! எனக்கு உதுகள் ஒண்டிலையும் நம்பிக்கையில்லை. ஒருநாள் ஆள் வந்து என்னைக் கேட்டார், தான் இந்தியாவிலையிருந்து 6 மாச விசாவிலை வந்திருக்கிறேன் எண்டு, தனக்குச் சாத்திரம் பாக்க ஒரு இடம் வேணுமெண்டு. என்ரை பேஸ்மன் பிரியாய் கிடக்குதெண்டு ஆரோ சொன்னவையாம். தாறியளோ எண்டு நேரை வந்து கேட்டுது. நானும் பாத்தேன், பேஸ்மன்ரும் சும்மாதானே கிடக்குது, பிராக்குமாய் இருக்கும், காசுமாகுது எண்டு குடுத்திட்டேன்.' ஆனந்தன் கூற,

'என்னடா நீ, முன்பின் தெரியாத ஆளுக்கு எப்பிடிக் குடுப்பாய்? பிறகு ஏதேன் வில்லங்கம் கில்லங்கம் வந்திட்டுது எண்டால்,.. என்ன செய்யிறது? ஆளும் சாத்திரகாரனெண்டும் சொல்லுறாய்' சிவாவின் குரலில் ஒருவித உரிமை தெரிந்தது.

'இஞ்சை என்ன வில்லங்கம் வாறது? எல்லாம் சட்டப்படிதான் இருக்குது. எக்கிரிமென் இருக்குது' என்ற ஆனந்தன் 'ஆள் வந்தும் ஒண்டரை ரண்டு வருமாகியது. ஒரு பிரச்சனையும் இல்லை. மாசத் தொடக்கத்திலையே றென்ரை டண் எண்டு ஆள் தருகுது. பிறகென்ன எனக்கு'

'எவ்வளவு வாடகை?'

'அங்கினை பிரச்சனை இல்லாத அளவுக்கு ஆள் தருது. ஆளிட்டை கனக்க ஆக்கள் வருகினமெண்டிட்டு நானும் கனக்கக் கேக்கிறேல்லை. ஏதோ மனச் சாட்சிப்படி ஆள் தருகுது' ஆனந்தனுக்கு சொல்ல விருப்பமில்லை என்பது சிவாவுக்குத் விளங்கியது.

'ஆள் எப்படி'

'ஆனா ஒண்டு,'சோக்கான ஆள். தானுன்டு தன்பாடுண்டு எண்டுதான் இருக்கும். மேலை வாறது குறைவு ஏதேனும் தேவை எண்டால்தான் ஆளை வெளியிலை காணலாம். அப்பிடி வந்தாலும் ஒருத்தரோடையும் ஆள் கதைக்காது. இப்பவும் படத்துக்குச் சாம்பிராணி தேவை எண்டு தான் ஆள் மேலை வந்தது. ஆனால் ஆச்சரியம் என்னெண்டால் உன்னோடை இப்பிடிக் கதைச்சதுதான். நானறிய ஒருத்தரோடையும் இப்பிடிக் கதைக்கேல்லை. நானும் கேட்டுக் கொண்டுதானே இருந்தனான்.' ஆனந்தனுக்கு நேரம் இருந்தது. மத்தியானத்திலை சனம் வராது என்று தெரிந்துதான் சிவா வந்தவன்.

'சரி சிவா, உனக்கேதும் பிரச்சனையே! ஆள் சும்மா அதுவும் இப்பிடி வந்து சொல்லாது.' 'இல்லையடா, எனக்கொண்டும் பிரச்சனை இல்லை. ஒரு தலையிடிதான் விட்டு விட்டு வந்து சரியாய் கஸ்டப்படுத்துது.' தனது சிக்கல்களை ஆனந்தனுக்கு சொல்ல சிவா விரும்பவில்லை.

'மச்சான் சிவா, எனக்குத் தெரியும், ஆள் சும்மா சொல்லாது. உப்பிடித்தான் எனக்கும் ஒருநாள் ஆள் சொன்னது, தம்பி இந்தக் கடையிலை சாமான்கள் அடுக்கி வைச்சிருக்கிற முறை சரியில்லை. பெரியவள் மெல்ல மெல்லக் குடிகொண்டு விட்டாள். நான் சொல்லுறமாதிரி அடுக்கி வையும். பெரியவளுக்கு ஒரு பரிகாரம் செய்து தாறேன். அதையும் லாச்சியிலை வையும் அதுக்குப் பிறகு பாரும் எண்டவர், முறைகளையும் சொன்னார். உனக்குத் தெரியும்தானே, எனக்கு உதுகளிலை ஒண்டும் நம்பிக்கையில்லை. எண்டாலும் மனிசன் சொல்லுதே எண்டுபோட்டு அதுமாதிரி சாமான்களை அடுக்கி வைச்சேன். ஒரு சின்ன மந்திரிச்ச வெள்ளித் தட்டும் தந்தவர், லாச்சிக்கை வைக்கச் சொல்லி. இப்பவும் வைச்சிருக்கிறேன் பார்' என்ற ஆனந்தன் கல்லாப் பெட்டிக்கு கீழே இருந்த சிறிய லாச்சியைத் திறந்து காட்டினான்.

சிவா எட்டிப் பார்த்தான். ஒரு சின்னத் தட்டில் வட்டங்கள், சதுரங்கள் முக்கோணங்கள் வரையப்பட்டு ஏதேதோ எழுத்துக்களும் இருந்தன. தட்டில் குங்குமம் பொட்டும் இருந்தது. ஒரு பக்கத்தில் திருநீறும் இருந்தது.

'உனக்கெண்டபடியாலை காட்டுறேன்' என்ற ஆனந்தனைக் கேட்டான் சிவா

'என்ன வேலை செய்யுதோ'

'திறமாய் வேலை செய்யுது. சொன்னா நம்பமாட்டாய். ஒருக்கா பாங்றப்சியிக்குப் போக இருந்தனான். இது வந்தாப்பிறகு கடனெல்லாம் அழிச்சு, வியாபாரமும் நல்லாய் நடக்குது. இப்பவெல்லோ சனமில்லை. ஒரு ரண்டு மணிக்குப் பிறகு வந்தால் என்னோடை கதைக்க மாட்டாய். அவ்வளவுக்கு சனங்கள் வருகுது. நான் சொல்லுவேன், எல்லாம் இந்தத் தட்டின்ரை சக்திதான்.'

'சரி எவ்வளவு காசு குடுத்தனி'

'என்னட்டை ஒருசதமும் வாங்கேல்லை. வாறவையும் எனக்குக் காசுக் கணக்கு வழக்குகள் சொல்லுறதுமில்லை. நானும் கேக்கிறேல்லை.'

'ம், ஆளிட்டை விசயம் இருக்குது போலை'

'விசயமிருக்குதோ இல்லையோ, போய் ஒருக்காப் பாரேன். பாக்கிறது ஆள் காசு கேக்க மாட்டார். இருந்தால் ஒரு இருவது அல்லாட்டி இருவத்தியஞ்சைக் குடுத்திட்டு வரலாம். அதுவும் போறவயிளின்ரை விருப்பம். அவ்வளவுதான்' ஆனந்தன் கூறினான்.

சிவா யோசித்துக் கொண்டு நின்றான். என்ன போகவா இல்லை.

'முந்தி ஆள் தனியத்தான் வந்தவர். முதல்தரம் விசா முடிஞ்சதும் இந்தியாவுக்குப் போய்யிட்டு வரேக்கை பெஞ்சாதியையும் ஆள் கூட்டி வந்திட்டார். காலமை பத்து மணிக்கு வந்தினமெண்டால் இரவு ஒரு எட்டு, ஒம்பது மணி மட்டும் நிண்டிட்டு பிறகு தங்கடை அப்பாட்மென்டுக்குப் போயிடுவினம்.' என்று மேலதிகமான தகவலையும் தந்த ஆனந்தன் 'நானென்டால் ஒருக்காப் போய்ப் பாத்திட்டு வா எண்டுதான் சொல்லுவேன். மற்றவைக் கெண்டால் ஒண்டும் சொல்ல மாட்டேன் உனக்கெண்டபடியாலைதான் சொல்லுறேன்.'

\- இன்னமும் வரும்

◊ கனி ◊


**Sitham Sam Shanmugam** (Sales Rep)

**HomeLife/GTA Realty Inc.**

Cell - 647.525.7820

Office Scarborough - 416.321.6969

24 hrs.

•Independently owned and operated

**DAISY MART**

Family Business in New Plaza At Tim Horton's North of New Market With 6/49 Loto

**COUNTRY HOME**

HWY 404 / EXTENSION

At Mccowan Brick Bungalow. 10 Acre. Senior Home. Invesment.

**New Brick Bungalow with bsmt apartment. 5 Acre. HWY 48 For Retirement**

**Scarborough Big lot's Investment**

உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.

Rent will pay the mortgage.

Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

10 Acres in Holland lundry property with income. Good for seniors. Home, hobby, Farm.

**MERVIS & HWY 401**

2 Story detached home for sale. Very demand area.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

www.vlambaram.com

www.tamilvanakkam.com

நகைச்சுவைத் தொடர் 269


# ராசம்மா ராச்சியம்



ஆட்டிலறி அன்னம்மா தினமும் தராசில் தனது நிறையை நிறுத்து பார்த்துக்கொண்டா. வெயில் வந்ததால் ஆப்பிட்ட திசையெல்லாம் விழாக்களும் திருவிழாக்களும். உலகர் குழாம் உலாவந்ததால் நிறை குறையத் தொடங்கிவிட்டது. குளிர் வரமுதல் மேலும் பல திருவிழாக்கள் விழாக்கள்….. இன்னும் எத்தனை குளிர் வெயிலைத் தாங்கப்போறமோ?...என செக்கண்ட் புளொர் செல்லம்மா நீண்ட பெருமூச்சு விட்டா.



இப்படி மழையடித்தால் எப்படி குடைபிடிப்பேன். இற்ஸ் வெரி பாட்..என்றபடி வந்தா ரூபி. அரிச்சந்திர மயானகாண்டத்தில் இறுதிக்காட்சியில் வரும் சந்திரமதி போல சந்திரமுகியில் ரா..ரா.. உச்சக்கட்ட ஜோதிகா போல வீராவேசமாக வந்த ரூபியைப் பார்த்து ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட் புளோா செல்லம்மாவும் மனதுள் சிரித்துக் கொண்டனர்.






தனது இத்தாலி நண்பியின் பிறந்தநாளுக்குப்போவதற்காக உலகர் வீட்டில் வாங்கிவைத்த பழங்கள் காய்கறிச்சாமான்களை வெட்டி முகத்தில் அப்பி.. பூசி அழகுபடுத்திய முகம் ரொரன்ரோவில் சொப்பிங் செய்யப்போய் மழை வெள்ளத்தில் அகப்பட்டது பெரிய கதை. அதுவும் நவீன உடை மழையில் நனைந்து ரூபனிடம் பேச்சு வாங்கியது ஒருபுறம். பேசியல் கோலம் மாறி அலங்கோலமாய் வந்தது. அதுவும் ஆட்டிலறி அன்னம்மா, செக்கண்ட்புளோர் செல்லம்மா அந்தக்கோலத்தைக்கண்டது இன்னும் ஆத்திரமாக இருந்தது.




அமெரிக்கத் தமிழ் சங்கமும் கனேடியத் தமிழ்ச் சமூகமும் இணைந்து நடத்திய முத்தமிழ் விழா ரொரன்ரோவில் நடந்து முடிந்துள்ளது. உலகர் மூன்று நாளும் பல்சுவை நிகழ்ச்சிகளை நன்றாக ரசித்தார். இயல்…இசை... நாடகம்..எங்கும் தமிழ் மணம். பலவிதமான கலை நிகழ்ச்சிகள். ஒரு தமிழ் திருவிழா…..தேமதுரத்தமிழோசை உலகெல்லாம் பரவிக்கொண்டேயிருக்கிறது.



நான் அசைந்தால் அசையும் உலகமெல்லாமே. அறிவாய் மனிதா உன் ஆணவம் பெரிதா




எங்கோ கேட்டது யாரோ சொன்னது...எங்கோ..படித்தது உலகர் மனதில் நடுச்சமுத்திரத்தில் எழும் அலைபோல உலகர் மனதில் எழுந்து விழுந்தது கடல் மாதா பூமாதேவி வாயுபகவான் என பலவாறு நாம் அவ்வப்போது பூசைசெய்து வணங்கி வந்தாலும் இயற்கை சீற்றம் கொண்டால் யாராலும் தடுக்கவோ... தாங்கவோ முடியாது ஆங்கிலத்திலும் அதனை மதர் நேச்சர் என்று சொல்லுகிறார்கள் (mother nature).



உலகை எப்படியெல்லாம் தன் கட்டுப்பாட்டில்..வைத்திருக்கத்…துடிக்கும் இயற்கையை கட்டுப்படுத்த முடியவில்லை …நான் அசைந்தால் அசையும் உலகமெல்லாமே அறிவாய் மனிதா உன் ஆணவம் பெரிதா…. பாடல் உலகர் மனதில் ஒலித்தது….சர்வதேசமெல்லாம் பாரபட்சமின்றி..காற்று மழை புயல் பூகம்பம்….விமான விபத்துக்கள் ரெயின்.. தடம்புரள்வு சில கிராமங்களே இருந்த இடம் தெரியவில்லை..உலகர்வீட்டில் சிலமணிநேரம் கறன்ட்....இல்லை சீரியல் பார்க்கமுடியவில்லையே என செக்கண்ட்புளோர் செல்லம்மா கொழுத்திய மெழுகுதிரிமுன் அசோகவனச்..சீதைபோலிருந்தா







உலகம் பிறந்தது எனக்காக ஓடும் நதிகளும் எனக்காக….
ஆறுகளும் நதிகளும் கரை தாண்டினால்?
ஞாபகம் வருதே….ஞாபகம் வருதே!

## யூலை 16 - 30

16. ஆடிப்பிறப்பு (ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே.. - நவாலியூர் சோமசுந்தரப்புலவர்)
16. இன்றும் காற்றினிலே வரும் கீதம் இசைத்திலகம் டி.கே.பட்டம்மாள் நினைவுதினம். (பிற-1919 – மறைவு 2009)
18. இத்தாலி றோம் நகரில் வர்த்தக மையத்தில் பெரும் தீ .அப்போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக்கொண்டிருந்தான்.



19. சுவாமி விபுலானந்தர் நினைவு தினம் (1947)
20. அன்னை சாரதா தேவி நினைவு தினம். (சுவாமி ராமகிருஸ்னரின் மனைவி) (பிற-1853- மறைவு 1920) உனக்கு மன அமைதி வேண்டுமாயின் யாருடைய குறையையும் காணாதே உன் குறைகளையே பார்
21. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நினைவு தினம் (பிற-1927----மறைவு 2001)
23. சுப்பிரமணிய சிவா இந்திய விடுதலைப்போராட்ட வீரர் (பிற -1884 – மறைவு-1925)



26. ஈழத்து கலையரசு சொர்ணலிங்கம் நினைவு தினம்
27. தங்கத்தாத்தா. சோமசுந்தரப்புலவர் நினைவுதினம்
30. வாக்கிய பஞ்சாங்க கணிதர் இரகுநாதையர் (1969) நினைவுதினம்

கறுப்பு யூலை (1983) இனக்கலவரம்

ஆகஸ்ட் 06. ஆடி அமாவாசை (தந்தையொடு கல்விபோம் தாயொடு அறுசுவைபோம்) உங்களைச் சுற்றியுள்ள பல கோவில்களில் கொடியேற்றம் திருவிழா தேர் தீர்த்தம் பூங்காவனம் ஆலய தரிசனம் செய்யலாமே.

# தெய்வீகம்...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்தத் தெய்வீகம் இருப்பதனால் தான் எல்லோரும் உயிருடன் சுவாசித்துக் கொண்டும் இருக்கின்றார்கள் என அவர் கூறுகின்றார். உயிருடன் இருப்பதன் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொண்டிருக்கின்றீர்களா? என மகராஜி

**Words of Peace**

மகராஜி பற்றி மேலும் அறிந்து கொள்ள:
416.431.5000
www.wopg.org / www.tprf.org

கேட்கின்றார். உள்ளே வந்து போய்க் கொண்டிருக்கும் இந்த மூச்சு தெய்வீகத்தின் அனுசரணையினால் தான் நடைபெறுகின்றது. இருந்தும் நாம் ஒவ்வொரு நாளும் நடைபெறுவனவற்றினால் தான் வசீகரிக்கப்படு கின்றோம். எனக்கு தொலைபேசியில் 76 செய்திகள் வந்துள்ளன. மக்கள் தொலைபேசியில் அழைக்கின்றார்கள். அது அதிக மக்களைச் சந்தோசப்படுத்துகின்றது. தொலைபேசியில் ஒரு செய்தியும் வராவிட்டால் ஏன் ஒருவரும் எனக்குச் செய்தி அனுப்பவில்லை என்று எண்ணுகின்றார்கள்.

'தெய்வீகம் உங்களை அழைக்கின்றது. உங்களுக்குப் பரிசொன்றைத் தந்துள்ளது. நீங்கள் அதை ஏற்றுக் கொண்டுள்ளீர்களா? உங்கள் உயிர் வாழ்வின் அதி உன்னதமான அற்புதம்'.

தெய்வீகம் உள்ளே இருப்பதை அறிந்து கொண்டால், நாம் எதுவோ அதுவாக இருப்பதன் அழகை புரிந்துகொள்ளத் தொடங்குவோம் என மகராஜி கூறுகின்றார். எப்பொழுது மக்கள் தம்முள்ளே உள்ள அமைதியில் காலடி எடுத்து வைக்கின்றார் களோ அப்போது அவர்கள் அந்த அமைதியை உணரத் தொடங்குகின்றார்கள். தற்காலிக அமைதியை அல்ல. நிரந்தரமான அமைதியை. அதைக் கண்டு கொள்வதற்கு அவரால் உதவிசெய்ய முடியும். 'நான் இதைப் பற்றிப் பேசுவதுடன் நின்றுவிட வில்லை' பேசுவது மட்டுமல்ல எனது தலையாய நோக்கம். நான் பேசுவதை மக்கள் அனுபவிக்க வைப்பதுதான் எனது நோக்கம் என அவர் கூறுகின்றார். உங்கள் உடம்பில் உள்ள ஒவ்வொரு அணுவும் நன்றியுணர்வை வெளிப்படுத்த விரும்பு கின்றது. இந்த நன்றியறிதல் ஒரு நூலுக்கான தோ, ஒரு எண்ணக் கருத்துக்கானதோ, நினைவுக்கானதோ, ஒரு மனிதனுக்கானதோ அல்ல. தெய்வீகத்திற் கான நன்றியுணர்வு. அதனால் தான் தெய்வீகத்தை நான் தெய்வீகம் என்கின்றேன். ஏன் என்றால் இந்த உலகில் இருந்த மனிதனின் எல்லாத் தேடுதலையும், உணர்வதையும், அதை அறிந்து கொள்வதையும், அதைப் புரிந்து கொள்வதையும் இது நிறைவு செய்கின்றது.

# நினைவுகள்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

மணிவண்ணனை, பாரதிராஜாவின் பதில் மேலும் உடல்நலம் குன்றச் செய்தது. 'ஆனந்த விகடன்' வெளியான அடுத்த நாள் மாரடைப்பு ஏற்பட்டு மணிவண்ணன் காலமானார். தனது குருநாதருக்கு மணிவண்ணன் செலுத்திவிட்டு சென்றிருக்கும் காணிக்கை அவரைப் போலவே தானும் பல நல்ல சிஷ்யர்களை உருவாக்கியிருப்பது தான். சுந்தர். சி., ஆர்.கே. செல்வமணி, சீமான், செல்வபாரதி, சி.வி. சசிகுமார், ஈ. ராமதாஸ், விக்ரமன், ஜீவபாலன் என்று இந்த பட்டியல் மிக நீண்டது.

மணிவண்ணனின் அரசியல் வாழ்க்கை, ஈழ



ஆதரவு செயல்பாடுகள் - அடுத்த இதழில்...



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்


வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# சுற்றுலாப்பயணிகளின் சொர்க்கம்
# ஹவாய் தீவுகள் - 7

கடந்த கட்டுரையில் பெருந்தீவில் கரிய கடற்கரையைப் பார்த்த பின் பிரயாணத்தைத் தொடர்ந்தோம் என எழுதியயிருந்தேன். வழியிலிருந்த உணவகத்துக்கு முன்னரே 60 பேருக்கான உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது பற்றியும் எழுதியிருந்தேன். ஏறக்குறைய ஒரு மணியளவில் அவ்வுணவகத்தைச் சென்றடைந்தோம். அங்கு ஏற்கனவே பெருக்கூட்டமிருந்தது. யாவரும் சுற்றுலாப் பயணிகள். அங்குள்ள ஊழியர் யாவரும் பம்பரம் போல் சுழன்று வேலை செய்து கொண்டிருந்தனர். எம்மவர்களுக்கு உணவு வழங்கத் தாமதம் ஏற்பட்டதெனினும் விரைவாக வழங்கப்பட்டது. எமது பயணிகள் சிலர் தாம் கேட்டுக்கொண்ட உணவு மாறிவிட்டதெனக் குறை கூறினர். ஆனால் அவர்கள் கேட்டுக் கொண்ட உணவின் பட்டியல் என்னிடமிருந்ததால் அதனைக் காட்டிச் சமாளிக்கக் கூடியதாய் இருந்தது. உணவை முடித்துக்கொண்டு எமது பஸ்ஸில் மீண்டும் பிரயாணத்தைத் தொடர்ந்தோம்.



மூன்று மணியளவில் அங்குள்ள எரிமலைத் தேசிய பூங்காவுக்குச் சென்றோம். இது 1916 இல் நிறுவப்பட்டது. இப்பூங்காவில் இரு உயிர்ப்பான எரிமலைகள் உள்ளன. அவை கிலோமியா என்ற அதிகம் இயங்கும் எரிமலையும், மோனாலோவா என்ற உலகின் மிகப் பெரிய எரிமலையுமாகும். இவற்றின் செயற்பாடுகளைக் கவனிக்கும் ஆய்வாளர்கள், ஹவாய் தீவுகள் எவ்வாறு ஆரம்பித்தன என்றும் எரிமலைகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைப் பற்றியும் நன்கு அறிந்து கொள்கிறார்கள். இப்பூங்காவில் அரிய விலங்கினங்களையும் தாவரங்களையும் இங்கு காணலாம். இப்பூங்கா உலகின் பாரம்பரிய இடமாக 1987 இல் பிரகடனப்பட்டது. இப் பூங்காவின் பரப்பளவு 323,431 ஏக்கர்களாகும். இது கடற்கரையிலிருந்து ஆரம்பித்து 13,677 அடி உயரமுள்ள மோனாலோவா எரிமலை வரை பரந்துள்ளது. இங்கு பச்சைபசேலென்றுள்ள மழை கூடிய காலநிலைப் பகுதியையும் மிகவும் வரண்ட பாலைவனப் பிரதேசத்தையும் கொண்டுள்ளது.

நாங்கள் இங்கேயுள்ள தொமஸ் ஜாகர் அருங்காட்சியகத்துக்குச் சென்றோம். இதற்கருகிலேயே ஹவாய் எரிமலை பார்வைக் கூடமும் அமைந்துள்ளது. இதன் முதலாவது நிர்வாகியான தொமஸ் ஜாகரின் நினைவாக அருங்காட்சியகம் அவரின் பெயரைக் கொண்டுள்ளது. அருங்காட்சியகத்திலிருந்து தூரத்திலே உயிர்ப்பான 'ஹலிமா உமர்' என்ற எரிமலையைக் பார்க்கக் கூடியதாய் இருந்தது. அதன் உச்சியிலிருந்து புகைவந்து கொண்டிருந்தது. சில பகுதிகள் மிகவும் கரிய நிறமுள்ள கற்கள், பாறைகளைக் கொண்டிருந்தன. மிகவும் ஆழமான ஒரு பள்ளமாக அப் பிரதேசம் காட்சியளித்தது.

அருங்காட்சியகத்துக்குள் பல்வேறு வரைபடங்கள், பெரிய ஒளிப்படங்கள், குறும்படங்கள் மூலம் எரிமலை எவ்வாறு தோன்றுகின்றது, எவ்வாறு தீக்குழம்பு வெளியே வருகிறது என்பவை மிகவும் துல்லியமாகக் காட்டப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டது. ஒளிப்படங்களை விளக்கச் சில பணியாளர்களும் அங்கிருந்தனர். மேலும் எரிமலை எப்போது தீக்குழம்பை வெளியே தள்ளியது. இதனால் இறந்தோர், பாதிக்கப்பட்டோர், அழிந்து போன இடங்கள் போன்ற தகவல்களும் அங்கே தரப்பட்டிருந்தன. உண்மையாகவே எரிமலை தீப்பிழம்பை வெளித்தள்ளுவது போன்று தத்தருபமாகச் சில காட்சிப் பொருள்கள் அமைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் அங்கு பஸ்வண்டிகளில் வந்து போவதைக் காணக் கூடியதாய் இருந்தது.

அங்கு ஒரு பகுதியில் புத்தக விற்பனை நிலையமும் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு எரிமலைகள் பற்றியும் ஹவாய் தீவுகள் பற்றியும் விபரங்களும் அழகான படங்களுமுள்ள நல்ல நூல்களைக் காணக்கூடியதாய் இருந்தது. இத்துடன் நினைவுச் சின்னங்கள் படத் தபால் அட்டைகள், கொடிகள், ஒளிப்படங்கள் எனப்பலவும் அங்கு விற்பனைக்கிருந்தன. இதற்கருகே ஒரு சிற்றுண்டிச்சாலையும் அமைந்திருந்தது. இங்கே ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்துக்கு மேல் செலவழித்த பின்னர் எமது பயணத்தைத் தொடர்ந்தோம். போகும் வழியில் வானவில் நீர்வீழ்ச்சியையும் காணக்கூடியதாய் இருந்தது.

பின்னர் ஹிலோ நகரத்துக்கூடாகச் சென்றோம். பஸ்ஸில் இருந்தபடியே பல முக்கியமான தெருக்களுக்கூடாகச் சென்றோம். அங்கிருந்த கமகமெகா மன்னனின் உருவச் சிலையையும் பார்த்தோம். வழியிலுள்ள முக்கிய இடங்களைப் பற்றி பஸ்சாரதி விளக்கங் கூறிக் கொண்டே வந்தார். இரு மருங்கிலும் பெரிய விசாலமான ஆலமரங்களைக் கொண்ட தெருவுக்கூடாகப் பயணித்தோம். பல ஆண்டுகளுககு முன் இவற்றை இங்கு வாழ்ந்தோர் நட்டார்கள் என பஸ்சாரதி கூறினார். உண்மையில் இது ஒரு விநோத காட்சியாக அமைந்திருந்தது. ஏறக்குறைய ஐந்தாறு மைல்களுக்கு இத்தெரு நீண்டிருந்தது. இது நகரின் புறநகர் பகுதியைச் சுற்றி வருகிறது. இப்பகுதியில் விலியோக்கலானி என அழைக்கப்படும் பூங்காவுமுள்ளது. இங்கு தென்கிழக்காசிய நாடுகளில் காணப்படும் பல அழகான பூ மரங்களையும், குரோட்டன், மணிவாழை, பல்வேறு பாம் மரங்களையும் காணக்கூடியதாய் இருந்தது. இந்நகரம், வழக்கமான அமெரிக்க நகரங்களைப் போன்று வானளாவிய மாடிக் கட்டிடங்களையும் அழகான வீடுகள், காரியாலங்கள் யாவற்றையும், அகன்ற தெருக்களையும் கொண்டிருந்தது. இங்கு பெரும்பாலும் வந்தேறுகுடிகள் பலரைக் காணக்கூடியதாய் இருந்தது. குறிப்பாக பிலிப்பைன்ஸ், பர்மா, கம்போடியா, சீனா, ஹொங்கொங், ஜப்பான் பிற பசுபிக் தீவுகளைச் சேர்ந்த பழங்குடி மக்கள் அமெரிக்க மக்களோடு சேர்ந்து வாழ்வதைக் காணலாம்.

ஹவாய் தீவுகளின் முக்கிய வருவாய் சுற்றுலாத்துறை என்பது கூறாமலே விளங்கும். இதனால் இங்கு அமெரிக்காவின் அங்காடி நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் யாவும் கிளைகளைக் கொண்டுள்ளன. இவற்றைத் தவிர ஹோட்டல்களும் உல்லாச விடுதிகளும் இங்கு நிறையவே உள்ளன. ஹிலோ நகரம் 46 சதுரமைல் பரப்பளவைக் கொண்டது. இங்கு 2010 ஆண்டுக் கணக்கின்படி 185,079 பேர் வசிக்கிறார்கள். இந்நகரத்தை நிர்வகிப்பதற்கு 9 பேரடங்கிய நகரசபை ஒன்று தேர்தலில் தெரிவு செய்யப்படுகிறது. நிர்வாகத் தலைவராக ஒரு மேயர் (நகரபிதா) ஒவ்வொரு நான்காண்டும் தெரிவு செய்யப்படுகிறார்கள். இத்தீவில் மக்கடமியா பருப்பு, பப்பாசி, கோப்பி, மரக்கறிகள் பல்வேறு பூத்தாவரங்கள் ஆகியன பயிரிடப்படுகின்றன. முன்பு கரும்புச் செய்கை முக்கிய இடத்தை வகித்து வந்தது. பின்னர் போதிய வருவாய் இன்மையால், அது கைவிடப்பட்டது. இதைத் தவிர கோணாப் பிரதேசத்தில் வளர்க்கப்படும் கோப்பி உலகப் பிரசித்தி பெற்றது. மேலும் ஓர்க்கிட் தாவரங்களும் இங்கு பெருமளவில் வளர்க்கப்படுகின்றன. இப்பூக்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இவற்றைத் தவிர இங்கு மந்தைகள் வளர்க்கும் பெரிய



பண்ணைகளும் உள்ளன. அமெரிக்காவின் மிகப் பெரிய பண்ணையான பார்க்கர் பண்ணை வைமியா என்ற இடத்திலுள்ளது. இதன் பரப்பளவு 175,000 ஏக்கர்களாகும்.

இங்கு நாம் பார்த்த வானவில் நீர்வீழ்ச்சி 80 அடி உயரமும் 100 அடி விட்டமும் உடையது. இது தேசிய பூங்காவின் ஒரு பகுதியாகவுள்ளது. வைலுக்கு ஆறு வானவில் நீர்வீழ்ச்சியாக வந்து ஒரு தடாகத்துக்குள் விழுகிறது. இத்தடாகத்தைச் சுற்றிலும் பச்சைப் பசேலென்ற மரங்களும், செடிகளும் அடர்த்தியாகக் காணப்படுகின்றன. இத்தடாகத்தின் நீர் கூட நீலநிறமாகக் காட்சியளிக்கும். இந்நீர் வீழ்ச்சியிலிருந்து கிளம்பும் நீர்ப் புகாரில் வானவில் தோன்றும். இது பெரும்பாலும் காலை 10 மணியளவில் நிகழும்.

இவ்வாறு பல முக்கிய இடங்களைப் பார்த்துக் கொண்டு சாயங்காலம் ஆறு மணியளவில் ஹிலோ விமான நிலையத்தை அடைந்தோம். அங்கிருந்து நாம் தங்கியிருந்த தீவுக்கு விமானமூலம் எட்டு மணியளவில் புறப்பட்டு இரவு 9 மணிக்குச் சென்றோம். (தொடரும்)

**- துறையூரான் -**



ஒட்டாவா தமிழ் கலை தொழில் நுட்ப கல்லூரியின் 11 ஆம் ஆண்டு விழா கார்ல்டன் பல்கலைகழகத்தில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட புலவர் ஈழத்து சிவானந்தன் அவர்களிடம் விருது பெற்ற கல்லூரி ஆசிரியர்களும் அதிபர் இராசதுரை மதியழகன் அவர்களும் காணப்படுகிறார்கள்.

Pre-Approvals | Purchases | Renewals | Refinances | New to Canada



**Subo Thevarajah.,AMP**

MORTGAGES

SUBOSHAN.COM

TD

**416.627.2222**

வீடு வாங்க விற்க



**Printhini Nagaratnam**

Sales Representative

**416.836.3091**

HomeLife/ Future Realty Inc., Brokerage

Bus: 905.201.9977

Fax: 905.201.9229

205-7 Eastvale Drive Markham Ont. L3S 4N8

printhahomes@gmail.com

உங்கள் கனவு இல்லத்தை அடைய அழையுங்கள்

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

**SASI CHELVARATNAM**

*Sales Representative*

Direct: 416.725.1125 / 416.858.4828

Bus : 416.321.6969

*HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*

5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2

"Independently Owned & Operated



"Let me help you make the right choice"

SchurenSriskandarajah B.A

Sales Representative

HomeLife/Future Realty Inc., Brokerage

7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8



SCHUREN.CA • 416.333.9393



Low Mortgage Rates

TD **Canada Trust**

Supen Subramaniyam (Manager, Residential Mortgage)

416-844-8692 1-888-809-9154

supenthiran.subramaniam@td.com

ADVICE WHEREVER WHENEVER

Banking can be this comfortable

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit

Consolitation Existing Debts Refinancing

Switching your mortgage From another financial institute

***Free Real Estate Class -*** Call: ***416.321.6969***

## RealEstate / Mortgage / Commercial Investments



RE/MAX Vision Realty Inc. Brokerage

**A. Anton Jeeva** B.Eng

**416.575.5055**

**Hall Of Fame & Platinum Award Winner**

Office: 416.321.2228

E-mail: anton.jeeva@gmail.com,

Web: newcondoproject.ca & antonjeeva.com

2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6

*Independently owned and operated

*Having difficulty of getting your Mortgage*

*Please Contact me*

"When bank says No We say Yes"

**BRIMORTON & BELLAMY**



Hugue 4 Bedroom Bungalow house for sale. 2 W/R.

Price: $549,900

**MARKHAM & SHEPPARD**



3 Bedroom T. house for sale

3 W/R.

Price: $359,900

**WESTNEY & WILLIAMSON**



4 Bedroom house for sale

4 W/R.

Price: $579,900

**MAIN ST.WEST & VICTORIA**



Retirement home for sale.

Price: 1,599,000

**NEILSON & SEWELLS**



4 Bedroom house for sale. 4 Washroom.

Price: 449,900

**MCCOWAN & 14TH AVE**



4 Bedroom house for sale. 4 Washroom.

Price: 549,900

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

REAL ESTATE *List Buy Sell*

TOP 5%

SALES REPRESENTATIVES IN CANADA

CHAIRMAN'S CLUB AWARD WINNER 2012



HomeLife GTA Realty Inc., Brokerage

Independently Owned and Operated

**Raj Paramasamy** Sales Representative

**416-587-1619**

raj.paramasamy@hotmail.com

Guaranteed Result

## AUTO + HOME = BIG SAVINGS

**Auto Insurance, Business Insurance, Home Insurance, Renter Insurance, Life Insurance**

Office Hours:

Mon - Fri 9:30am to 9:30pm

Saturday 11:00am to 5:30pm

After hours by Appointment

http://www.insureontario.ca

LIKE A GOOD NEIGHBOUR STATE FARM IS THERE

Providing Insurance and Financial Services

State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

Li.chen.m8zn@statefarm.com

1200 Markham Road, Suite#123, Scarborough, ON M1H 3C3

(Corner of Markham & Ellesmere)

**Li Chen,** Agent

**Call: 416.431.6800**




விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

*www.vlambaram.com www.tamilvanakkam.com*


**PRE CONSTRUCTION CONDOS FOR SALE**

**DOWNTOWN & OTHER AREAS**

HARBOUR PLAZA RESIDENCE




AQUALINA



Price Starting From $200k

YONGE &RICH





RE/MAX Vision Realty Inc. Brokerage

**Call For VIP Pricing & Other Incentives**

**A. Anton Jeeva** B.Eng (Real Estate / Principal Mortgage Broker)

**Dir: 416.575.5055**